


புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 ஜூலை 31 - ஆகஸ்ட் 06 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 17






**இரக்கமற்ற கொடுங்கோல் ஆட்சி!**

நாடு முழுமைக்குமான நம் மக்கள், பெருங் கொடுமை, துன்ப, துயரத்தில் வாழ்ந்து வருகின்றனர். நித்தம், நித்தம் உயர்ந்து >>> ப 02





**4 சட்டத் தொகுப்புகள் தற்போதைய நிலை என்ன?**

நான்கு தொழிலாளர் சட்டத்தொகுப்புகளையும் 2022 ஜூலை 1ம் தேதி முதல் இந்தியா முழுமையும் >>> ப 15





**வீழும் ரூபாய் வாழும் டாலர்**

டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் வீழ்ச்சி அளவிடமுடியாத அதாள பாதாளத்திற்கு சென்றுள்ளது. ரஷ்ய உக்ரைன் போர், எரிபொருள் விலையேற்றம், >>> ப 03




## நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம்

# ஜனநாயகத்தின் மீதான பேரிடி!

**நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் இருந்து ஒரு வார காலத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பி.சந்தோஷ்குமார் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளைச் சார்ந்த 19 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.**

நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடர் கடந்த ஜூலை 18 ம் தேதி தொடங்கியது. இதையடுத்து நாடாளு மன்றத்தின் மக்களவை, மாநிலங்களவை அவைகள் கூடின. சபை கூடியவுடன் சமையல் எரிவாயு விலையேற்றம், அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வு, ஜிஎஸ்டி வரிவிதிப்பு உள்ளிட்டவை பற்றி சபையில் விவாதிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

இதற்கு அனுமதி வழங்கப்படாததால் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டன. இரு சபைகளிலும் மையப்பகுதியில் சில உறுப்பினர்கள் வந்து அமளி செய்தனர். இந்நிலையில் சபை நடவடிக்கைக்கு எதிராக செயல்பட்டதாக கூறி மக்களவையில் தமிழகத்தை சேர்ந்த காங்கிரஸ் எம்.பி.க்களான மாணிக்கம் தாகூர், ஜோதிமணி உள்பட 4 பேர் இந்த கூட்டத் தொடர் முழுவதும் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

இதேபோல் மாநிலங்களவையில் தொடர்ந்து எதிர்க்கட்சி எம்பிக்கள் தங்களின் கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர். கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளைப் பயன்படுத்தினர். மேலும் மாநிலங்களவை துணைத் தலைவரின் கோரிக்கையை ஏற்காமல் சில உறுப்பினர்கள் செயல்பட்டதாக புகார்கள் எழுந்தன. இதையடுத்து அவை நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்ததாக கூறி மாநிலங்களவை எம்பிக்கள் 19 பேர் ஒருவார காலத்துக்கு இடைநீக்கம் செய்யப்பட்டனர். கேரள மாநிலத்தைச் சேர்ந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சந்தோஷ்குமார், மற்றும் திமுக எம்பிக்கள் கனிமொழி, எம்எம் அப்துல்லா, எஸ்.கல்யாணசுந்தரம், ஆர்.கிரிராஜன், என்.ஆர்.இளங்கோ, எம்.சண்முகம் ஆகியோர் இதில் அடங்குவர்.

இவர்கள் தவிர மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி, தெலுங்கானா முதல்வர் சந்திரசேகரராவின் தெலுங்கானா ராஷ்ட்ரீய சமீதி கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் எம்பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் எம்பிக்கள் இடைநீக்கத்துக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன. விவாதம் கோரிய எதிர்க்கட்சியினர் மீதான இடைநீக்க நடவடிக்கை தவறானது. எனவே, இதனை திரும்ப பெற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள், தலைவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

எம்.பி.க்கள் மீதான இடைநீக்க நடவடிக்கை என்பது ஜனநாயக படுகொலை என குறிப்பிடும் வகையில் திமுக எம்.பி.க்கள் திருச்சி சிவா, ராஜேஷ் குமார் உள்ளிட்டோர் மாஸ்க் அணிந்து எதிர்ப்பை பதிவு செய்தனர்.

இது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா டுவிட்டரில், “அத்தியாவசியப் பொருட்களின் மீதான ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு மற்றும் பணவீக்கம் குறித்த விவாதம் நடத்தக் கோரிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் பி.சந்தோஷ்குமார் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களை மாநிலங்களவையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளது மிகவும் வருத்தமளிக்கிறது.

மக்களை பாதித்து வரும் முக்கியப் பிரச்சினைகள் விவாதிக்கப்படாமல் தவிர்க்கப்படுகின்றன. மக்களுக்கும் எதிர்கட்சிகளுக்கும் பதில் அளிக்காமல் பொறுப்பை தட்டிக்






கழித்து ஒன்றிய அரசாங்கம் நாடாளுமன்றத்தை நடத்திச் செல்கிறது” என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களை உறுப்பினர் பி.சந்தோஷ்குமார் கூறியதாவது:

இந்நாட்டின் பெரும்பான்மையான மக்களின் மிகக் கடுமையான பிரச்சினைகளை விவாதிக்க அனுமதி இல்லை என்றால் நாடாளுமன்ற அமர்வு எதற்கு? எம்.பி.க்களுக்கு இரண்டு மூன்று மணி நேரம் விவாதிக்க நேரம் ஒதுக்க முடியவில்லை என்றால், மக்கள் பிரதிநிதிகள் என்று நாங்கள் எப்படிச் சொல்லிக் கொள்வது? கடந்த ஒருவார காலமாக கடுமையாக முயற்சித்தும் விலை ஏற்றத்தைப் பற்றி விவாதிக்க அனுமதிக்காததால்தான் நாங்கள் நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் நின்று போராட வேண்டியதாயிற்று. எங்களது நியாயமான கோரிக்கைகளை ஏற்காமல் இடை நீக்கம் செய்திருப்பது மக்களை அவமானப்படுத்தியிருப்பதாகவே பார்க்க வேண்டி இருக்கிறது. விலைவாசி உயர்வு, வேலையின்மை குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு கிடைத்த எதிர்மறையான பதில்கள் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் மீது இந்த பா.ஜ.க. ஒன்றிய அரசுக்கு அக்கறை இல்லை என்பதையே நிரூபிக்கிறது. இந்திய அரசியல் சாசனம் இந்திய மக்களாகிய நாங்கள் என்று ஆரம்பிப்பது ஜனநாயகத்தில் மக்கள்தான் உச்ச ஆதாரம் என்பதை ஆட்சியாளர்கள் மறக்கும்போது அதை நினைவுபடுத்த வேண்டிய கடமை மக்கள் பிரதிநிதிகளுக்கு உண்டு. இந்திய நாடாளுமன்றம் மோடிக்கு பஜனை பாடும் பக்தர்கள் கூடும் இடம் அல்ல.

மாறாக விவாதம் நடைபெறும், போராடும் இடம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். கார்ப்பரேட்டுகளை ஆதரிக்கும் கொள்கைகளைக் கொண்ட இந்த ஒன்றிய ஆட்சியை எதிர்த்து மாநிலங்களவையின் உள்ளேயும், வெளியேயும் நாங்கள் போராடுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## எம்.பி.க்கள் நீக்கம் : ஜனநாயக உரிமைகளை அழித்தொழிக்கும் செயலாகும்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துரிமையை பறித்து, அவர்களின் செயல்பாடுகளை முடக்குவது நாடாளுமன்ற ஜனநாயகத்தை அழித்தொழிக்கும் செயலாகும். மாநிலங்களவையில் மக்கள் வாழ்வில் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தி வரும் அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலையுயர்வு, சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலை உயர்வு, அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவுப் பொருட்களின் மீது ஜிஎஸ்டி வரிவிதித்திருப்பது, ராணுவத்துக்கு வீரர்கள் தேர்வு செய்யும் அக்னிபாத் திட்டம் ஆகியவை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, திமுகழகம், காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட எதிர்கட்சி உறுப்பினர்கள் சில நாட்களாக வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், ஆளும் பாஜக ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் விவாதிப்பதை தவிர்த்து அரசின் நிர்வாக உத்தரவின் மூலமாக எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருவது நாடாளுமன்ற ஜனநாயகத்தை சீர்குலைத்து, அவை உறுப்பினர்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கும் செயலாகும். கூட்டத் தொடர் முழுவதும் 19 உறுப்பினர்களை இடைநீக்கம் செய்திருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது. பாஜக ஒன்றிய அரசு நாடாளுமன்ற நடைமுறைகளை மதித்து நடக்க வேண்டும், உறுப்பினர்கள் மீதான இடைநீக்க நடவடிக்கையில் பிரதமர் தலையிட்டு ரத்து செய்து, அவையில் மக்கள் பிரச்சனைகளை விவாதிக்க முன்வர வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அறக்கையில் கூறியுள்ளார்.



**வெளியேறு, வெளியேறு மோடி அரசே வெளியேறு!**
**விலை உயர்வுக்கு காரணமான மோடி அரசே வெளியேறு!**

**திருப்பூரில் ஆகஸ்ட் 6, 7, 8, 9 தேதிகளில் சங்கமிப்போம்!**

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு!**







# இரக்கமற்ற கொடுங்கோல் ஆட்சி!

**பேரன்புமிக்க தோழர்களே!**

**நாடு முழுமைக்குமான நம் மக்கள், பெருங் கொடுமை, துன்ப, துயரத்தில் வாழ்ந்து வருகின்றனர்.**

நித்தம், நித்தம் உயர்ந்து வரும் விலைவாசிகள் விண்ணை முட்ட அன்றாட வாழ்க்கை படு பாதாளத்திற்கு தள்ளப்பட்டு வாழ்வதா? சாவதா? என கைபிசைந்து நிற்கின்றனர்.

குடும்ப செலவிற்கு வட்டிக்கு வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த இயலவில்லை. பொழுது விடிந்தால் கடன் கொடுத்த வனின் கொடூர முகத்தில் முழிக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு நாளும் படும் துன்பத்தை எண்ணி எண்ணி, ஏக்கப் பெருமூச்சு விட முடிகின்றதே தவிர, தப்பிக்க வழி ஏதும் இல்லை என்ற நிலையே கன்னித்தீவு கதையாய் முடிவின்றி தொடரும் நிலை.

தனது, தனது குடும்ப நிலை குறித்து கவலைப்படுவதைத் தவிர வேறு வழியில்லை, விடுபடுவதற்கான மார்க்கமும் தெரியவில்லை.

எத்தனை நாட்களுக்கு, மாதத்திற்கு இன்னல் குறித்துப் பேசினாலும் கவலை கொண்டாலும், கடைசியாக கணவனும் – மனைவியும் சேர்ந்து எடுத்திட்ட முடிவு. தாம் பெற்ற செல்வங்கள் நமக்குப் பிறகு அனாதையாகி, அல்லலுற்று கை பிசைந்து, பிச்சை எடுக்கும் நிலை உருவாகி, இன்னார் பிள்ளைகள் என மற்றவர்களால் ஏளனம் செய்து, நமது பாரம்பரிய குடும்ப கௌரவம் பாழ்பட்டு விடக்கூடாது.

ஆகவே நாம் இருவரும் மனதை கல்லாக்கிக் கொண்டு, இன்று இரவு நம் செல்லக் குழந்தைகளுக்கு, அன்பாக உணவு ஊட்டும் போது, கொடிய நஞ்சு விஷத்தை கலந்து, நீ மூத்தவனுக்கு கொடு, நான் இளையவனுக்கு கொடுத்துவிடுகிறேன். இரு குழந்தை களும் உறக்கத்தை இறுதி உறக்கமானதை உறுதிபடுத்திய பின்பு, நாம் இருவரும் பிள்ளைகளை அனுப்பி வைத்த அதே பாதையில் நாமும் சென்றுவிடுவோம் என்று பல குடும்பங்கள் மாண்டு, மடிவது அன்றாட செய்தியாகிவிட்டது.

இத்தகைய கொடுமைகளில் இருந்து மக்களின் உயிர்களைக் காக்க வேண்டிய பொறுப்பான ஒன்றிய அரசு, அவர்களின் வாழ்க்கை சுமையைக் குறைத்து, வளம் காண வேண்டிய அரசு, தனது பொறுப்பை தட்டிக் கழித்து மேலும், மேலும் தாங்கிக் கொள்ளா சுமையை ஒன்றன்பின் ஒன்றாக செங்கலை அடுக்குவது போன்று அடுக்கிக் கொண்டே போகின்றது.

**போதும், போதும் இனியும் என்னால் சுமக்க இயலாது, என் உயிர் போய்விடும் என்று அலறித் துடித்தாலும், துவண்டு விழுந்தாலும் & நீ எக்கதிக்கு ஆளானால் எனக்கென்ன மகனே? நீ என் ஆட்சியின் இருக்கும் அடிமை மகன், தூக்கிச் சுமக்கத்தான் வேண்டும் என இரக்கமற்ற முறையில், நெஞ்சில் ஈரமின்றி சுமைகளை அதிகரித்தபடியே உள்ளது.**

பெட்ரோல் விலை உயர்வு, டீசல் விலை உயர்வு, சமையல் எரிவாயு விலை உயர்வு, உணவுப் பொருட்கள், காய்கறிகள் என அனைத்தும் உயர்ந்தபடியே உள்ளது.

விலைவாசி உயர்ந்து வரும் நிலையில், மக்களின் வருமானம் விலை உயர்வுக்கு ஏற்ப உயர்வு கிடையாது – தினக் கூலியானாலும், மாதச்சம்பளம் பெறுபவர்களாக இருப்பினும் அவர்களின் ஊதியம் உயர்ந்தபாடு இல்லை; இருந்த நிலையிலேயே இருக்கின்றது.

இவர்களின் அன்றாடங் காட்சிகளின் நிலைமை பெரும் மோசம். அன்றாடம் வேலைக்கான எவ்வித உத்தரவாதமும் இல்லை.

வேலை இல்லை – ஊதியம் உயரவில்லை என்ற இக்கட்டான நிலை தொடர்கின்றது.

இந்நிலையில்தான் ஒன்றிய அரசு ஜி.எஸ்.டி. என்ற பெயரால் மேலும் ஒரு பகல் கொள்ளைக்கு கம்பளம் விரித்துள்ளது.

நம் மக்கள் அன்றாடம் உணவிற்கு பயன்படுத்தும் அரிசி, பருப்பு வகைகள், கோதுமை, ரவா, மைதா, ராகி, ராகி மாவு, வெல்லம், சர்க்கரை, கருப்பட்டி, கொண்டக்கடலை, மொச்சை, தட்டைப் பயிறு, பச்சைப் பட்டாணி, மிளகு, சீரகம், மிளகாய், புளி என அனைத்து வகை உணவுப் பொருட்களுக்கும், 5 சதம் ஜி.எஸ்.டி. வரி கட்ட வேண்டும் என்று ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது.

அரசின் முடிவு அடித்தட்டு மக்களை மட்டுமல்ல, நடுத்தர மக்களையும் மிக கடுமையான நெருக்கடிக்கு உள்ளாக்கும்.

சொல்லொணா துன்ப துயரத்தில் தொடர்ந்து நிலைகுலைந்து நிற்கும் மக்களின் வாழ்க்கையை மேலும் நிலை குலையச் செய்வதுதான் மக்களாட்சியா?

ஆணவத்தின் உச்சாணிக் கொம்பில் உயர்ந்து நின்ற, அண்டை நாடான இலங்கையில் மக்களின் எழுச்சியை எதிர்கொள்ள இயலாமல் ஓடி ஒளியும் ஆட்சியாளர்களின் கதியின் கதையை மோடி அரசு உணர்ந்தபாடில்லை.

ஒன்றிய அமைச்சர் ஒருவர் இலங்கையில் ஏற்பட்ட நிலைமை இங்கே ஏற்படாது என்று இறுமாப்போடு கூறுகின்றார்.

இலங்கையில் ஏற்பட்ட மக்கள் புரட்சி, விலைவாசி உயர்விற்கு எதிரான கிளர்ச்சி என்பதனை உணர மறுத்தால் இங்கேயும் அத்தகைய இயக்கங்களை, கிளர்ச்சிகளை மக்கள் நாடவேண்டிய நிலை என்பது தவிர்க்க இயலாத ஒன்று என்பதனை ஆட்சியாளர்கள் அறிந்திட வேண்டும்.

தங்களின் துன்ப துயரங்களுக்கு ஆட்சியாளர்கள் தான் காரணம் என்பதனை அறிந்த மக்கள் விழித்துக் கொண்டார்கள்.

நோய்க்கான காரணம் என்ன என்பதனை அறிந்த மருத்துவர், நோயாளிக்கு அதற்கான சிகிச்சையை மேற்கொள்கிறார்.

அதுபோன்றே நினைத்து பார்க்க முடியாத அளவிற்கு தனது சக்திக்கு மீறிய விலைவாசி உயர்விற்கு, ராஜபக்ச குடும்ப ஆட்சியாளர்களே காரணம் என்பதனை, மிகச்சரியாக துல்லியமாக உணர்ந்த மக்கள் ஒருசேர போர்க்குரல் எழுப்பினார்கள்.

இலங்கை முழுவதும் இன, மத, மொழி வேறுபாடுகளின்றி எழுப்பிய போர் முழக்கம் எட்டு திசைகளிலும் எதிரொலிக்க, தங்களை அடக்கியாள ஆணை பிறப்பிக்கும் அதிகார வர்க்கத்தின் அலுவலகங்கள் மட்டுமல்ல, அதிகார வர்க்கத்திற்கு அன்றாடம் ஆணை பிறப்பிக்கும் அதிபரின் மாடமாளிகை உட்பட மக்களின் வசமானது.

அதிகாரத் திமிரோடு ஆணை பிறப்பித்த அதிபர், பிரதமர் என அனைத்து அதிகாரம் படைத்திட்ட பெரிய மனிதர்கள் ஓட்டப்பந்தயத்தில் நான் முந்தி, நீ முந்தி என ஒவ்வொருவரும் ஓட்டம் பிடித்தது எங்கோ அல்ல– நமது நாட்டின் தென்கோடி முனையிலிருந்து, கூப்பிட்ட தூரத்தில் உள்ள இலங்கை தேசத்தில் தான்.

இலங்கையில் ஏற்பட்ட மக்களின் பேரெழுச்சி இந்தியாவில் ஏற்பட வெகுநாட்கள் ஆகாது.

இங்கே நடப்பது மக்களாட்சி அல்ல– மாறாக இரக்கமற்ற கொடியவர்களின் கொடுங்கோல் ஆட்சியை மோடி வகையறாக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களின் ஆட்சி இனியும் தொடரக்கூடாது. தொடர்வதை அனுமதிக்க கூடாது.

மகாகவி பாரதி ரஷ்யப் புரட்சியை வரவேற்று வந்தனம் கூறி பாடியபோது,

“ஆகாவென்றெழுந்தது பார் யுகப் புரட்சி கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்”

என்றுரைத்தது போன்று, இங்கே உள்ள மோடி ஆட்சியை அலறி ஓடச் செய்ய நாம் ஆயத்தமாக வேண்டும்.

நாட்டு மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திட நமது அன்றாட அரசியல் பணிகளை அதிகரிக்க வேண்டும். முன்னைக் காட்டிலும் முனைப்போடும், தீவிரத்தோடும் களப்பணிகளைக் காண வேண்டும்.

அத்தகைய பணிகளில் ஒன்றுதான், மிக முக்கியப் பணிகளில் ஒன்றுதான் திருப்பூரில் நடைபெறும் நமது மாநில மாநாடு.

மாநாட்டின் நிறைவு நாளான ஆகஸ்ட் 9ஆம் நாள் ஒன்று கூடும் நன்நாள்.

நாம் ஒன்று கூடி எழுப்பும் போர் முழக்கம் இதோ!

**- விலை உயர்வுக்கு காரணமான மோடி அரசே வெளியேறு.**
**- கொடுங்கோல் மோடி அரசே வெளியேறு.**
**- ஈவு, இரக்கமற்ற கொடிய மோடி அரசே வெளியேறு.**
**- மக்கள் விரோத மோடி அரசே வெளியேறு.**
**- ஜனநாயக விரோத மோடி அரசே வெளியேறு.**
**- சர்வாதிகார மோடி அரசே வெளியேறு.**
**- பாசிச மோடி அரசே வெளியேறு.**
**- வெளியேறு, வெளியேறு மோடி அரசே வெளியேறு.**

என முழக்கமிட ஆயத்தமாகி கரங்களில் செங்கொடியை உயர்த்திப் பிடித்து;

செஞ்சட்டை, செஞ்சேலை அணிந்து கம்பீர நடை போட்டு;

கோபக்கனல் கக்கி, கொடூர ஆட்சிக்கு முடிவு கட்ட அணி, அணியாய் அணிவகுப்பாய்!

கொடிகாத்த திருப்பூர் மாநகரில் செங்கடல் பெருகட்டும் மக்களின் வாழ்க்கையில்; மறுமலர்ச்சி காணட்டும்!

**மீண்டும் சந்திப்போம். வணக்கம்.**

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**



**வெளியேறு, வெளியேறு மோடி அரசே வெளியேறு!**

**ஈவு, இரக்கமற்ற கொடிய மோடி அரசே வெளியேறு!**

**ஆகஸ்ட் 6, 7, 8, 9 இல் திருப்பூரில்**
**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்**
**மாநில மாநாடு**



- த.லெனின்

# வீழும் ரூபாய்... வாழும் டாலர்!

**டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் வீழ்ச்சி அளவிடமுடியாத அதாள பாதாளத்திற்கு சென்றுள்ளது. ரஷ்ய உக்ரைன் போர், எரிபொருள் விலையேற்றம், உலக அளவிலான பொருளாதார மந்தம், பணவீக்கம் ஆகியவையே இந்திய ரூபாயின் இப்பெரும் வீழ்ச்சிக்கு காரணம் என சொல்லப்படுகிறது.**

அமெரிக்க டாலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு கடந்த ஜூலை 18ஆம் தேதியிலிருந்து கடும் வீழ்ச்சியடைந்து ஒரு டாலருக்கு 80 ரூபாய் என்ற அளவிற்கு சென்று விட்டது. இந்த ஆண்டு டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 7.5 சதவீதம் வீழ்ச்சி அடைந்து விட்டது.

கடந்த 2014 தேர்தல் பரப்புரையின் போது கருப்பு பணத்தை மீட்போம் என்று வீரவசனம் பேசிய இன்றைய பிரதமர் மோடி அத்தோடு டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பை 30 ரூபாய்க்கு ஒரு டாலர் என்று மாற்றுவேன் என்று வீரச்சபதம் செய்ததெல்லாம் நினைவில் ஆடுகிறது.

குஜராத்தின் முதலமைச்சராக இருந்தபோது, டாலருக்கு நிகரான பண மதிப்பின் வீழ்ச்சியினால் நாடு விரக்தியில் மூழ்கி யுள்ளது என்று முழக்கமிட்ட மோடி இன்று ஏன் மௌனவிரதம் காக்கிறார்?

2018 ஜூன் முதல் அக்டோபர் 11 ஆம் தேதிவரை ஒரு டாலர் 67 ரூபாய்க்கு நிகராக இருந்தது. ஆனால் அதன் பிறகு திடீரென்று 15 சதம் வீழ்ச்சியடைந்து ரூபாய் 74.40 ஆக மாறிவிட்டது.

ஆசிய நாடுகளிலேயே இந்திய ரூபாயின் வீழ்ச்சிதான் மிகவும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஜூலை ஒன்றாம் தேதியிலிருந்து முன்எப்போதும் இல்லாத அளவிற்கு ஒரு டாலர் 79 ரூபாய் என்று ஆனது. பிரிக்ஸ் நாடுகளிலேயே இது மிக மோசமான பண மதிப்பு வீழ்ச்சி என்று சொல்லப்படுகிறது.

இந்த வீழ்ச்சிக்கு குறிப்பிடப்படக்கூடிய ஒரு முக்கியமான காரணி நம்மிடமிருந்த அந்நியச் செலாவணிகளை அதிகமாகப் பயன்படுத்தியது என்று சொல்லப்படுவதுடன், அமெரிக்க அரசின் பெடரல் ரிசர்வ் வங்கி வட்டி விகிதத்தை உயர்த்தியதும் காரணமாகச் சொல்லப்படுகிறது.

இந்தக் காரணங்களால் கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பணவீக்கம் அதிகரித்து முதலீட்டாளர்கள் தங்களது முதலீடுகளை உடனடியாக எடுத்துச் சென்றதும் இந்த வீழ்ச்சியை விரைவுபடுத்திற்று.

இந்தியாவில் இப்படி வெளியேறிய ஒட்டுமொத்த முதலீடுகள் 29.01 பில்லியன் டாலர்களாகும். இது கடந்த 2008ஆம் ஆண்டை விட இரண்டு மடங்கு அதிகமாகும். 2008ஆம் ஆண்டு 11.9 பில்லியன் டாலர். இந்த ஆண்டுதான் உலகப் பொருளாதார மந்தம் ஏற்பட்டதும் என்பது கவனிக்கத்தக்கது.

ஆனால், இப்போது அதைவிட அதிகமாக ரூபாய் மதிப்பு சரிந்திருக்கிறது என்றால் இந்தியப் பொருளாதாரத்தின் அடித்தளம் ஆட்டம் கண்டுவிட்டது என்பதையே சான்றாக்கியிருக்கிறது.

வணிக பற்றாக்குறை அதிகரிக்க, அதிகரிக்க அது இந்தியா வின் நடப்புக் கணக்கு பற்றாக்குறையை அதிகப்படுத்தும்.

நிதியாண்டு 2022ல் இந்தியாவின் நடப்பு கணக்கு பற்றாக் குறை 38.7 பில்லியன் டாலராகும். அதாவது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி.) இது 1.2 சதமாகும்.

நடப்பு கணக்கு பற்றாக்குறை என்பது இந்தியா அதிகம் இறக்குமதி செய்வதாலும் குறைந்த அளவிற்கு ஏற்றுமதி செய்வ தாலும் ஏற்படுவதாகும். அதிக அளவு இறக்குமதி செய்வதில் முதலிடம் பெறுவது கச்சா எண்ணெய். அதற்கு அடுத்த இடம் தங்கமாகும். தங்கம் இந்த ஆண்டு இறக்குமதி முந்தைய ஆண்டைக் காட்டிலும் ஒன்பது மடங்கு அதிகரித்திருக்கிறது. இவை இரண்டுக்கும்தான் நாம் அதிகம் டாலர்களை செலவு செய்கிறோம். ஏற்றுமதி என்று சொன்னால் இப்போது பெட்ரோலியப் பொருட்கள் சேவைகளினால் நாம் பெறும் டாலர்களாகும்.

நடப்பு கணக்கு பற்றாக்குறை ஜனவரியிலிருந்து மார்ச் வரை உள்ள காலாண்டில் 13.4 பில்லியன் டாலர் ஆகும். இது கடந்த ஆண்டு அக்டோபர் மற்றும் டிசம்பருக்கு இடையிலான காலாண்டின் பற்றாக்குறையான 22.1 பில்லியன் டாலரை விட குறைவானது. ஆனால், இப்போது அந்த பற்றாக்குறை அதி வேகத்தில் அதிகரித்து மே மற்றும் ஜூனுக்குப் பிறகு இன்னும் அதிகரிக்கும் என்று சொல்லப்படுகிறது. அப்படியாயின் டாலருக்கு நிகரான பண மதிப்பின் வீழ்ச்சி இன்னும் விட்டுவிடாது என்பது தெளிவாகிறது. இந்தப் பற்றாக்குறையை சமாளிப்பதன் மூலம் பண மதிப்பை நிலை நிறுத்த முடியும். அதனால்தான் தங்க இறக்குமதிக்கு வரியினை 10.75 சதத்திலிருந்து 15 சதமாக உயர்த்தியிருக்கிறது. இந்தியாவில் உற்பத்தியாகாத தங்கம் உலகச் சந்தையிலிருந்துதான் இறக்குமதி செய்யப்படுகிறது. உலகிலேயே அதிக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் இரண்டாவது நாடு இந்தியாவாகும்.

2022 நிதியாண்டில் இந்தியா 46.17 பில்லியன் டாலர் தொகைக்கு தங்கத்தை இறக்குமதி செய்துள்ளது. இது கடந்த ஆண்டைவிட 33 சதம் அதிகமாகும்.

பெட்ரோல், டீசல் மற்றும் விமான எரிபொருளை இந்தியா வில் சுத்திகரித்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் தனி யார் நிறுவனங்கள் இதுவரை பெரும் கொள்ளை லாபத்தை சம்பாதித்து வந்தன. நாடு முழுவதும் பெட்ரோல் தட்டுப்பாடு இருந்தபோதுதான் ரிலையன்ஸ் உள்ளிட்ட பெரும் நிறுவனங்களின் இந்த ஏற்றுமதி கொடிகட்டிப் பறந்தது. அதிவேக டீசல் மற்றும் பெட்ரோலிய பொருட்களின் ஏற்றுமதி கடந்த மார்ச் 2022ல் மூன்று மடங்கு அதிகரித்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். ஜெட் விமானங்களுக்கான எரிபொருள் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. இப்போதுதான் ஒன்றிய அரசு இதன் மீது செஸ் (மாநிலங்களுக்கு பங்கீடு கொடுக்காத) வரியை விதித்துள்ளது.

ஆச்சரியம் என்னவென்றால் இந்த பண மதிப்பு வீழ்ச்சியை ஜவுளித்துறைக்கு நல்லது என்று ஆறுதல் சொல்லப்படுவதுதான். ஒட்டுமொத்த ஜவுளி ஏற்றுமதியும் குறைந்திருக்கிற இந்தக் காலத்தில் பருத்தியை அதிக விலை கொடுத்து வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும்போது எப்படி இது சாத்தியம்?

மத்தியதர வர்க்கங்கள் தவணை முறையில் வாங்கியுள்ள கார், வீடு ஆகியவற்றின் மீதான வட்டி அதிகரித்துள்ளது. இது அவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

நாணய மாற்று விகிதம் எப்போதும் ஒரே மாதிரி இருந்ததில்லை. ஒரு நாணயத்தின் தேவை அதிகரிக்கும்போது அதன் மதிப்பும் அதிகரிக்கும். பொதுவாக எண்ணெய் வர்த்தகத்தின் அமெரிக்க பெரும் நிறுவனங்கள்தான் கொடி கட்டிப் பறக்கின்றன. நாம் அவர்களிடம் மட்டும் இறக்குமதி செய்வதால் டாலரில் பணம் செலுத்தப்பட வேண்டியிருக்கிறது. பாரம்பரிய நட்பு நாடான ஈரான் ரூபாய் கணக்கில் எண்ணெய் வர்த்தகம் செய்ய நட்பு கரம் நீட்டினாலும், அதை ஏற்க மறுத்து அமெரிக்க டாலரின் மதிப்பை கூட்டுவதற்கே நாம் உதவி வருகிறோம் என்பதே உண்மையாகும்.

நாணய வர்த்தகம் செய்யப்படும் இடம் அந்நியச் செலாவணி சந்தை அல்லது பணச் சந்தை என்று அழைக்கப்படுகிறது. பொதுவா பணத்திற்கென்று தனி மதிப்பு கிடையாது. உலக வர்த்தகம் நடப்பதால்தான் டாலர் வலுவாக உள்ளது. உலக வங்கியும், சர்வதேச நிதியமும், வளரும் நாடுகளின் நாண யத்தை வம்புக்கு இழுத்து வீழ்ச்சிடைய வைப்பதற்கான அனைத்து வகையான அழுத்த அரசியலையும் மிரட்டல் பாங் கையும் எப்போதும் கையளித்தே வந்தருக்கின்றன. இதன் காரணமாகத்தான் அன்றைய ஈராக் அதிபர் சதாம் உசேன் தனது வர்த்தகத்திற்கு யூரோவைப் பயன்படுத்தினார் என்பது அவர் கொல்லப்பட்டதற்கான காரணங்களில் ஒன்று.

இந்தியாவிலோ சாதாரண ஏழை மக்கள் கொல்லப்பட்டு டாலரின் மதிப்பை காத்து வருகின்றனர்.

**நமது நாட்டில் பண சுழற்சி சாதாரண ஏழை எளிய கிராமப்புற மக்களிடம் மிகக் குறைவாக உள்ளது. பொருளாதாரத்தில் உயர்ந்த முதல் 10 சதவிகிதத்தினர் சுமார் 73 சத பணப் புகழக்கத்தை கொண்டுள்ளனர். கடைகோடியில் இருக்கும் 10 சத ஏழை பாழைகள் வெறும் 1.67 சத பணப் புழக்கத்தையே கொண்டிருக்கின்றனர். இதன் மூலம் அவர்களின் வாங்கும் சக்தி வற்றிப் போ-யிருப்பதும், அதனால் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட பலவற்றையும் அவர்கள் வாங்குவதில்லை என்பதையும் ஒரு பஞ்சகால வாழ்க்கையைத்தான் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதையும் இதன் மூலம் நாம் அறிய முடியும்.**

எதற்கெடுத்தாலும் தேசத்தின் பெருமை, தெய்வீகத்தின் மகிமை என்று பேசும் மோடி அரசு, இந்தியப் பண வீழ்ச்சிக்கு ஏன் வாய் திறக்காது உள்ளது?

அமெரிக்காவில் ஒரு மணி நேரம் உழைக்கிற உழைப்பிற்கு அளிக்கிற ஊதியம் இந்தியாவில் குறைவானதாக இருக்கலாம். ஆனால், உழைப்பு ஒன்றுதான். அப்படியென்றால் அதற்கான ஊதிய மதிப்பும் ஒன்றாகத்தானே இருக்க வேண்டும். ஏன் இந்த முரண்பாடு? இதில்தான் வளர்ந்த பணக்கார நாடுகளின் பொருளாதார பகல் கொள்ளை அடங்கி இருக்கிறது. உலக வங்கியிடம் நாம் 1970களில் 1 டாலர் கடன் வாங்கியிருந்தால் அது அன்றைக்கு இந்திய ரூபாயில் ரூ.7.50 ஆகும். ஆனால் இன்று 80 ரூபாய் என்று அந்த கடன் மாறி அதற்கு வட்டி கட்டுகிறோம் என்றால் இந்த கடன் வலை பொறியில் எப்படி திட்டமிட்ட முறையில் பணக்கார நாடுகள் தினவெடுத்து தின்றுக் கொழுக்கின்றன என்பதை பதைபதைப்போடு பார்க்கலாம்! வேர்க்கலாம்!

வலுத்தவனின் ஆயுதமாக நாணய மதிப்பும் குரங்கு ஆப்பம் பிரித்த கதையாக அதற்கான சூழ்ச்சி வட்டி விதிமுறைகளும் இன்றைய உலகமயம் என்றால் இதை எதிர்த்த கலகமயத்திற்கு உலகம் தயாராகி தானே தீர வேண்டும்!

உறக்கம் கலைந்து உரக்க குரல் எழுப்பும் காலம் நெருக்கி விட்டது. மக்களை அணிதிரட்ட, பிணி விரட்ட போர்ப்படையே தயாராகு!

தொடர்புக்கு: **9444481703**




## கட்டட, கட்டுமானத் தொழிலாளர் சங்க சிறப்பு மலர் வெளியீட்டு விழா

கட்டட, கட்டுமானத் தொழிலாளர் மாநில கோரிக்கை மாநாடு மற்றும் தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் 30ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர் வெளியீட்டு விழா ஜூலை 23 அன்று சென்னை, தி.நகர், பாலன் இல்லத்தில் சங்கத் தலைவர் நா.பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. சங்க மாநிலப் பொதுச் செயலாளர் கே.இரவி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு ஏஐடியுசி மாநிலப் பொதுச்செயலாளர் டி.எம்.மூர்த்தி சிறப்பு மலரை வெளியிட, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், தமிழ்நாடு ஏஐடியுசி மாநிலத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி. ஆகியோர் பெற்றுக் கொண்டனர். நிறைவாக, சங்க மாநில துணைப் பொதுச் செயலாளர் என்.செல்வராஜ் நன்றி கூறினார்.

ஏஐடியுசி மாநில துணைத் தலைவர்ஏ.எஸ்.கண்ணன் எக்ஸ்.எம்.எல்.ஏ., மாநிலச் செயலாளர் ம.ராதாகிருஷ்ணன், சங்கத் தின் மாநிலச் செயலாளர்கள் எம்.முனுசாமி, ஆர்.துரை சாமி, ஆர்.தில்லைவனம், எஸ்.சின்னசாமி, எஸ்.சேது, ஜி.பாலன், சி.நந்தினி, மாநிலப் பொருளாளர் இரா.முருகன், மாநிலத் துணைத் தலைவர்கள் தோழர்கள் கே.சுரேஷ் எம்.சி, ஜி.பி.எஸ். வடிவேலன், எஸ்.சங்கர் மேஸ்திரி ஆகியோர் உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், முன்னணி தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## தவிதொச திருச்சுழி, நரிக்குடி வட்ட பேரவைக் கூட்டம்

விருதுநகர் மாவட்டம் பண்ணை மூன்றடைப்பில், திருச்சுழி, நரிக்குடி வட்ட தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சங்க பேரவைக் கூட்டம் நடைபெற்றது. மருதுபாண்டியன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் வரதராஜன், மாவட்ட தலைவர் சீனிவாசன், சிபிஐ மாநில குழு உறுப்பினர் செந்தில்குமார், ஒன்றிய செயலாளர் செல்வம் ஆகியோர் பேசினர். தலைவராக அழகு, துணைத்தலைவராக செல்வம், செயலாளராக மருதுபாண்டியன், துணை செயலாளராக சின்னையா, பொருளாளராக முத்து முனியாண்டி ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். 100நாள் வேலையை 200நாட்களாக உயர்த்த வேண்டும், சம்பளத்தை ரூ.600ஆக்க வேண்டும், அதிகாலையில் வரச்சொல்லி போட்டோ எடுப்பது நிறுத்தப்பட்ட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 85 இதழ் 17

## பக்த ஜனசபையா நாடாளுமன்றம்?

நாடாளுமன்ற மாநிலங்களவையில் 26.7.2022ம் தேதியன்று விலைவாசி உயர்வைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரின.

ஜிஎஸ்டி வரி விதிக்கப்பட்டு 5 ஆண்டுகள் ஆகின்றன. அதை கொண்டாடுவதற்காகவோ என்னவோ, நிதித்துறை அமைச்சர் கற்பனைக் கெட்டாத வகையில், புதிய, புதிய வரிகளை அறிமுகப்படுத்தியுள்ளார். சென்ற 15ஆம் தேதியிலிருந்து அவை அமுல்படுத்தப்பட்டு விட்டன.

வணிகச் சின்னம் இல்லாத அரிசி, கோதுமை, பால், தயிர் உள்ளிட்ட பொருட்களுக்கு கூட இனி வரி செலுத்த வேண்டும். வங்கியில் பணம் போட்டாலும், பணம் எடுத்தாலும், அல்லது போடாமலே இருந்தாலும் வரிகள் உண்டு. வங்கிக் கணக்கில் குறைந்தபட்ச தொகையை வைக்க முடியாத நிலையில் இருப்பவர்களுக்கு, அபராதமும், அதோடு சேர்ந்து 18 சதவீத வரியும் விதிக்கப்படுகிறது.

எண்ணெய், எரிவாயு ஆகியவற்றின் விலைகள் உயர்ந்து கொண்டே இருக்கின்றன. பணவீக்கம் பத்து சதத்தைத் தாண்டிப் பறக்கிறது. அத்தியாவசியமான பொருட்கள் சாமானியர்களின் கைகெட்டாத உயரத்திற்கு போய்விட்டன. எதிர்க்கட்சிகளை முடக்க, அவற்றின் தலைவர்கள் மீது அமலாக்கத்துறை பாய்கிறது.

இவற்றையெல்லாம் பேச வேண்டும் என்று, மாநிலங்களவையின் மையப்பகுதிக்கு வந்து கோரியதற்காக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சந்தோஷ் குமார் உட்பட திரிணாமூல் காங்கிரஸ்(7), திராவிட முன்னேற்றக் கழகம்(6), தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி (3) சிபிஎம் (2) ஆகிய கட்சிகளின் மாநிலங்களவை உறுப்பினர்கள் 19 பேர் இந்த மழைக்கால கூட்டத்தொடர் முடியும் வரை பங்கேற்கக் கூடாது என்று இடைநீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். அதற்கு முந்தைய நாளில் நான்கு காங்கிரஸ் எம்.பி.க்கள் இடை நீக்கம் செய்யப்பட்டார்கள்.

இதுவரையில் இவ்வளவு அதிக எண்ணிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டது இல்லை.

நாடாளுமன்ற மக்களவையில் இந்த இடைநீக்கத்தை ரத்து செய்யுமாறு எதிர்க்கட்சிகள் கோரின. ஆனால் நாடாளுமன்ற விவகாரத்துறை துணை அமைச்சரான முரளிதரன், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஒழுங்கீனத்தைச் சகிக்க முடியாது. அவர்கள் நாடாளுமன்றத்துக்கும் அவைத் தலைவருக்கும் பெரும் அவமதிப்பு செய்து விட்டனர். வேறு வழி இல்லாமல் கனத்த இதயத்துடன் பிஜேபி இந்த முடிவுக்கு வந்ததாகக் கூறி இருக்கிறார்.

அது மட்டும் இன்றி, நாடாளுமன்றத்தை நடத்த வேண்டும் என்று விரும்புகிற உறுப்பினர்களின் உரிமைகளை அவர்கள் பறித்ததாகவும், நாடாளுமன்ற நடவடிக்கைகளில் உரிய வகையில் பங்குபெற வருமாறும் எதிர்க்கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுப்பதாகவும் வேறு சொல்லி இருக்கிறார்.

2012ம் ஆண்டில் இதே மழைக்கால நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடந்து கொண்டிருந்தது. அப்போது ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி. 13 நாட்கள் மொத்தமாக நாடாளுமன்றத்தை நடத்தவே முடியாமல் பிஜேபி உறுப்பினர்கள் தடுத்து நிறுத்தினார்கள். கடைசியில் கூட்டத் தொடர் ரத்து செய்யப்பட்டதே தவிர பிஜேபி எம்பிக்கள் இடை நீக்கம் செய்யப்படவில்லை.

அப்போது பிஜேபி தலைவரான அருண் ஜெயிட்லி “நாங்கள் நாட்டை சுத்தப்படுத்துவதற்காகத் தான் நாடாளுமன்றத்தை நடத்த விடாமல் நிறுத்தி இருக்கிறோம். இதன் மூலம் நாட்டு மக்களுக்கு ஒரு செய்தியை நாங்கள் தெரிவிக்கிறோம்“ என்றார். அதேபோல இப்போது மறைந்து விட்ட மற்றொரு தலைவரான சுஷ்மா ஸ்வராஜ் “நாடாளுமன்றத்தை நடைபெறவிடாமல் தடுத்து நிறுத்துவது என்பது ஜனநாயகக் கடமையின் ஒரு பகுதி தான்” என்று பெருமிதமாகச் சொன்னார்.

இப்போது அதே வாயால், நாடாளுமன்றம், அவைத் தலைவர், காலம், பணம் ஆகியவற்றின் மதிப்பு பற்றி நீளமான வசனங்களைப் பிஜேபி பேசிக் கொண்டிருக்கிறது.

ஜிஎஸ்டி வரி, விலை உயர்வு எதைப்பற்றியும் பேச அவர்கள் விரும்பவில்லை. அண்மையில் என்னென்ன வார்த்தைகளை எல்லாம் நாடாளு மன்றத்தில் பேசக்கூடாது என்ற ஒரு பட்டியலை அரசு வெளியிட்டது. ‘பொய்’ என்றோ ‘உண்மையல்ல’ என்றோ சொல்வது கூட குற்றமாம். அவர்களுடைய திட்டத்தின்படி நாடாளுமன்றம் ஒரு ‘பக்த ஜன சபை’யாக மட்டுமே இருக்க முடியும்.

நாடாளுமன்றத்தில் விவாதிப்பதைத் தவிர்த்து நிர்வாக உத்தரவின் மூலமாகவே எல்லா நடவடிக்கைகளையும் பாஜக ஒன்றிய அரசு மேற்கொள்கிறது. நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களை பேசவே அனுமதிக்காமல், கூட்டத் தொடர் முடியும் வரை இடைநீக்கம் செய்திருப்பது கண்டிக்கத்தக்கதாகும்.

எதிர்க்கட்சிகள் இல்லாத நாடாளுமன்றம், ஆட்சேபனை குரல் எழுப்ப வாய்ப்பில்லாத சர்வாதிகாரம் என்ற நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டு வருகிறது.

இடிப்பாரே இல்லா ஏமரா மன்னன் கெடுப்பார் இலேனும் கெடும்.

## மாணவி ஸ்ரீமதி மரணத்திற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்




### இரா.முத்தரசன் பேச்சு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட 23 வது மாநாடு கடந்த 19 ,20 தேதிகளில் திருப்பத்தூரில் நடந்தது. மாநாட்டை ஒட்டி 19ஆம் தேதி மாபெரும் செம்படை பேரணி திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி எதிரி லிருந்து துவங்கி சேலம் கிருஷ்ணகிரி சந்திப்பு சாலையில் தோழர் கோவிந்தராஜ் நினைவுத்திடலில் முடிந்தது .

இங்கு நடைபெற்ற மாநாடு பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட நிர்வாக குழு தோழர் சுந்தரேசன் தலைமை தாங்கினார். இதில் கலந்து கொண்ட மாநில செயலாளர் இரா முத்தரசன் பேசியதாவது,

தமிழகத்தில் வாழும் ஒவ்வொரு பெற்றோரும் வேதனையை சுமக்க வைத்த மரணம் மாணவி ஸ்ரீமதி மரணம். இந்த மரணத்திற்கு காரணமானவர்கள் யாரா யிருந்தாலும் விசாரிக்கப்பட்டு அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். எப்படி பட்ட அரசியல் பின்னணி உள்ளவராக இருப்பினும் மக்கள் முன் நிறுத்தப் படவேண்டும்.இதே பள்ளியில் முறைகேடுகள் நடப்பதாக ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன்பு அங்குள்ள சிபிஐ கட்சி தோழர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர். மாணவியின் மரணம் குறித்து இன்னும் விசாரணை முழுமை பெறவில்லை. உண்மைகள் வெளிவரும் குற்றவாளிகள் நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள்.

ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவதாக கூறிய நமது பிரதமர் மோடி அவர்கள் இதுவரை நான்கு ஆண்டுகளில் 8 கோடி பேருக்கு வேலை தந்திருக்க வேண்டும். ஆனால் வேலை பறிக்கப்பட்டு வீதிக்கு வந்தவர்கள் தான் நாம் எதார்த்தமாக பார்க்கின்றோம். கொடூரமான கொரோனா நோய் தாக்குதல் ஆபத்து இந்தியாவிலிருந்த போது வெளிநாட்டு அதிபரை தன்னுடைய சுய விளம்பரத்திற்காக அழைத்து லட்சக்கணக்கில் மக்களை கூட வைத்தவர் மோடி. ஆபத்தை வருமுன் தவிர்ப்பவர் தான் ஆற்றல்மிகு அமைச்சர். ஆனால் ஆபத்தையே வரவேற்ற அமைச்சர் நம் பிரதமர்.

ஒரே நாடு ஒரே மொழி என பேசும் மோடி அவர்களே ஒரே வாழ்க்கை முறை என நீங்கள் பேசுவதில்லையே ஏன். கம்யூனிஸ்டுகள் கேட்பதெல்லாம் ஒன்றுதான். சம அந்தஸ்து சம உரிமை க்கான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கும் டாக்டர் அம்பேத்கர் உருவாக்கிய அரசியல் அமைப்பு பாதுகாக்கப்பட வேண்டும்.

பிரதமர் மன்மோகன் ஆட்சிக்கு கம்யூனிஸ்ட் டுகள் ஆதரவு அளித்தனர். அப்போது அமைச்சரவையில் கம்யூனிஸ்டுகள் பங்கு பெற வேண்டும் எனவும் எந்த இலாக்கா தேவை எனவும் சோனியா காந்தி கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களிடம் கேட்டார். அப்போது கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கவில்லை எனில் மன்மகன் சிங் பிரதமராக வந்திருக்க முடியாது என்ற நிலை இருந்தது. ஆனால் அப்போதும் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் நாங்கள் அமைச்சரவையில் பங்கு பெறுவதை விரும்பவில்லை. மாறாக குறைந்தபட்ச செயல் திட்டத்தை நாம் உருவாக்குவோம் அதை நீங்கள் செயல்படுத்திட வேண்டும். நாங்கள் வெளியிலிருந்து நிபந்தனையற்ற ஆதரவு தருவோம் என்றார்கள். அந்த குறைந்தபட்ச வேலை திட்டத்தில் உருவானது தான் மகாத்மா காந்தி வேலை உறுதி அளிப்பு திட்டம். இத்திட்ட துவக்கத்தில் செயல்படுத்திட நிதி ஒரு பொருட்டல்ல என்றார் மன்மோகன்சிங்.

ஆனால் அடுத்து வந்த மோடி ஆண்டுக்கு ஆண்டு நிதி குறைத்து வருகிறார். இதில் பாதிக்கப்படுவது அம்பானியோ அதானியோ அல்ல ஏழைமக்களே. இந்த திட்டம் தேவையில்லை என்பது பிஜேபியின் கருத்து. வேலை நாட்களும் குறைக்கப்பட்டு வருகிறது.

மோடி தனக்கு பெரும்பான்மை பலம் உள்ளது என இறுமாப்புடன் இருக்கலாம். மோடியே அருகே உள்ள இலங்கையை பாருங்கள் பாடம் பெற்றுக் கொள்ளுங்கள். இந்தியாவில் மக்கள் பயன்படுத்தும் பெட்ரோல், கேஸ் சிலிண்டர், உணவுபொருட்களின் விலைவாசி உயர்ந்து கொண்டே உள்ளன. அதே போல இலங்கையிலும் மக்கள் பயன்படுத்தும் பொருட்கள் விலை மிக உயர்ந்துவிட்டன விளைவு இன்று ராஜபக்சே குடும்பமே இலங்கையை விட்டு வெளியேறி விட்டார்கள். மக்கள் இன, மத, மொழி வேறுபாடு இன்றி போராடுகின்றனர். அங்கு அதிபரின் மாளிகையின் உள்ளே நுழைந்து போராடினார்கள். அதிபர் நாட்டை விட்டு ஓடி விட்டார். கடும் விலைவாசி உயர்வு அங்கு ஒரு மிகப்பெரிய எழுச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இங்கு அதே நிலை உங்களுக்கும் ஏற்படும்.

ஹிட்லர் என்ற பாசிஸ்டுகளின் கொள்கையை மோடி ஏற்று நடந்து கொண்டிருக்கிறார். பாசிசம் என்றால் மாற்றுக் கருத்துகளுக்கு இடம் இல்லை என்பதாகும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எந்தெந்த சொற்களை பேசும் போது பயன்படுத்தக் கூடாது என சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதில் சர்வாதிகாரி பாசிசம், நாடகம், ஜனநாயக ஊழல், என கூறக்கூடாது என வழிகாட்டல் கொடுக்கப்பட்டுள்ளது. மோடியை நான் ஒரு பாசிஸ்ட் என்று கூறுகிறேன். இவ்வாறு பேசினார்.

இக் கூட்டத்தில் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாவட்டச் செயலாளர் ஏ.சி.சாமிக்கண்ணு மாவட்டத் துணைச் செயலாளர் எம்.நந்தி, எஸ்.ஆர்.தேவதாஸ், மாவட்ட குழு உறுப்பினர்கள் ஆர்.முல்லை, ஜி.லதா, கே.பி. மணி, துரைசெல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசினர். இதில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பாலாற்றில் மணல் கொள்ளையை தடுக்க வேண்டும்.

100 நாள் வேலை நாட்களை 200 நாட்களாக உயர்த்த வேண்டும்.

100 நாள் வேலை திட்டப் பணிகளை விவசாய பணிகளுக்கு பயன்படுத்த வேண்டும்.

திருப்பத்தூர், வேலூர் மாவட்டத்தில் தொழிற்பேட்டைகள் அமைத்திட வேண்டும்

வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் உள்ள ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி ஏறி கால்வாய் தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்

திருப்பத்தூர் ஆம்பூர் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை தொடர்ந்து நடத்த வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மறுநாள் 20 ம் தேதி அருண் மஹாலில் நடந்த மாவட்ட பிரதிநிதிகள் மாநாட்டில் திருப்பத்தூர் மாவட்டம் மற்றும் வேலூர் மாவட்டம் என தனியாக பிரிக்கப்பட்டு திருப்பத்தூர் மாவட்டத்திற்கு எம்.சுந்தரேசன் செயலாளராகவும், வேலூர் மாவட்டத்திற்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜி.லதா மாவட்டச் செயலாளராகவும் மாநாட்டில் தேர்வு செய்யப்பட்டனர். இம் மாநாட்டில் இன்றைய அரசியல் நிலவரம் குறித்து மாநில செயலாளர், மாநில துணைச் செயலாளர் சிறப்புரையாற்றினர்.

## அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவுப் பொருட்களுக்கு ஜி.எஸ்.டி.

### ஈரோடு, சென்னிமலையில் ஆர்ப்பாட்டம்

அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவு தானியங்களுக்கு புதியதாக விதித்துள்ள ஜிஎஸ்டி வரி விதிப்பை ரத்து செய்ய மத்திய அரசை வலியுறுத்தியும் மற்றும் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஈரோடு மற்றும் சென்னிமலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**சென்னிமலை:** சென்னிமலை பேருந்து நிலையம் முன்பு ஒன்றியச் செயலாளர் எம்.செங்கோட்டையன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், ஏஐடியுசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி, மாவட்டக்குழு உறுப்பினர் மா.நாகப்பன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் ஆர்.கண்ணுசாமி, பி.மகேந்திரன், நகரச் செயலாளர் எஸ்.ராஜ்குமார், ஒன்றியக்குழு குழு உறுப்பினர் ஆர்.ரவி உள்பட பலர் கலந்து கொண்டனர். ஒன்றியக்குழு உறுப்பினர் என்.ஆறுமுகம் நன்றி கூறினார்.

**ஈரோடு:** ஈரோட்டில் சூரம்பட்டி நால்ரோடு பகுதியில் ஈரோடு வட்டாரக் கிளை சார்பில் நடைபெற்ற ஆர்பாட்டத்திற்கு வட்டாரச் செயலாளர் ஜி.கல்யாணசுந்தரம் தலைமை வகித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் த.ஸ்டாலின் குணசேகரன் கலந்துகொண்டு கோரிக்கைகளை விளக்கி பேசினார். கட்சியின் ஈரோடு தெற்குமாவட்ட துணைச் செயலாளர் வி.செல்வராஜன், மாவட்டப் பொருளாளர் எஸ்.டி.பிரபாகரன், மாவட்டக் குழு உறுப்பினர்கள் எஸ்.மகாலிங்கம், டி.சோமசுந்திரம் உள்பட பலர் கலந்து கொண்டனர். வட்டாரத் துணைச் செயலாளர் எம்.கல்யாணசுந்தரம் நன்றியுரையாற்றினார்.



- இளசை கணேசன்

# ஒன்றுபட்ட போராட்டத்தின் மூலமே உண்மை வெளிவர முடியும்!



**கள்ளக்குறிச்சி கனியாமூர் பள்ளி மாணவி மரணத்தின் அதிர்ச்சி அடங்கவில்லை அதற்குள்...**

திருவள்ளூர் மாவட்டத்தில் திருத்தணி அருகே உள்ள கீழச்சேரியில் தனியார் பெண்கள் பள்ளியில் சரளா என்ற +2 மாணவி மரணம் !

● தூக்குப்போட்டு மரணமடைந்ததாக கூறப்படுகிறது !

விழுப்புரம் அருகே விக்கிரவாண்டியில் இயங்கிவரும் வரும் தனியார் கல்லூரியில் பி. பார்ம் முதலாம் ஆண்டு படித்த மாணவி ரம்யா மரணம்.

● மாடியில் இருந்து கீழே விழுந்து மரணமடைந்ததாக கூறப்படுகிறது !.

இந்த இரண்டு அதிர்ச்சிகள் இடிபோல் இறங்கியுள்ளன. இந்த மூன்று மரணங்களும் அடுத்தடுத்து நடந்துள்ளன.

வீட்டிலோ, வெளியிலோ, விபத்திலோ நடக்கவில்லை. படிக்கின்ற பள்ளிகளில், கல்லூரியில் நடந்துள்ளன.

எனவே இவை 'நிறுவன மரணங்கள்' ஆகும். !

'இலவசங்கள்' என்று எப்படி இருக்க முடியாதோ ! அதேபோன்று 'தற்கொலை' என்பதும் இருக்க முடியாது !.

'பொருள்கள்' அனைத்திற்கும் உற்பத்தி மதிப்பு, விலைமதிப்பு என்று உண்டு. எனவே எந்தப் பொருளையும் 'இலவசம்' என்று கூற முடியாது.

பொருள்களுக்கே இப்படி 'மதிப்பு' இருக்கும் போது 'மனித உயிர்களுக்கு மதிப்பு' இருக்காதா? மனித உயிர் மதிப்புக்கு விலைமதிக்க முடியாது !

எந்த மனிதனும் விரும்பி தானாக உயிரை மாய்த்துக் கொள் வதில்லை. எந்த மனிதரும் ஏன் புத்தி சுவாதீனம் இல்லாதவர் கூட விரும்பி தன் உயிரை மாய்த்துக் கொள்ள மாட்டார்.

உயிரின் மதிப்பு ஒவ்வொருவருக்கும் நன்கு தெரியும் !

தற்கொலை என்பது மரணம் அடைந்தவர் மீது பழியைப் போட்டு சம்பந்தப்பட்டவர்கள் தப்பித்துக் கொள்வது என்பதுதான்.

கள்ளக்குறிச்சி கனியாமூர் பள்ளியில் நடந்த மரணம் படு கொலையாக இருக்கலாம் ! அல்லது தற்கொலைக்கு தள்ளி இருக்கலாம் !

● கொலை என்றால் குற்றவாளி யார்? கொலைக்கான காரணம் என்ன?

● தற்கொலை என்றால் தற்கொலைக்கு தள்ளியது யார்? தள்ளிதற்கு காரணம் என்ன?

மனித உயிரிழப்பு சமுதாய இழப்பாக கருதப்படுவதால் மரணம் பற்றிய பல்வேறு சந்தேகங்கள் சமுதாயத்திலிருந்து எழுப்பப்படுகிறது. இந்த உரிமை சமுதாயத்திற்கு உண்டு.

குறைந்தபட்சம் மரணத்தோடு தொடர்புடைய, ஒத்துக் கொள்ளக்கூடிய முக்கியமான சந்தேகங்களுக்கு பள்ளி நிர்வாகமும், காவல் துறையும் தரும் விவரங்கள், தகவல்கள் வெளிப்படையாகவும், நம்பத்தகுந்த தாகவும் இருக்க வேண்டும்,

● 12 ம் தேதி இரவு பள்ளியில் பிரின்ஸ்பால் நடத்திய பிறந்த நாள் விழா !

● பிறந்தநாள் விழாவில் பரிமாறப்பட்ட மது விருந்து !

● இதற்குப் பின் இரவில் என்ன நடந்தது?

● நடக்கக் கூடாத ஒன்று நடந்திருக்கிறதா? பார்க்கக் கூடாத ஒன்றை அந்த மாணவி பார்த்து விட்டாளா?

● தாளாளரின் தனயன் சக்தி, சகோதரர் சரண் இருவரும் சம்பவத்திற்குப் பின்பு எங்கே?

● 17ஆம் தேதி நடந்த வன்முறையை காரணம் காட்டி 300 க்கும் மேற்பட்டவர்களை கைது செய்யும் காவல்துறை

சக்தி, சரண் இருவரையும் கைது செய்யாமல் விட்டிருப்பது ஏன்?

● இருவரையும் விசாரணை வளையத்திற்குள் ஏன் கொண்டு வரவில்லை? தடுப்பது யார்?

● நடைபெற்ற வன்முறையில் எந்தவித உயிர் சேதமும் இல்லை !

● மாணவியின் உயிரிழப்பை விட நடந்த வன்முறை பெரிதாக சித்தரிக்கப்படுவது ஏன்?

● பொருள் இழப்பிற்கு இன்சுரன்ஸ் மூலம் ஈடு கட்டப்படும். உயிரிழப்பிற்கு எதை வைத்து ஈடு கட்டுவது?

● போராட்டக்காரர்களே வன்முறையில் ஈடுபட்டார்களா?

அல்லது வன்முறைக் கும்பல் அமைதி வழி போராட்டத்திற்குள் புகுந்து வன்முறையை அரங்கேறியதா?

மாணவியின் மரணத்தை திசைமாற்ற, அடையாளங்களை அழித்தொழிக்க, சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று திமுக அரசு மீது பழி போட வேண்டும் என்கிற நோக்கில் வன்முறை திட்டமிட்டு அமைதிப் போராட்டத்தில் ஊடுருவி இருக்கலாம் அல்லவா?

வன்முறைக்கு முன்பே சமூக வலைதளங்களில் 'ஜஸ்டிஸ் பார் ஸ்ரீமதி'' என்று ட்ரெண்ட் செய்த பின்னணியில் இருந்தவர்கள் யார்?

வன்முறை நடந்தபோது பள்ளியின் பல அறைகள் கதவில் சாவிகளோடு திறந்து கிடந்தது ஏன்?

வன்முறையின் போது இருசக்கர வாகனங்கள் கொளுத் தப்பட்டது ! ஏன்?

வன்முறை நடந்தபோது ''பாரத் மாதா கி ஜே !' என்று கோஷம் எமுப்பப்பட்டதாக கூறப்படுவது உண்மையா?

கருப்பு உடை அணிந்த கும்பல் வன்முறையை நடத்திவிட்டு தப்பி ஓடுவதற்கு காவல்துறையே வழியமைத்துக் கொடுத்தது என்று அந்தப் பகுதி மக்கள் கூறுவது உண்மையா?

இதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி விசாரணை வளையத் திற்குள் கொண்டு வரப்படுமா?

**● <u>பிரேதப் பரிசோதனையில் குறிப்பிடப்படும் மரண நேரத்திற்கும் பள்ளி நிர்வாகம் குறிப்பிடும் மரண நேரத்திற்கும் வித்தியாசம் இருக்கிறதே ஏன்?</u>**

**● <u>உடற்கூராய்வில் போதிய அனுபவம் இல்லாத மருத்துவர்கள் பிரேதப் பரிசோதனை செய்ததாக கூறப்படுவது உண்மையா?</u>**

**● <u>சமூக ஊடகங்கள் மூலம் மாணவி மரணம் குறித்து தவறான கருத்துக்களை பரப்புபவர்கள் கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவார்கள்! என்று அறிவிப்பு வருகிறது.</u>**

**● <u>தவறான கருத்துக்கள் எது? என்பது எதை வைத்து அளவிடப்படுகிறது?</u>**

**● <u>நீதிமன்ற தீர்ப்பு வருவதற்கு முன்பே 'தற்கொலை' என்று சில ஊடகங்களும், சமூக ஊடகங்களில் பலரும் கருத்துப் பதிவிடுகிறார்களே இது சரியா?</u>**

தவறு என்றால் இவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

எழுப்பப்படும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு உரிய பதில் கிடைக்குமா? மரணமடைந்த மாணவிக்கு உண்மையான நீதி கிடைக்குமா? என்பது தெரியாது !

பாசிச வகுப்பு வெறியும், கார்ப்பரேட்டுகளும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இந்திய ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரத்தில் இருக்கிறார்கள்.

பள்ளியின் தாளாளர் ஆர்எஸ்எஸ் அமைப்பின் முக்கிய பிரமுகர் இது மட்டுமல்ல உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் பி.ஏ. வுக்கு நெருக்கமானவர் என்றும் கூறப்படுகிறது.

ஆர்எஸ்எஸ் அமைப்பு ஆக்டோபஸ் போன்றது, ஆக்டோபஸு க்கு ஆரக்கால்கள் எத்தனை? எப்போது எந்த காலை முன் வைக்கும்? என்பது யாருக்கும் தெரியாது !

இதே போன்றுதான் ஆர்.எஸ்.எஸ். சுக்கு எத்தனை முகங்கள்? எந்த நேரத்தில் எந்த முகம் காட்டும்? என்பதும் யாருக்கும் தெரியாது !

ஆர்.எஸ்.எஸ். சுக்கு ஆதரவான ஆட்கள் எல்லா அமைப்புகளிலும், எல்லா அரசியல் கட்சிகளிலும், எல்லா ஊடகங்களிலும், அனைத்து மாநில அரசு களிலும் இருக்கிறார்கள்.

இவர்களின் செயல்பாடுகள் கூட ஒரே மாதிரி இருக்காது, பன்முகங்கள் காட்டுவதாக இருக்கும்.

வெகு மக்கள், ஒடுக்கப்பட்டோர், சமூக நீதி, மதச்சார்பின்மை மற்றும் இடதுசாரி ஆதரவு என்று முகம் காட்டுவார்கள் ! ஏன் சில நேரங்களில் வகுப்புவாத, வலதுசாரி மற்றும் வகுப்புவாத எதிர்ப்பு முகம் கூட காட்டுவார்கள்.

பிரபலங்கள், திறமையாளர்கள், அறிவுஜீவிகள் போன்றவர் களை விரிப்பதை விரித்து தங்கள் வலையில் வீழ்த்தி விடுவார்கள் !

கலவரம், கடுமையான வன்முறை என்பது மட்டுமல்ல மற்ற வர்கள் மீது பழி போட்டு தப்பித்துக் கொள்வது இவர்களின் பிறவிக் குணம் !

எதைப்பற்றியும் கவலைப்படாமல் ஆட்சி அதிகாரத்தை தங்கள் இஷ்ட த்திற்கு வலைப்பார்கள்.

மாநில அதிகாரத்தை மீறி மத்திய அதிகாரத்தை மாநில அரசுக்குள் நுழைத்து ஆதிக்கம் செய்வார்கள் !

ஒன்றிய அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி உச்ச நீதிமன்றத்தையே ஆட்டிப் படைத்தவர்கள் !

இவை எல்லாவற்றையும் மீறித்தான் கள்ளக்குறிச்சி கனியமூர் சக்தி பள்ளியில் மரணமடைந்த மாணவிக்கு நீதி கிடைக்க வேண்டும் !

எந்தக் கொம்பனாலும் தடயங்கள் முழுவதையும் அழித்து விட முடியாது. ஒன்றிரண்டு தடையங்கள் தப்பித்து தலை காட்டவே செய்யும்.

● இறந்துபோன பிரேதம் எழுந்து வந்து பொய் சொல்லாது !

கிடைத்த தடயங்கள் மறைக்கப்படுமா? அல்லது காட்டுவதற்கு மறுக்கப்படுமா? குற்றவாளிகளை தப்பிக்க விடுவார்களா?

நோய் நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்''

''முதலில் வந்த நோயை தீர்க்க வேண்டும் அடுத்து நோய் வராமல் பாதுகாக்க வேண்டும்.''

● மாணவியின் பெற்றோர்கள் மாணவியின் மரணத்துக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் மிக உறுதியாக இருக்கிறார்கள்.

● அதிர்ச்சியடைந்து நிலைகுலைந்த நிலையிலும் மிகத் துணிச்சலாக உச்ச நீதிமன்றத்தின் கதவுகளை தட்டி இருக்கிறார்கள் !

● பெற்றோர்கள், உறவினர்கள், ஊர்மக்கள், சமுதாய அமைப் புகள், அரசியல் கட்சிகள், மாணவர்கள், இளைஞர்கள், மற்றும் பெண்கள் ஒன்றிணைந்து வலுவான எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தி இருக்கிறார்கள் !

இந்த மூன்றும் ஒன்றுபட்டு, வலுவோடும், உறுதியோடும் தொடர்ந்தால் மரணமடைந்த மூன்று மாணவிகளுக்கும் உண்மையான நீதி கிடைக்கும் !

இதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது !

இதுதான் நோய் நாடி !

● கல்வி, ● மருத்துவம், ● போக்குவரத்து

இந்த மூன்றும் தனியாரிடம் இருக்கக்கூடாது அரசு உடமையாக இருக்க வேண்டும்.

நடைமுறையில் இந்த மூன்றும் கார்ப்பரேட்களின் கையில் இருக்கிறது, எனவே கல்வி நிறுவனங்கள் சந்தையாக ஆக்கபட்டு விட்டன. மாணவர்கள் நுகர்வு பொருளாக கருதப்படுகின்றனர் !

நாட்டின் எதிர்காலத்தை வழி நடத்தும் சிற்பிகள் ! சமுதாய வளர்ச்சியின் பிரதான அங்கம் அவர்கள் வெறும் கடை சரக்கு அல்ல !

மாணவர்களின் மதிப்பு, மாண்பு பற்றி இந்த கார்ப்பரேட் கழிகடைகள் கண்டுகொள்ள மாட்டார்கள் ! தெரியாது.

எனவே, கார்ப்பரேட்டுகள் மற்றும் மதவெறியாளர்கள் ஆகியோரிடமிருந்து கல்வி நிறுவனங்களும், மருத்துவ நிறுவனங்களும் மீட்கப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட வேண்டும். இதுதான் நோய்முதல் நாடி !

தொடர்புக்கு: **82204 68816**



- வழக்கறிஞர்
கீ.சு.குமார்

## சென்னை பல்கலைக்கழகத்தில்

# பற்றி எரியும் சாதி தீ

**சென்னை பல்கலைக்கழகம் 174 கல்லூரிகளின் தாய். 87 துறைகளையும், 230 வகை பட்டப் படிப்புகளையும் வழங்கும் இந்தியாவின் மிக மூத்த பல்கலைக்கழகம். 175 ஆண்டு பாரம்பரியத்துடன் சென்னையின் வரலாற்று அடையாளமாகத் திகழ்கிறது.**

நான் சென்னை பல்கலைக்கழகத்தின் மாணவன் என்று சொல்லும் ஒவ்வொரு மாணவனின் உணர்விலும் பெருமையும், உயர்வும் மேலிடுகிறது.

தேசிய தர நிர்ணய கவுன்சிலால் ஐந்து நட்சத்திர தரம் இப்பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஏ.பி.ஜெ. அப்துல் கலாம், ஆர்.வெங்கட்ராமன் உள்ளிட்ட ஐந்து ஜனாதிபதிகளை நாட்டிற்கு இப்பல்கலைக்கழகம் ஈன்றிருக்கிறது. சி.வி.ராமன், சந்திரசேகர் ஆகிய நோபல் பரிசு பெற்றவர்களையும், ராமானுஜம், எஸ்.ஆர்.சீனிவாச வரதன் உள்ளிட்ட கணித மேதைகளையும் நாட்டிற்கு வழங்கிய போற்றுதலுக்குரிய நிறுவனம் சென்னை பல்கலைக்கழகம்.

இத்தகைய போற்றுதலுக்கும் பெருமிதத்திற்கும் உரிய இந்நிறுவனம் இன்று சாதிய பாகுபாடு எனும் சகதியில் சிக்கித் தவிக்கிறது. தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான மாநில தாழ்த்தப்பட்டோர் விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழு, மனித உரிமை ஆணையம், உயர்நீதிமன்றம், இவை அனைத்திலும் பல்கலைக்கழகத்தில் நிலவும் சாதிய பாகுபாடு குறித்து புகார் அளிக்கப்பட்டு பல்கலைக்கழகத்தின் சாதிய போக்கும், தலித் விரோதப் போக்கும் சந்தி சிரிக்கிறது.


தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தைத் தொடர்பு கொண்ட 17 தலித் உதவி பதிவாளர்களின் அழைப்பை ஏற்று பல்கலைக்கழகத்திற்கு நேரில் சென்று ஆவணங்களையும், கள நிலவரங்களையும் ஆய்வு செய்தோம். ஆய்வின் இறுதியில் பல்கலைகழகத்தில் நிலவி வரும் சாதிய பாகுபாடும், தலித் விரோதப் போக்கும் நம்மை அதிர்ச்சி அடைய வைக்கிறது.

இங்கு பாதிக்கப்பட்டோர் கடைநிலை ஊழியரோ, இடைநிலை ஊழியரோ அல்ல. பல்கலைக்கழகத்தின் உயர் பொறுப்பில் இருக்கும் 17 உதவி பதிவாளர்கள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழகத்தின் மொத்த உதவி பதிவாளர்களின் எண்ணிக்கை 31. பணி மூப்பு மற்றும் தகுதி அடிப்படையில் பதவி உயர்வு பெற்று பணி அமர்த்த படவேண்டியவர்களில் 17 பேர் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சார்ந்தவர்கள். இப்பதவிக்குரிய முழு தகுதியான 10+2+3+2 என்ற முறையில் படித்து பட்டம் பெற்றவர்கள். மற்ற 14 பேரும் தலித் அல்லாத இதர சமூகத்தைச் சார்ந்தவர்கள். இவர்களில் பலர் திறந்தவெளி கல்வித் திட்டத்தில் நேரடியாக எம்.ஏ. படித்து உதவி பதிவாளர் பதவிகளை சர்ச்சைகளுக்கு மத்தியில் கைப்பற்றியவர்கள். இவர்களின் பதவி குறித்தும், தகுதி குறித்தும் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்தப் பின்னணியில் பல்கலைக்கழகத்தின் இதர பணியாளர்கள் இந்த 17 உதவிப் பதிவாளர்களுக்கு கீழ் பணியாற்ற வேண்டிய நிலை வந்து விடுகிறது. பணி செய்வது பல்கலைக்கழகமாக இருந்தாலும் உணர்வில் ஊறி இருப்பது சாதி எனும் பாதாள சாக்கடை தானே!

இதர சாதிப் பணியாளர்கள் பலரும் இந்த தலித் பணியாளர்களுக்கு கீழ் பணியாற்ற விரும்பாமல், இவர்களின் பதவி உயர்வை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து பணி உயர்வை தடுக்க தீட்டப்பட்ட சதிகள் இரண்டாண்டு சட்டப் போராட்டத்திற்குப் பின்னர் முறியடிக்கப்பட்டது. இதன் பின்னர், நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் பல்கலைக்கழகம் இவர்களுக்கு உதவிப் பதிவாளர் பணி வழங்கியது. உரிய அறைகளுக்கு பொறுப்பேற்க சென்ற இவர்களுக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி காத்திருந்தது.




இவர்களின் அறை வாயில்களுக்கு மேலாக பெயர் பலகை பொருத்தப்பட்டிருக்க வேண்டும். அதில் பதிவாளரின் பெயர், பொறுப்பு, துறை போன்றவை எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அந்தப் பெயர் பலகை இரவோடு இரவாக அகற்றப்பட்டு வெற்றிடமாக உள்ளது. அறையில் பணி செய்பவர்கள் யார்? என்ன பொறுப்பு? என்ன துறை? என்ற அடையாளம் மறுக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவால் கிடைப்பெற்ற பணி உயர்வின் போது வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் வலுக்கட்டாயமாக நிர்வாகத்தால் பறிக்கப்பட்டுள்ளது.

**சம்பளம் வாங்கும்போது இவர்களுக்கு அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது. சம்பள ரசீது மீது பெயரும், பதவியும் சரியாக அச்சிடப்பட்டிருந்தாலும் வழங்கப்பட்ட சம்பளத் தொகை பழைய பொறுப்புக்கான எஸ்.ஓ. எனப்படும் செக்சன் அலுவலரின் சம்பளமாகவே நீடிக்கிறது. இதற்கு பல்கலைக்கழகத்தில் தரப்பில் சொல்லப்படும் சொத்தைக் காரணம் நம்மை மூக்கால் சிரிக்கத் தோன்றுகிறது. இவர்களின் பணி உயர்வு ஆணை மேல் முறையீட்டில் உள்ளதாம்.**

பணி உயர்வு வழங்கி பணிகளை செய்யத் துவங்கிய பின்னர், அடையாள அட்டையைப் பறிக்கலாமா?

சம்பளத்தைக் குறைக்கலாமா?

பெயர் பலகையை அகற்றலாமா?

தாழ்த்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிரான இத்தகைய வன்செயல்கள் எஸ்.சி./எஸ்.டி. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதியத்தக்க கொடுங்குற்றமாகும். இத்தகைய குற்றம் செய்யும் ஆணவம் பல்கலைக்கழகத்தில் ஊழியர்களுக்கு, நிர்வாகத்திற்கு எங்கிருந்து வருகிறது? யார் பின்னணி? என பல கேள்விகள் நமக்கு எழுகின்றன.

பல்கலைக்கழகத்தின் பல்வேறு நிலைகளில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவரும் உயர் அதிகாரிகளான இவர்களின் மேஜைக்கு வந்து வருகைப் பதிவேட்டில் கையெழுத்து இடுவது நூற்றாண்டு வழக்கம். ஆனால், தலித் அதிகாரிகளின் முன்னால் கையப்பமிட இவர்களின் சாதி வெறி தடுக்கிறது.

பிற சாதி பணியாளர்கள் வருகைப் பதிவேட்டை வெளியே கொண்டுபோய் எல்லோரும் கையெழுத்துப் பெற்று கடைநிலை ஊழியர் மூலமாக பதிவாளர் மேஜைக்கு வருகிறது. தலித் என்ற ஒற்றைக் காரணத்தால் இத்தகைய வன்செயல்கள் இவர்கள் மேல் பல ஆண்டுகளாக தொடர்ந்து திணிக்கப்படுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னால் இதே சென்னை பல்கலைக் கழகத்தில் சாதியப் பாகுபாட்டுடன் அனில் என்கிற தலித் மாணவன் பேராசிரியரை எதிர் கேள்வி கேட்ட காரணத்தால், அக மதிப்பெண்கள் மறுக்கப்பட்டு, தேர்வெழுத அனுமதி மறுக்கப்பட்டு, பல்வேறு சாதிய வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு இடதுசாரி அமைப்புகளால் போராட்டம் நடத்தப்பட்டது. இந்நிலை மாணவர்களிடமும், பல்கலை ஊழியர்களிடமும் மட்டும் அல்ல. பேராசிரியர்கள் மத்தியிலும் சாதியப் போக்கும், தலித் விரோதப் போக்கும் தலைவிரித்து ஆடும் செய்தி நமக்கு வந்த வண்ணம் உள்ளது.

பேராசிரியர் மற்றும் இதர பணியாளர்கள் நியமனத்தில் இட ஒதுக்கீட்டுமுறை முறையாக பின்பற்றப்படுவதில்லை. சுமார் 60 சதவீதத்திற்கும் மேலான பேராசிரியர் மற்றும் பணியாளர் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. காலியாக உள்ள பணியிடங்கள் பற்றிய தகவல் செனட் குழுவில் முன்வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தாழ்த்தப்பட்ட, பழங்குடியின பணியாளர்களுக்கான இடங்களுக்கு தகுதியானவர்கள் கிடைக்கவில்லை என்ற காரணம் கூறி நிரப்பப்படுவதில்லை. இதர பிற்படுத்தப்பட்டோர் பணியிடங்களில் பதவி உயர்வும், பணியிடங்களை நிரப்புவதில் பல்கலைக்கழகம் காட்டும் அக்கறை எஸ்.சி/எஸ்.டி. பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் விவகாரத்தில் அக்கறை இல்லை என்பதை புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

தாழ்த்தப்பட்ட பேராசிரியர்களின் பதவி உயர்வு மூன்றாண்டுகளில் வழங்கப்பட வேண்டும் என்று விதிகள் சொன்னாலும் 5 ஆண்டு முதல் 10 ஆண்டு வரை இவர்களின் பதவி உயர்வு பல்கலைக்கழகத்தால் இழுத்தடிக்கப்படுகிறது.

சாதிய பாகுபாடுகளைக் கையாள்வதற்காக பல்கலைக் கழகத்தால் அமைக்கப்பட்டுள்ள தீர்வுக்குழு மீது யாருக்கும் நம்பிக்கை இல்லை. இக்குழுவுக்கு உரிய பொறுப்பாளர்கள் நியமிக்கப்படவில்லை. நீதிமன்றம், தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் என எங் கெங்கு போராடியும் இங்கு பற்றி எரியும் சாதி தீ அணைந்த பாடில்லை!

திராவிட மாடல் ஆட்சி, சமூக நீதி ஆட்சி என சொல்லப்படும் தமிழக அரசு, போற்றுதலுக்குரிய வரலாற்று சிறப்புகளைக் கொண்ட சென்னை பல்கலைக்கழகம் இத்தகைய சாதிய வன்கொடுமை புகார்களுக்கு ஆளாவதை இனியும் அனுமதிக்க கூடாது.

சென்னை பல்கலைக்கழகம் இதற்கு விரைவில் ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். இல்லையேல், இடதுசாரிகள் பல்கலைக்கழகத்தை முற்றுகையிட்டு முற்றுப்புள்ளி வைக்க நேரிடும்!

தொடர்புக்கு: 99520 23935

# ஆர்.ஆர்.நகரில் சேவைரோடு அமைக்க வலியுறுத்தி கடையடைப்பு, மறியல்

தேசிய நாற்காரச் சாலையில் ஆர்.ஆர்.நகர் உள்ளது. இங்கு ராம்கோ சிமெண்ட் தொழிற்சாலை உள்ளது. அப்பகுதியைச் சுற்றி நான்கு புறமும் ஏராளமான கிராமங்கள் உள்ளன. நாற்கார சாலையில் சேவைசாலை அமைக்க வலியுறுத்தி சிபிஐ உள்ளிட்ட அனைத்து கட்சி மற்றும் வியாபாரிகள் சங்கம் மாவட்ட ஆட்சியரிடம் பலமுறை மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அடிக்கடி விபத்தும் நடந்து வந்தது. உடனே சேவை சாலை அமைக்க வலியுறுத்தி திமுக, சிபிஐ, சிபிஎம், விசிக, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளும், வியாபாரிகள் சங்கம் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் சாலை மறியல் செய்ய முயன்றனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் பாலமுருகன் தலைமையில் ஏராளமான கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் போராட்ட நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். விபத்துகளை தடுக்க சேவைசாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் உறுதியளித்தனர்.



அவையடுத்து அனைவரும் மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

# மாவட்ட மாநாடுகள்




**மதுரை புறநகர்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25 வது மதுரை புறநகர் மாவட்ட மாநாடு ஜூலை 23 அன்று தொடங்கியது. மேலூர், ஒத்தக்கடை, உசிலம்பட்டி, திருமங்கலம் தியாகிகள் நினைவு ஜோதி பேரணியை, மாநில நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.குணசேகரன் எக்ஸ்.எம்.எல்.ஏ. துவங்கி வைத்தார். பொதுக்கூட்டத்திற்கு மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் காளிதாஸ் தலைமை தாங்கினார். மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் முத்துவேல் வரவேற்றார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் சுப்புக்காளை, மெய்யர், ஜெயக்கொடி, தினகரமோகன், சந்தனம், மூர்த்தி, மூக்கம்மாள், கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் எஸ்.குணசேகரன் எக்ஸ்.எம்.எல்.ஏ., தி.இராமசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., விருதுநகர் மாவட்டச் செயலாளர் பொ.லிங்கம் எக்ஸ்.எம்.பி., ஆகியோர் சிறப்புரையாற்றினர். திருப்பரங்குன்றம் ஒன்றிய செயலாளர் விஜயா நன்றி கூறினார். இதில் 700க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இரண்டாவது நாளாக திருப்பரங்குன்றம் அருணகிரிநாடார் மண்டபத்தில் பிரதிநிதிகள் மாநாடு நடைபெற்றது. மூத்த தோழர் இராசுத்தேவர் கொடி ஏற்றி வைத்தார்.

மூத்த தோழர் ஜெயக்கொடி வரவேற்புரையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் மாநாட்டை தொடங்கி வைத்து வாழ்த்திப் பேசினார். மாவட்ட செயலாளர் காளிதாஸ் வேலை அறிக்கையினை வாசித்தார். எஸ்.குணசேகரன் எக்ஸ்.எம்.எல்.ஏ. நிறைவு செய்து பேசினார். மாவட்ட துணைச் செயலாளர் மெய்யர் மாநாட்டின் தீர்மானங்களை வாசித்தார். முத்துவேல் நன்றி கூறினார்.

35 பேர் கொண்ட மாவட்டக் குழுவும், அழைப்பாளர்களாக நான்கு பேரும் தேர்வு செய்யப்பட்டனர், மாவட்டச் செயலாளராக முத்துவேல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு கட்டுமான பணியை உடனே தொடங்க வேண்டும். விளாச்சேரி மொட்டமலை மற்றும் தட்டனூரில் குடியிருப்பவர்களுக்கு உடனே பட்டா வழங்க வேண்டும். திருப்பரங்குன்றம் இரயில்வே மேம்பாலம் கீழ்புறம் அணுகு சாலை உடனே ஏற்படுத்த வேண்டும். முல்லைப் பெரியாறு கால்வாயை தூர்வாரி கண்மாய்களில் தண்ணீரை தேக்க வேண்டும். இராஜகம்பீரம் கண்மாய் தூர்வாரி சுற்றிலும் நடைமேடை அமைக்க வேண்டும். யா.ஒத்தக்கடை தேவர் திருமண மண்டபத்தை மருத்துவமனையாக மாற்ற வேண்டும். திருமங்கலம் கள்ளிக்குடி விவசாயத்திற்க்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் வழங்கிட வேண்டும். செல்லம்பட்டி விவசாயிகள் விளைவித்த நெல்களை அரசே நேரடியாக கொள்முதல் செய்திட வேண்டும். கொட்டாம்பட்டியில் விவசாயம் செய்திட முல்லைபெரியார் கால்வாய்களை கிடாரிப்பட்டி கொட்டாம்பட்டி வரை புதிதாக கட்டமைத்திட வேண்டும். பேரையூர் தாலுகாவில் அரசு அறிவியல் கலைக் கல்லூரி அமைக்க வேண்டும். மேலூர் தாலுகாவில் ரூபாய் ஒரு இலட்சம் கோடி கிரானைட் கொள்ளையை கண்டறிந்த சகாயம் ஐ.ஏ.எஸ் கமிசன் அறிக்கையை வெளியிட வேண்டும். சோழவந்தான் விதை சுத்திகரிப்பு நிலையத்தில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும். அலங்காநல்லூர் பாலமேடு பகுதி விவசாயிகளில் நலன் கருதி முல்லைப் பெரியாறு கால்வாயை சாத்தையார் அணையுடன் இணைக்க வேண்டும். பரவை, துவரிமான் இணைப்பு பாலத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உடனடியாக கொண்டு வர வேண்டும். உசிலம்பட்டி தாலுகாவிற்கு புறவழிச்சாலை அமைக்க வேண்டும். மேலும் திருமங்கலம், யானைமலை ஒத்தக்கடை, கள்ளிக்குடி, உசிலம்பட்டி, வாடிப்பட்டி, அரசு மருத்துவமனைகளை விரிவுபடுத்தி நவீனப்படுத்த வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



**நாமக்கல் :** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நாமக்கல் மாவட்ட 8வது மாநாடு 26.7.22 அன்று திருச்செங்கோடு நகரில் டி.என்.கிருஷ்ணசாமி, சுகுமார், எம்.மீனா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. என்.ஜீவானந்தம் கட்சி கொடியை ஏற்றி வைத்தார், கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் ந.பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. மாநாட்டை துவக்கி வைத்து வழிகாட்டினார். கட்சியின் மாவட்ட செயலாளர் ஆர்.குழந்தான், மாநில கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் எஸ். மணிவேல் ஆகியோர் கலந்து கொண்டனர். மாநாட்டில் 37பேர் கொண்ட புதிய மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது. கட்சியின் மாவட்ட செயலாளராக எலச்சிபாளையம் கே.அன்பு மணி தேர்வு செய்யப்பட்டார்.

# மக்கள் தலைவரின் இலக்கணமும் - இலட்சியமும்



-சி. பாஸ்கர்



**மக்களுக்கான அரசு எப்படி இருக்க வேண்டும் என்று மனிதநேயர் ஆபிரகாம் லிங்கன் விளக்கம் சொன்னார். அது மக்களின் அரசாக - மக்களுக்கான அரசாக - மக்களால் ஆளப்படுகின்ற அரசாக இருக்க வேண்டும் என்றார். மக்களின் சமூக சிந்தனை மற்றும் பொறுப்புணர்வுக்கேற்ற வகையில்தான் தகுதியான அரசு அமையும் என்பது வின்செண்ட் சர்ச்சில் கருத்து.**

இன்றைய நாளில் நம் தேசத்தில் மக்களுக்கான அரசு இல்லை. தகுதியான அரசை உருவாக்கும் அரசியல் விழிப்புணர்வும் மக்களுக்கு இல்லை. முதலாளித்துவத்தின் அத்தனை சீர்கேடும், கேவலமான ஊழல்களும் தேர்தல் முறையையே அழித்து கேலிக்கூத்தாக்கி விட்டது. பெரும்பான்மையான மக்களின் விருப்பத்திற்கு மாறாக, சிறுபான்மையாக வாக்கு பெறும் கட்சி ஆட்சி அமைக்க அமைக்கும் சூழல் உள்ளது.

விகிதாச்சார தேர்தல் முறை நடைமுறைக்கு வந்தால் இந்த அருவருக்கத்தக்க தீமைகள் குறைய வாய்ப்புண்டு. நிச்சயம் இதை நம் தேச ஆதிக்க சக்திகள் செய்யாது. மக்களின் எழுச்சியோடு இணைந்து வளரும் தீரமிக்க தலைவர்கள் நமக்கு நிறைய தேவைப்படுகிறார்கள். அப்படிப்பட்ட அரும்பெரும் காரியங்களை இடதுசாரி இயக்கங்களும், முற்போக்கு சக்திகளும் தான் செய்யமுடியும். இந்தியாவில் எண்ணிலடங்காத மாநிலக் கட்சிகள், ஜாதிக் கட்சிகள், மதச்சார்புள்ள கட்சிகள் புற்றீசல் போல பல்கிப் பெருகிவிட்டன. அரசு அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி மக்களை விலைக்கு வாங்கும் தந்திர கலையை அனைத்து முதலாளித்துவ சிறிய, பெரிய கட்சிகளும் கற்றுத்தேர்ந்து விட்டன. மக்களின் சிந்தனையை சிதறடித்து சமூக அநீதியை எதிர்க்கும் கோபக் கனலை மக்களிடம் நீர்த்துப்போகும் வேலையை அனைத்து முதலாளித்துவ ஊடகங்களும் செய்கின்றன. இடதுசாரி இயக்கங்கள் சுதந்திரமாகவும், சாதுரியமாகவும் மக்களிடம் நெருங்க விடாமல் தடுக்கப்படுகின்றன.

மக்களின் ஆதர்சமான தலைவர்கள் மக்களின் உணர்வோடும், அவர்களின் அபிலாசையோடும் பின்னிப்பிணைந்து வாழவேண்டும். தொடர்ந்து அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களின் சமூக உளவியலை ஆழமாகப் புரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் வலுவான இலட்சிய இலக்கை நோக்கி அவர்களை வழிநடத்திச் செல்ல முடியும் என்பது தோழர் லெனின் சொன்ன அனுபவ மொழி; வழிகாட்டு நெறி.

அவர் மரணத்திலும் மக்களை எப்படி கட்டுப்படுத்தினார் என்பதற்கு ஒரு சான்று உண்டு. அவர் இறந்த பிறகு அவரின் உடல் மாஸ்கோவிற்கு ரயில் மூலம் கொண்டு செல்லப்பட்டது. வழிநெடுகிலும் மக்கள் கூடி அஞ்சலி செலுத்தி கதறி அழுதார்கள். நிலைமை கை மீறி போய்விட்டது. உரிய நேரத்தில் மாஸ்கோ செல்ல முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. சமயோசிதமாக ரயில் ஓட்டுநர் மக்களிடம் பேசினார். நம் தலைவர் லெனின் காலம் தவறாமைக்கு பெயர் போனவர். அதை கண்டிப்பாக வாழ்வில் கடைபிடித்தவர் என்பது உங்களுக்கும் தெரியும். எனவே நீங்கள் அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் பாதையில் தடை போடாதீர்கள் என்று கோரினார்.

மக்கள் கண்ணீர் மல்க அவர் உடலுக்கு வழியனுப்பி வைத்தார்கள். மக்கள் தலைவரின் இலக்கணத்திற்கும் – இலட்சியத்திற்கும் உதாரணமாக வாழ்ந்து காட்டிய மாபெரும் தலைவர் லெனின்.

ரோமானிய பேரரசு கொடிகட்டி கோலோச்சிய காலத்தில் அடிமைகள் சொல்லொன்னா துயரப்பட்டார்கள்; சித்திரவதைக்கு ஆளானார்கள். அவர்களை மீட்க வெஞ்சினம் கொண்டு எழுந்தான் ‘ஸ்பார்டகஸ்’ என்ற மாவீரன். அவன் தலைமையில் திரண்ட அடிமைகள் பெரும் கலகம் செய்து சாம்ராஜ்ஜியத்தையே கலங்கடித்தார்கள். பெரும் படையை திரட்டி அதன் தளபதிகள் அடக்கினார்கள். ‘ஸ்பார்டகஸ்’ கொல்லப்பட்டான். ஆனால், அவனது போராட்டத்தின் விளைவாக பிற்காலத்தில் அடிமை முறை ஒழிக்கப்பட்டது.

எகிப்திய பேரரசின் ஆதிக்கத்திலிருந்து இப்படித்தான் இமயமாய் நிமிர்ந்து நின்று யூதர்களுக்கு விடுதலை பெற்றுத் தந்தான் மோசஸ். மக்கள் மத்தியில் இருந்துதான் இயற்கையாக தலைவர்கள் தோன்றி வளர்கிறார்கள்; மக்களை வழி நடத்துகிறார்கள் என்பது வரலாற்றுச் சான்றுகள். முதலாளித்துவம் தனக்கு சேவகம் செய்யும் கட்சிகளையும், அதன் கங்காணித் தலைவர்களையுமே வளர்த்து காக்கிறது.

சமூக நெருக்கடிகள் முற்றி விண்முட்டும் போது தன்னிகரில்லா மக்கள் தலைவர்கள் வீறுகொண்டு முன்னணிக்கு வரும் பணியை நிச்சயம் வரலாறு செய்யும் என்பது மார்க்சிய அறிஞர் பிளகானவ் கூறும் அனுபவ மொழி.

மிகவும் ஏழ்மையான பழங்குடி இனத்தில் பிறந்து ஆடு மேய்த்த நெல்சன் மண்டேலா எப்படி மாபெரும் மக்கள் தலைவனாய் வளர்ந்தார் என்பதை அறிவோம். இருபத்தி ஏழு ஆண்டுகள் தொடர்ந்து தனிமைச் சிறையில் இருந்து துயரப்பட்டு, இளமையை இழந்து நோய்களோடு முதியவனாக சிறையிலிருந்து வெளி வந்தான். சீற்றம் குறையாத சிங்கமாகத்தான் அந்தத் தலைவன் மிளிர்ந்தான். ஒரு முறை பிரதமர் பதவி வகித்து ஓய்வு பெற்றான். அரசுசாரா தொண்டு நிறுவனத்தில் இணைந்து மக்கள் பணியாற்றினான்.

ஆனால் நம் தேசத்தின் முதலாளித்துவ அரசியல் கட்சிகளும், தலைவர்களும் செய்யும் காரியங்களைப் பார்த்தால் நெஞ்சு பொறுக்கவில்லை. குற்றச்செயலால் குற்றச்சாட்டுக்கு ஆளானவர்கள் நிரம்பி வழியும் களமாக அரசியல் இருக்கிறது. பதவி காலத்தில் குடும்பமே சொத்துக் கொள்ளையடித்து எல்லைமீறி சேர்த்த பணத்தை உலகம் முழுவதும் முதலீடு செய்து வைத்திருக்கிறார்கள். உள்நாட்டில் தங்கள் பினாமிகள் மூலம் சேர்த்து வைத்துள்ள பணம் அதிர்ச்சியை உண்டாக்குகிறது. ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்கி ஆட்சி அமைப்பது, கட்சி நிர்வாகிகளையே விலைக்கு வாங்கி கட்சி பதவிகளை கைப்பற்றுவது, என்பதெல்லாம் இந்திய அரசியலில் அன்றாட தலைப்புச் செய்திகள்.

திறமையற்ற தலைவன் இல்லாத கப்பல் நடுக்கடலில் தத்தளிப்பதுபோல் அதிமுக நிலைகுலைந்து நிற்கிறது. இரு கோஷ்டியின் தலைவர்களும், தலைமைப்பண்பு கொஞ்சமும் இல்லாத விபத்துகால தற்காலிகமாக, செயற்கையான தலைவர்கள். மக்களை ஈர்க்கும் சிறந்த கொள்கை, கோட்பாடுகள் இல்லாதவர்கள். சர்க்கஸ் கூடாரத்தில் கோமாளிகள் செய்யும் கிங்கினி, மங்குனி அரசியல் செய்கிறார்கள்.

கோர்ட் வளாகத்திலும், தேர்தல் ஆணையத்திலும், தில்லி பாதுஷாக்களிடம் கட்சியை நிறுத்திவிட்டார்கள். கட்சி துவங்கிய நாளிலிருந்து வெற்றி வெற்றி என்ற முழக்கத்தோடு புகழ் சிகரத்தை அடைந்தவர் எம்.ஜி.ஆர். மக்களை சந்திக்காமல் வெளிநாட்டில் மருத்துவமனையில் இருந்து கொண்டே வெற்றி வாகை சூட்டி காட்டியவர். வாக்காளர் பேராதரவை இறுதி மூச்சு வரை தக்கவைத்திருந்தார்.

அக் கட்சியின் இன்றைய தலைவர்களுக்கு தலைமைப் பண்புக்குரிய இலக்கணமும் இல்லை; இலட்சியமும் இல்லை. அரசியல் போராட்ட அக்கினித் தடத்தில் முகவரி இல்லாமல் போவது உறுதி.

தொடர்புக்கு: **96007 23726**

# செந்தொண்டர் படை!

– பரிணாமன்

வானத்தின் சிவப்பா இது? வள்ளுவன்
கோபத்தின் சிவப்பா இது?
பூமியின் சிவப்பா இது? செம்படை
புறப்படும் சிவப்பா இது?

நிலவுக்கு நெருப்பை
மூட்டிய சூரியன்
நிலத்திலும் மூட்டிட வாரானோ?
நீர் நிலம் காற்று
தீ வானத்தைச்
சொந்த மக்களிடம் தாரானோ?

செந்தொண்டர் படை எழுகவே!
ஐந்து கண்டமும் ஒன்றாய் இணைகவே!

எந்த நாட்டின் படையு மில்லயிது
இந்திய ரத்தப் படை!
இளைய பாரதம் ஏமாற்றப்பட்டதை
எதிர்த்துத் திரண்ட படை!
விடுதலைக்காக உயிரை தியாகம்
செய்தவர் வெற்றிப்படை!
வேட்டை நடத்தும் கார்ப்பரேட்டுகளை
விரட்டத் துணிந்த படை!
கூலிப் படைகளை முறியடிக்கும் நம்
கொள்கைப் படையிது!
மூலதனம் தந்த ஜெர்மன் ஞானியின்
ஞாலப் படையிது!

அரசியல் சாசனம் நாட்டின் சுவாசம்
அதில் விஷம் கலக்காதே...
ஆட்சி மாற்றமே ஏமாற்றமானது
உழைப்பவர் கொதித்தாரே!
அணுயுகமிதிலும் மனுயுக ஆணவ
வெறிபிடித் தலைந்தாரே...
இமய கங்கையை இந்துத்து வாஎனும்
சிமிழில் அடைப்பாரோ?
இந்தியக் குடிமகன் பூர்வீகத்தை
இன்றேன் ஆராய்ந்தார்?
இலட்சியம் இல்லா வெற்றுக் கும்பல்
எதையோ பீராய்ந்தார்!

ஆட்சி அதிகார அத்து மீறலைத்
தட்டிக் கேட்கும்படை!
அடக்கு முறைகளை சர்வாதிகாரத்தை
முட்டி வீழ்த்தும் படை!
தடைகளைத் தகர்த்து வீரத்
தழும்புகள் கொண்ட படை!
தரணியில் இப்படை போல் எப்படையும்
சாதனை படைத்ததில்லை!
பூமி முழுவதும் விடியும்வரை
போரிடும் படையிது...
போரற்ற உலகம் காண்பதற்கே
ஏங்கித் தவிப்பதிது!

# மண்ணுக்கேற்ற மார்க்சியம் எ



- எஸ்.செல்வகுமார்

**சமீப நாட்களில் கவனத்தையும், விவாதத்தையும் கோரும் சொற்பிரயோகம் ஒன்று முன்னணிக்கு வந்து இருக்கிறது.**

''மண்ணுக்கேற்ற மார்க்சியம்'' என்பது தான் அந்தச் சொற்பிரயோகம். இந்தச் சொற்பிரயோகம் கடந்த காலங்களிலும் உலா வந்திருக்கிறது. அப்போது இதனை எதிர்கொண்ட முறைகளையும், கட்டுரைகளையும் திரும்ப வாசிக்கக் கிடைக்கச் செய்வதுடன் இன்றைய காலத்திற்கேற்றவாறு மீண்டும் அது குறித்து உரையாடத் துவங்குவது அவசர அவசியமானதாகும்.

அதன் காரணமாகவே, ''மண்ணுக்கேற்ற மார்க்சியம்'' என்ற சொல்லாடல் சரியானது தானா? அதைப் பயன்படுத்துவதில் என்ன தவறு? மார்க்சிய சிந்தனை முறைகளை முன்னெடுப்பதற்கு உதவுகிறதா? அல்லது தடையாக இருக்கிறதா? என்பதைப் பற்றிக் கொஞ்சம் சிந்திக்க வேண்டியது அவசியமானதாகும்.

மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்ற சொல்லைப் பயன்படுத்தும் நபர்கள் எந்த அர்த்தத்தில் அதைப் பயன்படுத்துகிறார்கள் என்று தேடினால், அது குறித்து தெளிவான விளக்கங்கள் கிடைப்பதில்லை. விளக்க முற்படும் பலருடைய எழுத்துக்களும் குழப்பம் நிறைந்தவையாகவே இருக்கின்றன. முடிவாக ஒரு தீர்மானகரமான வழியைக் சொல்லாமல் விருப்பப்பட்டதை எல்லாம் எழுதி முடித்து விட்டு கடைசி வாக்கியமாக ''எனவே, மண்ணுக்கேற்ற மார்க்சியம் அவசியம்'' என்று வலியுறுத்துகிறார்கள்.

தெளிவற்ற முறையில் முன்வைக்கப்படும் தகவல்களை எல்லாம் தொகுத்து, அதனைத் தத்துவம் மற்றும் நடைமுறை என இரண்டிலும் பொருத்திப் பார்த்து விடை காண முயல்வோம்.

தத்துவார்த்த தளத்தில் மார்க்சியத்தை மண்ணுக்கேற்ப மாற்றியமைக்க முடியுமா? என்று யோசிக்க வேண்டுமென்றால் முதலில் தத்துவம் என்றால் என்ன? மார்க்சியம் அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட ஒரு சமூக விஞ்ஞானத் தத்துவம் என்று ஏன் அழைக்கப்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். அப்போது தான் அதை மண்ணுக்கேற்ப மாற்றியமைக்க வேண்டுமா? மண்ணுக்கேற்ப மாற்றியமைக்க முடியுமா? என்று முடிவு செய்ய முடியும்.

தத்துவம் என்றால் என்ன? என்ற கேள்விக்கு பலரும் பலவிதமான பொருள் சொல்லி இருந்தாலும் கிடைத்த விளக்கங்களிலேயே மிகச்சிறப்பானதும், மிகத்தெளிவானதுமான விளக்கம் என்பது ஜார்ஜ் பொலிட்சர் அளித்த விளக்கமான ''எவற்றையெல்லாம் நடைமுறையில் மெய்ப்பித்துச் சாதிக்க விரும்புகிறோமோ, அவற்றைப் பற்றி நாம் பெற்றிருக்கும் ஞானம்தான் தத்துவம்'' என்பது தான்.

அந்த வகையில், மனித சமூகம் இதுவரை கடந்து வந்த வரலாற்றையும், அதன் நிகழ்கால, எதிர்காலப் போக்குகளையும் மார்க்சியத்தின் மூன்று அடிப்படைகளான

1. இயங்கியல் பொருள்முதல்வாதம்
2. அரசியல் பொருளாதாரம்
3. விஞ்ஞான சோசலிசம்

என்று விரிவாக விஞ்ஞானப்பூர்வமான முறையில் மார்க்சிய தத்துவம் விளக்குகிறது.

**மேற்கண்ட அடிப்படைகளைக் கவனத்தில் கொண்டு, விஞ்ஞானப்பூர்வமான இன்னொரு தத்துவத்தோடு சம்பந்தப்படுத்தி விளங்கிக் கொள்வதற்குப் பதிலாக உயிரியல், இரசாயனம், பௌதீக தத்துவங்களின் துணையோடு செயல்பட்டு அதை எதார்த்தத்தில் பொருளாகப் படைத்துத் தரும் விவசாயத்தோடு தொடர்புபடுத்தி மண்ணுக்கேற்ற விவசாயம் என்பதைப் போல மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்ற வாதத்தையை முன்வைக் கிறார்கள்.**

அதனை நிறுவுவதற்கான வாதங்களை அவர்கள் முன் வைக்கிறபோது அமெரிக்காவில் ஆப்பிள் விளையும், ஈரோட்டில் அரசாணிக்காய் தான் விளையும். எனவே, எப்படி மண்ணுக்கேற்பத்தான் ஒரு பொருளை விளைவிக்க முடியுமோ, அப்படியே தான் மண்ணுக்கேற்ப மார்க்சியத்தை மாற்றியமைக்க வேண்டும் என்கிறார்கள்.

இப்படிப்பட்ட கருத்துக்களைப் பொருள்முதல்வாத கருத்தாகக் கருத முடியாது. அவற்றை கருத்துமுதல்வாதமாகத்தான் கருத வேண்டும். ஏனென்றால் இன்று தவிர்க்கவே இயலாமல் நாம் பயன்படுத்தும் மிளகாய் பொலீவியா – மெக்சிகோவிலிருந்து வந்தது, தக்காளி பெரு – ஈக்வடாரிலிருந்து வந்தது, நிலக்கடலை பொலீவியாவின் தென்பகுதி – அர்ஜெண்டீனாவின் வடமேற்குப் பகுதியிலிருந்து வருகை தந்த பொருட்கள்.

இதன் அடிப்படையிலிருந்து புரிந்து கொள்ள வேண்டியது, ஒரு சீதோஷ்ண நிலை நிலவும் பகுதியில் விளையும் பொருட்கள், அதே சீதோஷ்ண நிலை நிலவும் வேறு பகுதியிலும் விளைவிக்க முடியும் என்று விவசாய உற்பத்தியில் நடைமுறைப்படுத்திக் காட்டி இருக்கிறார்கள்.

அமெரிக்காவில் விளையும் ஆப்பிள் இந்தியாவில் சிம்லா, காஷ்மீர் போன்ற இடங்களில் விளைகின்றன. மேலும், வளைகுடா நாடுகளில் விளையும் பேரீட்சை இந்தியாவின் பல பகுதிகளிலும் விளைவிக்கப்படுகிறது.

உண்மைமைக்குப் புறம்பாக, கற்பனையில் முன்வைக்கப்படும் கருத்துக்கள் கருத்துமுதல்வாதம் என்று ஏராளமான விசயங்களில் மார்க்சியம் நிரூபித்து இருக்கிறது.

மார்க்சியம் விஞ்ஞான ரீதியில் சமூகத்தை ஆய்வு செய்யும் தத்துவம் ஆகும். எனவே, அதை அதே வகையில் செயல்படும் இன்னொன்றோடு ஒப்பீடு செய்தால் தான் பொருத்தமாக இருக்கும்.

மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்பதை வலியுறுத்துபவர்களின் இன்னொரு புரிதல் மார்க்சியம் என்பதைக் கண்டறிந்தவர்கள் ஐரோப்பியர்கள். அவர்கள் அவர்களுடைய வாழ்வியல் சூழ்நிலைகளின் மூலமாக அந்தப் பிரதேசத்திற்குத் தகுந்த ஒன்றைக் கண்டறிந்து இருக்கிறார்கள். அது இந்தியச் சூழ்நிலைக்குப் பொருந்தாது. எனவே, இந்திய மண்ணிற்கு ஏற்றபடி மாற்றியமைக்க வேண்டும். எனவே, மார்க்சியத்தை மண்ணுக்கேற்ப மாற்ற வேண்டும் என்று தொடர்ந்து எழுதியும் பேசியும் வருகிறார்கள்.



மார்க்சியம் என்பது ஒரு அறிவியல் முறை. அது சமூகத்தை அறிவியல் முறைப்படி ஆய்வு செய்ய உதவும் ஒரு வழிகாட்டி என்பதை ஒப்புக்கொள்ள மறுப்பதால் தான் மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்று குழப்புகிறார்களோ என்றும் நினைக்கவேண்டி இருக்கிறது.

அதை ஏதேனும் ஒரு உதாரணத்தோடு விளக்க முற்பட்டால், உதாரணமாகச் சொல்லப்பட்ட விசயத்தை பிடித்துக்கொண்டு அந்த உதாரணத்தை ஆய்வு செய்யக் கிளம்புகிறார்கள் அல்லது அந்த உதாரணத்தைக் கிண்டலடித்துக் கடந்து போகிறார்கள்.

மார்க்சியத்தை நவீன விஞ் ஞானக் கண்டுபிடிப்போடு ஒப்பிட் டால் ஓரளவு தெளிவு பெற வாய்ப்பு கிடைக்கும். உதாரணத்திற்கு மின்சாரம் என்பது ஒரு அறிவியல் கண்டுபிடிப்பு. அதை அனல், நீர், காற்று என்று ஏதேனும் ஒரு முறையில் உற்பத்தி செய்ய முடியும். ஆனால் மின்சாரத்தைப் பயன்படுத்தும் யாரும் அது மண்ணுக்கேற்ற மின்சாரமா? என கேள்வி கேட்பதே இல்லை. எப்படி மண்ணுக்கேற்ற மின்சாரம் என்ற ஒன்று இல்லையோ அப்படியேதான் மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்ற ஒன்று கிடையவே கிடையாது. அதை நடைமுறைப்படுத்தும் முறைகளை, விளக்கப் பயன்படுத்தும் உதாரணங்களை வேண்டுமானால் மண்ணுக்கேற்ப, மொழியில் உள்ள சொற்களின் வளத்திற்கு ஏற்ப பயன்படுத்தலாம்.

ஒட்டுமொத்த மனித சமூகத்தின் உற்பத்தி முறையை, உற்பத்தி உறவுகளை விளக்கும் ஒரு தத்துவத்தை ஐரோப்பாவின் சூழ்நிலைக்கேற்ப உருவாக்கப்பட்ட தத்துவம் என்று சுருக்கிப் புரிந்துகொள்ளும் தவறான சிந்தனையிலிருந்து வெளிவந்து மிகச்சரியான முறையில் புரிந்துகொள்ள வேண்டும் அல்லது அது ஐரோப்பாவின் உற்பத்தி முறை, உற்பத்தி உறவுகளை மட்டுமே விளக்குகிறது என ஆய்வுப்பூர்வமாக நிறுவ வேண்டும். ஆய்வுப்பூர்வமாக நிறுவ முடியாமல் தான் மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்ற கருத்தை முன்வைப்பவர்கள் கற்பனையான கட்டுக்கதைகளை முன்வைக்கிறார்கள். அப்படிப்பட்ட கருத்துக்களை தத்துவார்த்த தளத்தில் கருத்துமுதல்வாதிகளின் கருத்தாகக் கருதி மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்பது உறுதியாக நிராகரிக்கப்பட வேண்டும்.

# தனியார் கூரி
# வளர்க்கும் முயற்சி



நீ.சு.பெருமாள்

**அரசு தொலை தொடர்பு நிறுவனமான பிஎஸ்என்எல் நிறுவனத்தை கிட்டத்தட்ட மோடியின் ஒன்றிய அரசு சீரழித்து விட்டது...**

தனியார் தொலைபேசி நிறுவனமான ஜியோ நினைத்தால் மட்டுமே பெருவாரியான இந்தியர்கள் செல்பேசியில் பேச முடியும் என்கிற அளவுக்கு அம்பானி குழுமம் தன்னுடைய கரங்களுக்குள் அனைவரையும் கொண்டு வந்து விட்டது.



இப்போது.... தலைமை தபால் நிலையங்களின் செயல்பாடுகளை குறிப்பாக ஆர்.எம்.எஸ். பிரிவு சிதைத்து விட்டால் ஒட்டு மொத்த தபால் சேவையும் பிஎஸ்என்எல் போல் காணாமல் போகும் சூழல் ஏற்படும். அதற்கான வேலைகளில் ஒன்றிய அரசு ஈடுபட்டுள்ளது. குறிப்பாக பரமக்குடியில் உள்ள ஆர்.எம்.எஸ். நிலையத்தை மூடும் வேலையை தொடங்கி விட்டது. பரமக்குடி அஞ்சல் பிரிப்பக அலுவலகம் 1984 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. பரமக்குடி ரயில் நிலையம் மற்றும் பேருந்து நிலையம் ஆகியவற்றிற்கு அருகாமையில் பைகளை வாங்குவதற்கும் பிரித்து அனுப்புவதற்கும் வசதியாக அமைக்கப்பட்டுள்ளது.

பரமக்குடி தேர்வு செய்யப்பட்டு இங்கு அஞ்சல் பிரிப்பு சேவைகள் கடந்த 38 ஆண்டுகளாக நடந்து கொண்டு வருகிறது.

ராமநாதபுரம் அஞ்சல் கோட்டத்தின் கீழ் 59 துணை அஞ்சல் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

19 அஞ்சல் அலுவலகங்கள் பரமக்குடி உப கோட்டம் கீழும் 40 அஞ்சல் அலுவலகங்கள் ராமநாதபுரம் உப கோட்டத்தின் கீழும் இயங்கி வருகின்றது. மேல் குறிப்பிட்ட அனைத்து அஞ்சல் அலுவலகங்களுக்கும் பரமக்குடி தபால் பிரிப்பகம் ஒன்றுதான் தபால் பைகளை அனுப்பியும் தபால் பைகளை வாங்கிக் கொண்டும் வருகிறது.

சுமார் 20க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இந்த அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டு வருகின்றனர். நாளொன்றுக்கு 2500 க்கும் மேற்பட்ட பதிவு தபால்கள் மற்றும் தோராயமாக 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாதாரண தபால்களையும் கையாண்டு வருகிறது. மாலை 5.30மணி முதல் அதிகாலை 5 மணி வரை தபால் புக்கிங் செய்யப்பட்டு வருகின்றது. பள்ளி கல்லூரி மாணவர்கள், அரசு ஊழியர்கள், பகல் நேரங்களில் அலுவலக வேலை பார்ப்பவர்கள் என அனைவரும் தங்கள் வேலை நேரத்தை முடித்த பின்பு மாலை நேரங்களில் தபால் புக்கிங் வசதியை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த அலுவலகத்தில் புக்கிங் செய்யப்படும் அனைத்து தபால்களும் மறுநாள் தமிழ்நாட்டின் எல்லா மூலைகளுக்கும் சென்று சேரும் என்பது திண்ணம். ராமநாதபுரம் சுமார் 4104 சதுர கிலோமீட்டர் பரப்பளவு உடையது இது ஒன்பது தாலுகாக்களையும் 38 பிர்க்காக்களையும் 400 கிராமங்களையும் உடையது. சுமார் 14 லட்சத்து 30 ஆயிரத்து 150 பேர் ஜனத்தொகை உடையது.

பரமக்குடி அஞ்சல் பிரிப்பு அலுவலகம் கிழக்கு பகுதியாக 97 கிலோ மீட்டர் தொலைவு உடைய ராமேஸ்வரம் மேற்கு பகுதியில் 30 கிலோமீட்டர் தொலைவு வரையிலும் தெற்கு பகுதி 65 கிலோ மீட்டர் தொலைவில் வரையிலும் வடக்காக 90 கிலோ மீட்டர் தொலைவு வரையிலும் உடைய பொதுமக்கள் வசிக்கும் பகுதியின் தபால்களை கையாளுகிறது.

தற்பொழுது ராமநாதபுரம் மாவட்டத்தில் புக்கிங் செய்யப்படும் அனைத்து விரைவு தபால்களும் மதுரைக்குச் சென்று தபால்கள் அலுவலகம் வாரியாக பிரிக்கப்பட்டு அங்கிருந்து மீண்டும் பரமக்குடிக்கு திரும்பி வந்து பட்டுவாடா செய்யப்படுகிறது.

இந்த தபால்கள் அனைத்தும் பரமக்குடியிலேயே பிரிக்கப்பட்டு அஞ்சல் அலுவலகம் வாரியாக அனுப்பப்பட்டால் அடுத்த நாள் அனைத்து தபால்களும் எந்தவித கால விரையம் இன்றி பட்டுவாடா செய்யப்பட்டிருக்கும்.

நிலைமை இப்படி இருக்க தற்பொழுது பதிவு தபால் சேவைகளையும் விரைவு தபால் போன்று மதுரை வரைக்கும் கொண்டு சென்று மீண்டும் கொண்டுவரக்கூடிய நோக்கத்தில்

## வெளியேறு, வெளியேறு மோடி அரசே வெளி

## பாசிச மோடி அரசே வெளி

# ...ன்று ஒன்று இருக்கிறதா?




தத்துவார்த்தத் தளத்தில் வலியுறுத்தவில்லை, அந்தந்த நாடுகளின் சூழ்நிலைக்கேற்ப நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதைத் தான் மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்று சொல் கிறார்கள் என்றால் முதலில் நடைமுறை என்றால் என்ன? என் பதைப் பற்றிய ஜார்ஜ் பொலிட்சரின் வரையறையைக் கூர்மையுடன் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு விஷயத்தை அல்லது தத்துவத்தை எதார்த்தத்தில், வாழ்க்கை அனுபவத்தில் வெளியிடச் செய்யும் செய்கையைத்தான் நடைமுறை என்கிறோம். உதாரணமாக, தொழிலும், விவசாயமும் என்ன செய்கின்றன? இரசாயனத் துறையையோ அல்லது பௌதீகத் துறையையோ அல்லது உயிரியல் துறையையோ சேர்ந்த சில தத்துவங்களை அவை எதார்த்த அனுபவமாகச் (பொருளாக) செய்து தருகின்றன. அப்படியென்றால் மார்க்சியத்தை நடைமுறைப்படுத்துவதில் கையாளும் முறைகளை மண்ணுக்கேற்ற மார்க்சியம் என அழைக்க முடியாது. மண்ணுக்கேற்ற நடைமுறை என்று வேண்டுமானால் சொல் லிக்கொள்ளலாம். அதை மண்ணுக் கேற்ற மார்க்சியம் என்ற சொற்களால் பயன்படுத்த முடியாது.

ஒரு தத்துவத்தை விளக்கிச் சொல்லி, அதை மக்களை ஏற்கச் செய்யும் நடைமுறைகள் என்று வரும் போது ''மண்ணுக் கேற்ற மார்க்சியர்கள்'' முன்வைக்கும் இன்னொரு வாதம் லெனின் ரஷ்யாவிற்கு ஏற்றவாறும், பிடல் காஸ்ட்ரோ கியூபா விற்கு ஏற்றவாறும், ஹோசிமின் வியட்நாமிற்கு ஏற்றவாறும் நடை முறைப்படுத்தினார்கள் என்று விளக்கமளிக்கிறார்கள்.

**உண்மையில், இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்தியா விற்கு ஏற்றபடியான நடைமுறைகளைத்தான் முன்னெ டுக்கி றார்கள். அவை மத்தியில் ஆட்சியை நிறுவும் அளவிற்கு வெற்றியடையவில்லை என்பதற்காக, நடைமுறைகள் இந்திய மண்ணிற்கு ஏற்ப இல்லை என சொல்ல முடியாது அல்லவா? பல மாநிலங்களில் வெற்றிகரமாக ஆட்சியை அமைத்திருக்கிறோம். பல காரணங்களால் ஆட்சியை இழந்தும் இருக்கிறோம். எனவே, இந்திய மண்ணுக்கேற்ப நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்பதில் இன்னொரு மறைவான கருத்தும் புதைந்து இருக்கிறது.**

இந்தியாவில் பல்வேறு வகையான மத, ஜாதி அமைப்புகள் இருக்கின்றன. அதையொட்டி தத்துவம் என்ற வரையறைக்குள் வரவே இயலாத பல தனிநபர்களின் கருத்துக்களைத் தொகுத்து அதை தத்துவங்கள் என்று நிறுவுவதற்கு முயல்கிறார்கள், அதை மக்களிடம் பரப்பி அதன் மூலம் மக்களைத் திரட்டியும் வருகிறார்கள்.

சில பொதுவான மக்கள் பிரச்சினைகள முன்வைத்து ஜன நாயக சக்திகள் என்கிற அளவில் அவற்றோடு இணைந்து கம்யூனிஸ்ட் கட்சிகள் போராட்டங்களை நடத்தி வருகின்றன. அவற்றோடு இணைந்து போராட்டங்களை நடத்தும் அதே வேளையில் தத்துவார்த்தத் தளத்தில் அவற்றின் தவறுகளை, போதாமைகளை விமர்சித்தும் வருகிறார்கள். விமர்சிப்பதைக் கைவிட்டு அந்தத் தத்துவங்களை அங்கீகரிக்க வேண்டும், என்பதைத்தான் வேறுவேறு வார்த்தைகளில் முன்வைத்து இறுதியாக முடிக்கும் போது மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்று சொல்லி வருகிறார்கள்.

அவைகளைத் தத்துவார்த்த தளத்தில் தத்துவமாக நிறுவாமல் அங்கீகரிக்கக் கோருவது நியாயமும் அல்ல, அது சரியான மார்க்சிய அணுகுமுறையும் அல்ல.

ஜனநாயக சக்திகள் என்கிற அளவில் அவற்றோடு இணைந்து வேலை செய்வதில் சரியான அணுகுமுறைகளைத்தான் கம்யூ னிஸ்ட் கட்சிகள் மேற்கொள்கின்றன. நடைமுறை வேலை களில் பங்கேற்கும் பிற தத்துவமல்லாத, அடையாளத்தை முன் வைத்து திரட்டப்பட்ட மக்கள் திரளின் எண்ணிக்கையைக் காட்டி மார்க்சியத்திற்கு இவை பயன்படும் என்று சொல்வது மார்க் சியத்தைச் சரியான முறையில் கற்றுக்கொள்ள முடியாதவர்களின் தத்துவ பலவீனமே காரணமாக இருக்க முடியும். தத்துவத்தில் பலவீனமாக இருப்பவர்கள் தாங்களும் குழம்பி மற்றவர்களையும் தங்கள் எழுத்தாற்றலால் குழப்பமடைய வைக்கிறார்கள்.

முதலாளித்துவ நலன்களைத் தங்கள் கொள்கையாக வைத்து இருப்பவர்களையும், தனிமனிதர்களின் அடையாளங்களையும், மத ஜாதி அடையாளங்களையும் பயன்படுத்தித் திரட்டப்பட்ட மக்கள் எண்ணிக்கையைக் காரணம் காட்டி அவற்றை அங்கீ கரித்தால் தான் இந்தியாவில் மார்க்சியம் வளரும் என்ற ஒரு விவாதத்தை முன்வைப்பது மக்களை மார்க்சியத்தை நோக்கி வரவைப்பதற்காக வேலை செய்வோரையும், மக்களையும் குழப்பும் வேலையாகும்.

எல்லா வகையான அடையாளங்களையும் விட்டு வெளியேற மக்களுக்கு மார்க்சிய தத்துவத்தை கற்றுக்கொடுப்பதே மார்க்சியம் கற்றுக்கொண்டவர்களின் முதன்மையான பணியாக இருக்க வேண்டும்.

விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை உலகில் எவராலும் மார்க்சியம் முன்வைத்த தத்துவார்த்த விளக்கங்களுக்கு எதிராக இன்னொரு கருத்தை நிறுவ முடியவில்லை. அதற்குப் பதிலாக மார்க்சியத்தை குழப்புவதையும், அதன் கருத்துக்களை சிதைப்பதையும், திரித்து விளக்கமளிப்பதையே பிரதான வேலையாக முதலாளித்துவம் செய்துவருகிறது.

மார்க்சியம் முன்வைக்கிற ஒவ்வொரு கருத்துக்களுக்கும் முன்னும், பின்னும் ஏதேனும் வார்த்தைகளை இணைத்து மார்க்சியத்தின் பெயராலேயே மார்க்சியக் கருத்துக்களை மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்பது போன்று திரிப்பதையும், குழப்புவதையும் மார்க்சியம் படித்தவர்கள் கைவிடவேண்டும்.

இத்தகைய திரிபுவாத கருத்துக்களுக்கு எதிராக தோழர் தோதாத்ரி அவர்கள்: ''மார்க்சியம் ஒரு விஞ்ஞானம். அது நியூட்டனின் அல்லது ஐன்ஸ்டைனின் விதியைப் போன்றது. தத்துவரீதியாக அது இயங்கியல், பொருள்முதல்வாதம் சமுதாய ரீதியாகப் பொருளாதார உறவுகள் தாம் எல்லாவற்றிற்கும் அடிப்படையானவை என்பது மார்க்சியம். மாறுதல்களை ஏற்றுக்கொள்வது மார்க்சியம். வர்க்கப் போராட்டம்தான் சமுதாயத்திற்கு உந்துவிசை என்பது மார்க்சியம். சுரண்டலற்ற சமுதாயத்தினைப் பற்றிக் கூறுவது மார்க்சியம். மற்றவை அப்படியல்ல. பெண்ணியம் பெண் விடுதலை பற்றியது. தலித்தியம் விளிம்புநிலை மக்கள் பற்றியது. பெரியாரியம் அடிப்படை மாறுதலை வலியுறுத்தாமல், சமூக சீர்த்திருத்தக் கருத்துகளை முன்வைப்பது. இவற்றிற்கும் மார்க்சியத்திற்கும் வேறுபாடுகள் உண்டு. இவை முற்போக்கானவைதாம் என்றாலும், இவை மார்க்சியத்தினை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. பெண்ணியக் கொள்கைகளில் மார்க்சியம் சார்ந்ததும் உண்டு; அதிலிருந்து வேறுபட்ட கொள்கையும் உண்டு. தலித்தியத்தில் மார்க்சியம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவர்கள் கூறும் காரணம் அது வன்முறையானது என்பதாகும்.

பெரியாரியவாதிகளும் மார்க்சியத்தினை அவர்களின் வசதிக்கு ஏற்ப மாற்றிக் கொள்கிறார்கள். அது பெரியாரிய மார்க்சியம் எனப்படுகிறது. இப்படி முரண்படும் கோட்பாடுகளை மார்க்சியத்துடன் இணைப்பது என்பது சாத்தியம்தானா?

மேலும் இந்த வாதத்தினை முன்வைப்பவர்கள் மார்க்சியம், பெண்ணியம், பெரியாரியம், தலித்தியம் ஆகியவற்றைச் சமமாகவே காண்கின்றனர். இது சரியான பார்வை ஆகாது. மார்க்சியம் அடிப்படையானது. இதன் உதவியுடன் சகலத்தையும் விளக்கமுடியும்.

ஆனால், பெண்ணியத்தையோ, பெரியாரியத்தையோ வைத்துக்கொண்டு எல்லாவற்றையும் விளக்கமுடியாது. பெண்ணியம், பெரியாரியம், தலித்தியம் ஆகியன முன்வைக்கும் கருத்துகள் அந்தந்தத் துறைகளுக்குப் பொருத்தமானவையே. இவற்றில் ஒட்டுமொத்தப் பார்வை என்பது இல்லை. இவற்றில் உண்மை உண்டு. ஆனால் அந்த உண்மை துறை சார்ந்த உண்மையே தவிர சகலத்திற்கும் பொருத்தமான உண்மை யில்லை. மார்க்ஸ் கூறும் வர்க்கப் பார்வை எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். மற்றவை அப்படி அல்ல. எனவே அடிப்படையான ஒன்றைத் துறை சார்ந்த பார்வையுள்ளவற்றிற்குச் சமமாக மார்க்சியத்தைக் காண்பது சரிதானா என்ற கேள்வி எழுகிறது. இதற்கு மாறாக, மார்க்சியத்துடன் பெண்ணியம், தலித்தியம், பெரியாரியம் என்று எல்லாவற்றையும் இணைத்தாலோ இவற்றிற்குச் சமமாக மார்க்சியத்தைப் பார்த்தாலோ மார்க்சியம் வினோதமான உடையணிந்த கோமாளியாகவே இருக்கும் என்பதைப் புரிந்துகொள்வோம்'' என்று கூறுகிறார்.

மார்க்சிய கருத்துக்களை குழப்புவது, திரிப்பது போன்ற எந்தச் சின்னஞ்சிறு வேலைகளும், முயற்சிகளும் முதலாளித்துவவாதிகள் செய்துவரும் மார்க்சியத்திற்கு எதிரான பணிகளுக்கு உதவுமே தவிர, அவை மார்க்சியத்தை வளப்படுத்த உதவவே உதவாது.

எனவே, மார்க்சியத்திற்கு எதிராகவும், மார்க்சியத்திற்கு ஆதரவான கருத்து என்ற போர்வையிலும் மார்க்சியத்தைக் குழப்ப முன்வைக்கப்படும் ஒவ்வொரு மிகச்சிறிய முயற்சிகளையும், கருத்துக்களையும் மிகக் கூர்மையுடன் கவனித்து முறியடிப்பது ஒன்றே மார்க்சியர்கள் செய்ய வேண்டிய மிக முக்கியமான பணியாகும். மார்க்சிய தத்துவத்தை முன்வைத்து வர்க்க அரசியலை நோக்கி மக்களைப் பெருந்திரளாக அணிதிரட்டுவோம். மார்க்சியம் எப்போதும் வெற்றியே பெறும்!

தொடர்புக்கு: **98432 35345**

---

# ...யர் சேவையை ...யில் மத்திய அரசு...




அஞ்சல் துறையையும் பொதுமக்கள் சேவையையும் சீரழிக்க கூடிய நோக்கில் திட்டங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஓர் அஞ்சலகத்தில் புக்கிங் செய்யப்படும் ஒரு விரைவுத்தபால் ராமநாதபுரம் மாவட்டத்தின் மற்ற பகுதிகளுக்கு சென்று சேருவதற்கு மதுரை வரைக்கும் சென்று வர வேண்டி உள்ளது. இதனால் தபால்கள் பட்டுவாடா செய்வதற்கு தேவையற்ற நேர விரையும் ஆகின்றது.

ராமேஸ்வரத்தில் பதிவு செய்யப்பட்டு ராமநாதபுரம் தலைமை அஞ்சல் அலுவலகம் சென்று பட்டுவாடா ஆக வேண்டிய தபால்கள் அனாவசியமாக 170 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மதுரை அஞ்சல் பிரிப்பக்கத்திற்கு சென்று மீண்டும் 100 கிலோமீட்டர் திரும்பி வந்து ராமநாதபுரம் தலைமை அலுவலகத்தை சென்றடைந்து பட்டுவாடா ஆகும். முக்கியமான அவசர காலங்களில் அனுப்பப்படும் தபால்கள் கூட இந்த நீண்ட தொலைவு காரணமாக சரியான நேரத்தில் சென்றடைய முடியாமல் தபால்கள் தேங்கி நிற்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

தற்பொழுது விரைவு தபால் போன்று பதிவு தபால் சேவைக்கும் (அஞ்சல் துறை சேவைக்கும்) ஜிஎஸ்டி வரி அமல்படுத்தப்பட இருக்கிறது. இதன் விளைவாக ரூபாய் 22 க்கு பதிவு செய்யப்பட்டு வருகிற தபால்கள் அனைத்தும் கூடுதலாக விலை ஏற்றம் செய்யப்பட்டிருக்கும். பொது மக்களை பாதிக்கும் இந்த கூடுதல் வரி திரும்ப பெற வேண்டும்.

மேலும் கடந்த ஜூன் 30ஆம் தேதி அஞ்சல் துறை இயக் குனரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பரமக்குடி போன்று 99 அஞ்சல் பிரிப்பு அலுவலகங்களை அதனோடு தொடர்புடைய விரைவு தபால்கள் கையாளும் அலுவலகத்துடன் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக தமிழகத்தில் மட்டும் தர்மபுரி, உதகமண்டலம், பொள்ளாச்சி, அரக்கோணம், கும்பகோணம், திண்டிவனம், திருவாரூர், கரூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், பரமக்குடி ஆகிய 11 அஞ்சல் பிரிப்பகங்கள் மூடப்படும் அபாய நிலையில் உள்ளது. மேற்குறிப்பிட்ட 11 அஞ் சல் பிரிக்கும் அலுவலகங்களில் பதிவு தபால் பிரிக்கும் வேலை நடக்குமா என்பது தெரியவில்லை.

பொதுமக்கள் சேவையை சீரழிக்கும் இந்த திட்டத்தை அஞ் சல் துறை இயக்குனரகம் கைவிட வேண்டும்.

மேலும் விரைவு தபால் மற்றும் பதிவு தபால் ஆகியன அந்த அந்த மாவட்டத்தின் அஞ்சல் பிரிப்பகங்களில் பிரித்து அனுப்பப்பட வேண்டும் அஞ்சல் துறையை பாதுகாத்திட வேண்டும் பொதுமக்கள் சேவையை மேம்படுத்த வேண்டும்.

எனவே அஞ்சல் நிர்வாகம் அனைத்து விரைவு மற்றும் பதிவு தபால்களை அந்தந்த மாவட்டத்தின் அஞ்சல் பிரிப்பகங்களில் பிரிக்கப்பட்டு அடுத்த நாள் பட்டுவாடா செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

அதற்காக நாம் ஜனநாயக ரீதியில் போராட்டம் உள்ளிட்ட அனைத்து இயக்கங்களையும் நடத்த வேண்டும். குறிப்பாக மக்களின் பங்களிப்புடன்... இது தேச பக்த கடமையும் கூட...

தொடர்புக்கு: **9442678721**

---

...யேறு!

...யேறு!

திருப்பூரில் ஆகஸ்ட் 6, 7, 8, 9 தேதிகளில் சங்கமிப்போம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

மாநில மாநாடு



வீ.ராஜமோகன்

# இளைஞர்களைப் பயிற்றுவித்தவர்!

**இந்திய விடுதலைப் போர் ஏராளமான இளைஞர்களை ஈர்த்தது. விடுதலை இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் எத்தகைய தியாகத்திற்கும் தயாராக இருந்தனர். 'வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ?' என்ற மகாகவி பாரதியின் வைர வரிகளின் இலக்கணமாக அந்த இளைஞர்கள் திகழ்ந்தனர்.**

அத்தகைய இளைஞர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்தான் டி.பி. என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்ட டி.பழனிசாமி. அவர் தன் இளம் வயதில் சென்னையில் புகழ் பெற்ற ஓட்டேரி பி.அண்ட்.சி. பஞ்சாலையில் தொழிலாளியாகப் பணிபுரிந்தார். அதே பஞ்சாலையில் பணியாற்றிய' பூஞ்சோலை என்ற கம்யூனிஸ்டோடு அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவர் மூலம், 'ஜனசக்தி'யைப் பெற்றுப் படிக்கத் தொடங்கினார். ஜனசக்தியில் வெளிவரும் பல்வேறு விஷயங்கள் குறித்து பூஞ்சோலையிடம் தனது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெற்று வத்தார் பழனிசாமி.

பூஞ்சோலையோடு, ஓட்டேரி பகுதியில் இருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக் குழு அலுவலகத்திற்கு பழனிசாமி சென்று வருவதுண்டு. அங்கு கட்சித் தலைவர்கள் எம்ஆர்.வெங்கட்ராமன், ஏ.எஸ்.கே, கே.முருகேசன் ஆகியோரோடு அவருக்கு தொடர்பு ஏற்பட்டது. வேலை முடிந்ததும், அவர் நேரே கட்சி அலுவலகத்திற்குச் சென்று விடுவார். சில நாட்களில் 'ஜனசக்தி' அலுவலகத்திற்கு வந்து வெளியூருக்கு அனுப்பப்படவுள்ள 'ஜனசக்தி' பிரதிகளை கட்டுக்கட்டுவது, ஒட்டுவது ஆகிய பணிகளிலும் ஈடுபடுவார்.

"வெள்ளையனே வெளியேறு" இயக்கம் அறிவிக்கப்பட்டவுடன், நாட்டின் முன்னணித் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். இதனைக் கண்டித்து பி.அண்ட்.சி. பஞ்சாலை வாயிலில் தொழிலாளர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பழனிசாமி உட்பட அனைத்துத் தொழிலாளர்களும் கைது செய்யப்பட்டு மூன்று மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டனர். சிறையிலிருந்து மீண்டபின் அனைவருக்கும் வேலை மறுக்கப்பட்டது.

பழனிசாமியின் மன உறுதி, அர்ப்பண உணர்வு, கட்சிப் பற்று ஆகியவற்றைக் கண்ட கட்சித் தலைமை 1942ல் அவரை கட்சியில் உறுப்பினராகச் சேர்த்தது. அன்று தொடங்கிய அவரது லட்சியப் பயணம் இறுதி மூச்சுள்ளவரை தொடர்ந்த்து.

1946ல் நடைபெற்ற தேர்தலில், ரயில்வேத் தொழிலாளர் தொகுதியில் போட்டியிட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரும், சௌத் இந்தியன் ரயில்வே லேபர் யூனியனின் பொதுச் செயலாளராகவும் இருந்த அனந்தன் நம்பியாரை ஆதரித்து சென்னை, பெரம்பூர் கேரேஜ் ஒர்க்ஸின் வாயிலருகில், பிரச்சாரம் நடைபெற்றது. வி.பி.சிந்தன், ரயில்வே கார்டு கே.குருமூர்த்தி, பழனிசாமி ஆகியோர் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கம்யூனிஸ்ட் எதிர்ப்புணர்வு கொண்ட சிலர் இரும்புக் குழாய்களால் மூவரையும் தாக்கினர். தலையிலிருந்து ரத்தம் கொட்டிய நிலையில் மூவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

நாடு விடுதலை பெற்ற பின்னர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு 1948ல் கல்கத்தாவில் நடைபெற்றது. நேரு அரசுக்கு எதிராக ஆயுதம் தாங்கிப் போராட முடிவெடுத்தது. அரசு கடும் அடக்கு முறையை ஏவியது. நாடு முழுவதும் கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டனர். பலர் தலைமறைவானார்கள். கட்சிக்குத் தடைவிதிக்கப்பட்டது, கட்சி அலுவலகங்கள் சீல் வைக்கப்பட்டன. சென்னை பிராட்வேயை அடுத்துள்ள டேவிட்சன் தெருவில் இருந்த மாவட்டக் குழு அலுவலகம் காவல்துறையால் பூட்டப்பட்டு, காவல் போடப்பட்டது.



**அலுவலகத்தைத் திறந்து வைத்து செயல்படுமாறு, பழனி சாமிக்கு தலைமறைவாகச் செயல்பட்டு வந்த கட்சித் தலைமையிலிருந்து, தாக்கீது வந்தது. மாற்றுச் சாவி போடும் ஒருவரை அழைத்து வந்த பழனிசாமி பூட்டை உடைத்து அலுவலகத்தைத் திறந்தார். அடுத்து வந்த தாக்கீதின் படி தலைமறைவாக தனது தோற்றத்தை மாற்றிக் கொண்டு செயல்படத் தொடங்கினார்.**

எஸ்.சி.கிருஷ்ணன், சென்னை மாவட்டக் குழுவின் பொறுப்புச் செயலாளராதச் செயல்பட்டு வந்தார். 1949ல் பொறுப்பு பழனிசாமிக்கு மாற்றப்பட்டது. அந்தப் பொறுப்பை ஏற்று திறம்படச் செயலாற்றினார். 1950ல் தடை நீக்கப்பட்டு கட்சி பகிரங்கமாகச் செயல்படத் தொடங்கியது.

1952ல் நடைபெற்ற முதல் தேர்தலில், ஜீவா வண்ணாரப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வென்றார். அவர் தொடங்கிய பீடித் தொழிலாளர் சங்கம், மிட்டாய்த் தொழிலாளர் சங்கம், இன்ஜினியரிங் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் பொறுப்பு பழனிசாமியிடம் ஒப்படைக்கப்பட்டது. வண்ணாரப்பேட்டையை மையமாகக் கொண்டு அவர் பணியாற்றினார். 1957ல் மாவட்டக் குழு முடிவின்படி, தொழிற்சங்கப் பொறுப்புக்களிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டு, கட்சியின் மாவட்ட மையத்திலிருந்து செயல்படத் தொடங்கினார்.

பாலதண்டாயும் ஆயுள் தண்டனை முடித்து சிறை மீண்ட பின், மாவட்டச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். பழனிசாமி துணைச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார். இந்திய – சீன எல்லைப் பிரச்சினை காரணமாக பல கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் பழனிசாமியும் ஒருவர். வி.பி.சிந்தன், கே.சுஜபதி, சி.கே. மாதவன், பி.ஆர்.பரமேஸ்வரன், பி.ஜி.கே.கிருஷ்ணன் ஆகியோரோடு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

1966ல் பழனிசாமி கட்சியின் மாவட்டச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார். 1985ம் ஆண்டு வரை, 19 ஆண்டுகள் மாவட்டச் செயலாளராகப் பொறுப்பேற்றுச் செயல்பட்டார்.

1967க்குப் பிறகு, தமிழகத்தில் மீண்டும் மாணவர், இளைஞர் பெருமன்றங்கள் புதுப்பிக்கப்பட்டுச் செயல்படத் தொடங்கின. கல்லூரிகள் நிறைந்த சென்னையில், பல்வேறு கல்லூரிகளிலும், மாணவர் விடுதிகளிலும் மாணவர் பெருமன்றத்தின்' கிளைகள் உருவாயின. அந்த இளம் தலைமுறையின்ரை அரவணைத்து, அவர்களில்பலரை முன்னணி செயல்வீரர்களாக உருவாக்கிய பெருமை பழனிசாமியைச் சாரும். அந்நாட்களில் தமிழ்நாட்டில் சென்னையில் மட்டுமே சட்டக்' கல்லூரி மாணவர்கள் பலரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். அவர்களில் பெரும்பாலோர் இன்று தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் சிறந்த வழக்கறிஞர்களாகப் பெயர் பெற்றுள்ளனர்.

சுட்சி அமைப்புக்களில் இளைஞர்களுக்குப் பொறுப்பளித்து, அவர்களைப் பயிற்றுவித்து, தலைமைப் பொறுப்பிற்கு உயர்த்த வேண்டும் எனகட்சி முடிவெடுத்தது. அதனை முழுமையாக நிறைவேற்றிட அனைத்து முயற்சிகளையும் பழனிசாமி மேற்கொண்டார். அவரால் பயிற்றுவிக்கப்பட்டட அன்றைய இளைஞர்கள் பலர் இன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேரப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு பல்வேறு பொறுப்புகளில் இன்றும் செயலாற்றி வருகின்றனர்.

ஒரு இளைஞனோடு பழகத் தொடங்கிய சில நாட்களிலேயே, கட்சிக்கு இவரை எவ்வாறு பயன்படுத்த முடியும், இவர் எந்த அளவிற்குப் பயன்படுவார் என்பதைத் தீர்க்கமாக அவர் கணித்து விடுவார், திறமையைக் கண்டு பாராட்டுவது, பொறுப்புக்களை அளிப்பது, அளிக்கப்பட்ட பொறுப்பை இளைஞர்கள் முறையாக நிறைவேற்றிட ஆலோசனைகள் கூறுவது, செம்மைப்படுத்துவது எனப் பல வழிகளிலும் பழனிசாமி இளைஞர்களுக்கு உதவி வந்தார். கட்சியில் பணியாற்றும் இளைஞர்கள் தங்கள் வாழ் வில் சந்திக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், பலசந்தர்ப் பங்களில் அவர் உதவியதுண்டு. நிறையப் படிப்பது, தான் படித்ததைப் பற்றி மற்றவர்களோடு விவாதிப்பது, புதிய, புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வது ஆகிய பண்புகள் அவரிடம் கடைசிவரை இருந்தன. கட்சிப் பணியில் அவருக்கேற்பட்ட அனுபவங்கள், நிகழ்ந்த தவறுகள் ஆகியவைபற்றி மனம் திறந்து கட்சியினரோடு விவாதிப்பார். 1974ல் சென்னையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டைச் சிறப்பாக நடத்துவதில் மாவட்டச் செயலாளர் என்ற முறையில் முனைப் புடன் செயலாற்றினார்.

மண் குடிசையிலே வாழ்க்கையைத் தொடங்கியவர் பழனிசாமி. தனது இறுதி மூச்சையும் அந்த மண் குடிசையிலேயே விட்டவர் அவர். வறுமை சூழ்ந்த வாழ்நிலையிலும், தான் ஏற்றுக் கொண்ட லட்சியத்திலிருந்தும், அந்த வட்சியத்தை அடைவதற்கான பணியிலிருந்தும் என்றுமே அவர் பின் வாங்கியதில்லை.

*(டி.பழனிசாமியின் நினைவு நாளை முன்னிட்டு 09.03.2015 அன்று ஜனசக்தியில் எழுதியது)*

*(07.08.2022 அன்று டி.பழனிசாமியின் 101வது பிறந்தநாள் ஆகும்.)*



- ஆர். துரைசாமி

# ஆசியாவின் சிக்காகோ புதுச்சேரி !

**1930 களில் நாடு முழுவதும் சுதந்திர வேட்கை கனலாக வீசிக் கொண்டிருந்த காலம் .புதுச்சேரி பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் செயல்பட்டு வந்தது. புதுச்சேரி ஏராளமான தேசபக்தர்களின் புகலிடமாக விளங்கியது புதுச்சேரி. விடுதலைப் போராட்ட வீரர் புதுச்சேரி ஈன்றெடுத்த தியாகப் புதல்வன் வ சுப்பையா அவர்கள் தலைமையில் தொழிலாளர்கள் தங்கள் உரிமைக்கான போராட்டங்களை முன்னெடுத்தனர் .**

தொழிற்சங்க உரிமை, குறைந்தபட்ச கூலி உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் போராட்டங்கள் நடை பெற்றது.

சவானா, ரோடியர் கப்லே பஞ்சாலைத் தொழிலாளர்கள் தத்தமது தொழிற்சாலைகளில் தொழிற்சங்கங்களை அமைக்க முனைப்பு காட்டினர் .மேற்கண்ட மூன்று பஞ்சாலைகளிலும் 7000 தொழிலாளர்கள் வேலை செய்து வந்தனர். இரக்கமற்ற, ஏதேச்சதிகார ஐரோப்பிய முதலாளிகள் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள ஒன்றுபட்டு போராடுவதென உறுதியோடு நின்றனர்.

சர்வதேச தொழிலாளர் சட்டங்கள் பிரெஞ்சிந்தியாவில் புதுச்சேரியில் அமல்படுத்த நிர்வாகம் மறுத்துவிட்டது. தொழிலாளர் உரிமைகளை வென்றெடுக்க மூன்று ஆலைகளின் மறைமுக தொழிற்சங்க அமைப்புகள் ஒன்று கூடியது .மே 1 உலக தொழிலாளர் ஒற்றுமை நாளில் தொழிலாளர்கள் மாநாடு நடத்த முடிவு செய்யப்பட்டது. மத்திய சட்டமன்ற உறுப்பினர் திரு வி வி கிரி அவர்கள் பங்கேற்கும் வகையில் மே பத்தாம் தேதி மாநாடு என அறிவிக்கப்பட்டது.

மாநாட்டை துவக்கி வைக்க வருகை தந்த வீவி கிரி அவர்களை தோழர் சுப்பையா அழைத்து வந்தார். ஆனால் பிரெஞ்சு ஆளுநர் வி கிரி அவர்களை பங்கேற்க விடாது பிரெஞ்சு எல்லையை விட்டு வெளியேற உத்தரவிட்டு வெளியேற்றினார்கள். இதை கண்டித்த வி.வி.கிரி பிரெஞ்சிந்திய அரசு, பேச்சுரிமை, தொழிற்சங்க உரிமை, திருத்தி அமைக்கப்பட்ட தொழிலாளர் சட்ட நலன்கள் கிடைக்கச் செய்யும் வகையிலும், பிரான்சின் தொழிலாளர் கூட்டமைப்பிற்கும் சர்வதேச தொழிற்சங்கத்திற்கும் முறையீடு செய்வது என்பதை வலியுறுத்தினார்.

பிரெஞ்சிந்திய அரசு தொழிலாளர் மாநாட்டிற்கு விதித்த தடை உத்தரவானது 'வர்சையில் ஒப்பந்தம், தொழிலாளர் அத்தியாய சட்ட விதிமுறையை அப்பட்டமாக மீறிய செயலாகும். அத்துடன் பிரெஞ்சு



அரசு வகுத்துள்ள சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கொள்கைகளை குழிதோண்டி புதைக்கும் கேலிக்கூத்தாகும் என கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மேலும் மனம் தளராத தோழர் சுப்பையா பிரெஞ்ச் இந்தியாவில் தடை செய்யப்பட்ட தொழிலாளர்கள் மாநாடு பிரிட்டிஷ் இந்தியாவில் தென்னார்க்காடு மாவட்ட எல்லையான, பெரம்பை, என்னும் கிராமத்திற்கு தொழிலாளர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்று சிறப்பான மாநாட்டை நடத்திக் காட்டியவர் வசுப்பையா அவர்கள்.

தொடர்ச்சியாக தொழிற்சங்க உரிமைகள், எட்டு மணி நேர வேலை, குறைந்தபட்ச கூலி தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்த கோரி 1936 ஜூலை 25, 26 தேதிகளில் சவானா (சுதேசி) பஞ் சாலை எனி (பாரத பஞ்சாலை தொழிலாளர்கள், ரோடியர் பஞ் சாலைத் தொழிலாளர்களும் ஆலை வளாகத்தில் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். பிரெஞ்சு ஆளுநர் அப்போதைய நகரமன்ற தலைவர் ஜோசப் தாவீது அவர்களும் ஆலைகளை பார்வையிட்டு தொழிலாளர்களிடம் பேசினர். தொழிற்சங்க உரிமை மறுக்கப்பட்டதால் எந்த ஒரு உடன்பாடும் ஏற்படவில்லை .ஆளுநர் தொழிலாளர் போராட்டத்தை அடக்குமுறை மூலம் ஒடுக்க சதி திட்டம் தீட்டினார்.

முதல் கட்டமாக கருங்காலிகளை ஆலைத் தொழிலாளர் மத்தியில் நுழைத்துவிட்டனர். தொழிலாளர்களின் கூட்டு வலிமையை உடைக்கவும், போராட்டத்தை திசை திருப்ப முயற்சித்தனர். இதை அறிந்த தோழர் சுப்பையா எதிர் நடவடிக்கையில் இறங்கினார். இருள் கவிழ்ந்த மாலை வேளையில் ஒரு தொழிலாளியை போல் உடை அணிந்து கையில் உணவு பொட்டலத்தை எடுத்துக் கொண்டு ஆலைக்குள் நுழைந்தார். உள்ளிருந்த தொழிலாளர்கள் சுப்பையாவை அடையாளம் கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். மரப்பலகைகளை கொண்டு தற்காலிக மேடையை அமைத்து அதன் மீது ஏறி சுப்பையா பேசினார். ஆலை நிர்வாகத்தின் சதியை முறியடித்து கோரிக்கைகளை வென்றெடுக்க ஒன்றுபட்டு போராடுவதின் அவசியத்தை வலியுறுத்தினார்.

இதை அறிந்த காவல்துறை சுப்பையா அவர்கள் மீது பொய்யான கொலை குற்றம் சாட்டி கைது ஆணை பிறப்பிக்கப்பட்டது .ஆனாலும் அவர் தலைமறைவானார். ஆளுநர் ஆலைத் தொழிலாளர்களை சுட்டு வீழ்த்த முடிவு செய்துவிட்டார்.

**1936 ஜூலை 30ஆம் நாள் காலை தொழிற்சங்க உரிமை ,எட்டு மணி நேர வேலை கேட்டு போராடிய சவானா மில்லில் இயந்திரத் துப்பாக்கியுடன் ஆயுதப்படை உள்ளே நுழைந்தது. ஆவேசமுற்ற தொழிலாளர்கள் கைக்கு கிடைத்த ஆயுதங்களை கொண்டு ஆயுதப் படை மீது வீசி எதிர்ப்பை தெரி-வித்தனர். நிராயுதபாணிகளாக நின்ற தொழிலாளர்களை இயந்திர துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினார்கள். 12 தொழிலாளர்கள் அதே இடத்தில் உயிர் பலியானார்கள் .நாடு முழுவதும் கண்டனங்கள் போராட்டங்கள் வெடித்தன. சில மாதங்களுக்கு பின்னர் ஒப்பந்தங்கள் போடப்பட்டன .**

தொடர் போராட்டத்தின் விளைவாக 01.01.1938 இல் எட்டு மணி நேர வேலை என்னும் முறைமை ஆசியாவிலேயே முதன் முறையாக அமலாக்கப்பட்டது புதுச்சேரியில் தான். புதுச்சேரி தொழிலாளர்களின் வீரம் செறிந்த போராட்டம் எட்டு மணி நேர வேலை என்ற உரிமையை ஆசிய தொழிலாளர்களுக்கு பெற்று தந்தது புதுச்சேரி தொழிலாளர்கள் குறிப்பாக பஞ்சாலைத் தொழிலாளர்கள் தலைமை தாங்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் ஏ.ஐ.டி.யு.சி. யும் ஜூலை 30 தியாகிகளுக்கு உரிய நினைவுச் சின்னம் எழுப்பி இருப்பது வரலாற்று நிகழ்வாகும்.

*ஜூலை 30 தியாகிகளின் தியாகம் வரலாற்றில் போற்றப்படும்.*

தொடர்புக்கு: 99404 80356

– ந.சேகரன்

## பிற மாநிலச்செய்திகள்–
# “திசை எட்டும்”

**காஷ்மீர்:**

**காஷ்மீரில் சுதந்திர தினத்தை காட்டி**

## கட்டாய கொடி வசூல்

தேசந்தழுவிய சுதந்திர தின கொண்டாட்டமாக, காஷ்மீரில் கடைக்கார்கள், மாணவர்கள் ஆகியோரிடமிருந்து கட்டாய கொடி வசூல் நடைபெற்று வருகிறது. காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டத்திலுள்ள கடைக்காரர் ஒவ்வொவரும், தேசீயக் கொடிக்காக ரூ.20/ டெபாசிட் தொகையாக செலுத்த வேண்டும் என்ற வாகன ஒலி பெருக்கி மூலம் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் அனந்த்நாக் முதன்மைக் கல்வி அலுவலர் பள்ளிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில், ஒவ்வொரு மாணவரும், ஒவ்வொரு ஆசிரியரும், தலா ரூ.20/ செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முதன்மைக் கல்வி அலுவலரது, இந்த சுற்றறிக்கையை சுட்டிகாட்டி, சமூக வலை தளங்களில் கடும் கண்டனங்கள் எழவே, உடனடியாக சுற்றறிக்கையை திரும்பப் பெற்றுகொள்வதாக , கல்வி அலுவலகம் தெரிவித்துள்ளது.


வாகன ஒலிபெருக்கி மூலம் செய்யப்பட்ட அறிவிப்பு என்னவெனில் “அனந்தநாக் மாவட்ட நிர்வாக உத்தரவின் பேரில், ஒவ்வொரு கடைக்காரரும், தாங்கள் வர்த்தக உரிமம் பெற்ற அலுவலகத்தில் கொடி ஒன்றிற்கு ரூ.20/ வீதம் டெபாசிட் செய்ய வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறியவர்கள், சட்டப்படியான நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். எனவே பிரச்சினை இந்த அறிவிப்பு கேட்டவுடன் ரூ.20/ஐ உடன் டெபாசிட் செய்யப்பட வேண்டும்“.

இதே போல் தெற்கு காஷ்மீர் பிஜ்பெஹாரா மாவட்டத்தில், இந்த அறிவிப்பு கேட்ட 2 தினங்களுக்குள் ரூ.20/ காப்புத் தொகையாக கடைக்காரர் ஒவ்வொருவரும் செலுத்த வேண்டுமென்று ஒலிபெருக்கி அறிவிப்பு செய்யப்பட்டது.

பட்ஹாம் மாவட்ட மாணவர்களும் ஆசிரியர்களும், ஷாத்துராவில் அமைந்துள்ள மண்டல கல்வி அலுவலகத்தில் ரூ.20/ செலுத்த வேண்டுமென பட்ஹாம் முதன்மைகல்வி அலுவலர் உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவு கடந்த வாரத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ளது..

இப்படி கட்டாய கொடி வசூல் நடப்பதை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்து கண்டித்துள்ளன. குறிப்பாக, காஷ்மீரின் முன்னாள் முதலமைச்சர் மெஹ்பூபா முப்தி, விமர்சிக்கையில், “ தேசபக்தி என்பது இயல்பாக எழ வேண்டிய உணர்வு. அதை எவர் மீதும் திணிக்க இயலாது. தற்போதைய காஷ்மீர் நிர்வாகமானது, காஷ்மீர் மக்களை, கட்டாயப்படுத்தி கொடி வாங்க வைக்க முயல்வதும் கட்டாயமாக கொடி ஏற்றப்பட வேண்டும்.என்று காஷ்மீர் மக்களை கட்டாயப்படுத்துவதிலிருந்து காஷ்மீர் ஏதோ எதிரி நாட்டு பகுதி போல் தற்போதைய்ஆட்சியாளர்கள் பாவிக்கின்றனர் என்று தனது டுவீட்டர் பதிவில் வன்மையாக சாடியுள்ளார்.

மக்களிடமிருந்து கட்டாய கொடி வசூலுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பவே, இத்தகைய கொடி வசூல் அறிவிப்பு எல்லாம், எங்கள் அனுமதி இல்லாமல் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று வேறு அனந்தநாக் மாவட்ட டெபுடி போலீஸ் கமிஷனர் சப்பைக்கட்டி சொதப்பி உள்ளார். இதுவும் சமூக வலை தளங்களில் கடும் விமர்சனத்திற்குள்ளாகி வருகின்றது.




**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25–வது தமிழ் மாநில மாநாட்டு சிறப்பிதழ் ஜனசக்தியின் சார்பில் வெளிவர உள்ளது. 1925 டிசம்பர் 26ல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் துவக்கம் முதல் 24வது மாநில மாநாடு வரை வரலாற்று விவர குறிப்புகள் படங்களுடன் சிறப்பிதழில் இடம் பெறுகின்றன. பொக்கிஷம் போல் பாதுகாத்து அவ்வப்போது படித்து பயன் பெறலாம்.**

**மேகலாயா:**

## பாஜக தலைவரது பண்ணை வீட்டில் விபசாரத் தொழில்



மேகலாயா பாஜக வின் மாநிலத் துணைத் தலைவராக இருப்பவர் பெர்னார்ட் ஆர் மார்க் என் பவர். இவரது சொகுசு பங்களா பண்ணை வீடு, மேகலாயா மேற்கு கரோஹில்ஸ் மாவட்டத்தில் உள்ளது. இந்த பண்ணை வீட்டில், ஏராளமான பெண்களை வைத்து பாலியல் தொழில் நடப்பதாக போலீசுக்குதகவல் கிடைத்துள்ளது..

அதன்பேரில், காவல்துறையினர் அந்த பண்ணை வீட்டை அதிரடி சோதனை நடத்தினர். அப்போது விடுதியின் பல அறைகளில் பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். வீட்டில் இன்னொரு பகுதியில்ஆபாச நடனம் நடந்துக் கொண்டிருந்தது.

போதைப்பொருட்களைப் பயன்படுத்திய பலர் மயங்கிய நிலையில் கிடந்துள்ளனர். போலீசைக் கண்டதும் தப்பி ஒட முயன்ற அவர்களை போலீசார் விரட்டிப் பிடித்தனர். பிடிபட்டவர்களில் 5 சிறுமிகள், 23 பெண்கள், 73 ஆண்கள் அடங்குவர். அதோடு தடைசெய்யப்பட்ட அன்னிய வகை 400 மதுப்பாட்டில்கள் , 500 ஆணுறைகள், கருத்தடை மாத்திரைகள், வெட்டுகத்தி உள்பட ஆயுதங்களை போலீசார் கைப்பற்றி உள்ளனர்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து பாஜக தலைவர் மார்க் தலைமறைவாகிவிட்டார். உடன் காவல்துறையிடம் சரண் அடையுமாறு மேகலாயா காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த பாஜக தலைவர் மீது, 2000 ஆண்டியிலிருந்து, ஆள் கடத்தல், ஆயுதக்கடத்தல், போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றங்கள் பேரில் 25 கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## விளம்பரக் கட்டணம்

| | | | | |
|---|---|---|---|---|
| அட்டை | முதல்பக்கம் | கலர் | - | 50,000 |
| அட்டை | கடைசிபக்கம் | கலர் | - | 45,000 |
| அட்டை | 2-ம் பக்கம் | கலர் | - | 40,000 |
| அட்டை | 3-ம் பக்கம் | கலர் | - | 35,000 |
| உள்பக்கம் | முழுப்பக்கம் | கலர் | - | 30,000 |
| உள்பக்கம் | அரைப்பக்கம் | கலர் | - | 15,000 |
| உள்பக்கம் | கால்பக்கம் | கலர் | - | 7,500 |
| உள்பக்கம் | க/வெள்ளை | முழுப்பக்கம் | - | 20,000 |
| உள்பக்கம் | க/வெள்ளை | அரைப்பக்கம் | - | 10,000 |
| உள்பக்கம் | க/வெள்ளை | கால் பக்கம் | - | 5,000 |

குறிப்பு: விளம்பரங்கள் ஜனசக்தி முகவரிக்கு கிடைக்க வேண்டும். வங்கியில் பணம் செலுத்தியவர்கள் அதற்கான பதிவு செலானை பிரதி எடுத்து தபாலில் அல்லது ஸ்கேன் செய்து இ–மெயிலில் அனுப்ப வேண்டும்

Janasakthi Trust
பணம் செலுத்தும் விபரம்
A/C. NO. 1083 0200 0009 999
IFC. NO. 0001083
Indian Overseas Bank
Mylapore Branch
Chennai - 600 004
புதியதோர் உலகம் செய்வோம் ஜனசக்தி மக்கள் வாரஇதழ்

புதியதோர் உலகம் செய்வோம் ஜனசக்தி மக்கள் வாரஇதழ்
விளம்பரம் அனுப்ப வேண்டிய முகவரி
பாவை பிரிண்டர்ஸ் மாடி,
16/142, ஜானி ஜான்கான் ரோடு,
ராயப்பேட்டை,
சென்னை – 600 014,
செல்: 8220468816, 9444331138
இ.மெயில். info.janasakthi@gmail.com

**மணிப்பூர்:**

## மணிப்பூர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்க இந்திய கம்யூ. மாநில மாநாடு கோரிக்கை






மணிப்பூர் மாநில இந்திய கம்யூ. கட்சியின் 23 ஆவது மாநாடு மணிப்பூர் மாநிலம் ஷாலூலாம்லைய் நகரில் ஐராவத் நினைவு அரங்கத்தில் ஜூலை 8 ,9,10 ஆகிய நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டு அரங்கங்களுக்கு, மறைந்த தோழர்கள் சரசந்த் நிங்சிங் ஷாங்லென், பரிஜத், மஷெகோல் ஆகியோரது பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன.

மாநாட்டை பல்லப் சென்குப்தா துவக்கி வைத்தார். ஏ.லாலா வரவேற்புரை நிகழ்த்தினார். மாநிலச் செயலாளர் சோடின்குமார், வரைவு அரசியல் தீர்மானத்தை பிரதிநிதிகள் விவாத்த்திற்கு முன்வைத்து உரையாற்றினார். இரண்டாம்நாள் நிகழ்ச்சியில் அமைப்பு நிலை தவரைவு தீர்மானத்தை முன்வைத்து எம்.ஜாஜ் குமார் உரையாற்றினார். 3ஆம்நாள் மாநாட்டு நிகழ்ச்சியில் தோழர்கள் சக்தி தேவி, சங்கர்ஜித், சோமர்ஜித் உள்பட பல வெகுஜன்அமைப்பு தலைவர்கள் உரையாற்றினர். மாநாட்டு இறுதியில் 75 தோழர்களடங்கிய மாநிலக்குழு தேர்ந்தெடுக்கபட்டது. 28 தோழர்கள் கொண்ட புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. புதிய மாநிலச் செயலாளராக எல்.தொய் ரென், துணைச் செயலாளர்களாக எம்ஜாய்குமீர, என்.சங் கஜித் ஆகியோரும், ஏ.லாலா பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநாட்டில் முக்கிய தீர்மானமாக, மணிப்பூர் மாநிலத்திற்கு சிறப்பு நிலை அந்தஸ்து வழங்க வேண்டுமெனக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## மதுரை புறநகர் மாவட்ட மாநாட்டில் ஜனசக்தி சந்தா நிதி ரூ.75,000

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25 வது மதுரை புறநகர் மாவட்ட மாநாடு ஜூலை 24 அன்று திருப்பரங்குன்றம் அருணகிரிநாதர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனசக்திக்கு ஆண்டு சந்தாவுக்கான தொகையினை பிரதிநிதிகளிடம் இருந்து வசூல் செய்யப்பட்டது. இம்மாநாட்டில் ரூ.75 ஆயிரத்தை, மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் பா.காளிதாஸ், மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் அவர்களிடம் வழங்கினார்.

**தாமிரபரணியில் உயிர்நீத்த**

## மாஞ்சோலை தொழிலாளர்களுக்கு மலரஞ்சலி

1999 ஆம் ஆண்டு கூலி உயர்வு கோரிக்கைக்கு மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்திய போது, காவல்துறையின் அடக்குமுறைக்கு 17 தோழர்கள் தாமிரபரணியில் மூழ்கி உயிர் தியாகம் செய்தனர்.

அவர்களுக்கு ஆண்டுதோறும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஜூலை 23ஆம் தேதி மலரஞ்சலி செலுத்தி வருகிறோம். இந்த ஆண்டும் 23.7.2022 அன்று நெல்லை மாவட்ட செயலாளர் செ.லெட்சுமணன் தலைமையில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.காசி விஸ்வநாதன், ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் ஆர். சடையப்பன், நெல்லை மண்டல செயலாளர் எம்.எஸ்.பாலகிருஷ்ணன், பாளை.ஒன்றிய செயலாளர் கே.முத்துகிருஷ்ணன், தச்சை மண்டல செயலாளர் பி.பரமசிவன், களக்காடு ஒன்றிய செயலாளர் கே.முருகன், வங்கி ஆர்.ரெங்கன், ஏ.முத்துகிருஷ்ணன், கே.எஸ். பாலு, பி.பெரும்படையார், எஸ்.ஏ.பி.பாலன், ஏ.வெடிகண்ட பெருமாள், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பி.சுரேஷ், ஆர்.ரெங்கராஜ், மகாலிங்கம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 81. ஆற்றல் சிறப்பு

**ஆர அமரவிங் காராயின் ஆற்றலல்லால்**
**என்னுண்டாம் எண்ணின் இகத்து.**

நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால், செயலுக்கு நிகர் வேறு எதுவும் இவ்வுலகில் இல்லை. (அனைத்துக்கும் முதன்மை உழைப்பே)

**சிறந்த கருத்தை யுரைப்பில் சிறப்பில**
**ஆற்றலில் உண்டு சிறப்பு.**

செம்மையான சிறந்த கருத்துக்களை மக்களுக்குச் சொல்லி விடுவதே சிறப்பாகாது. செயலினால் மட்டுமே உலகுக்குப்பயன் உண்டாகும்.

# முதியோர், விதவை உதவித் தொகையை வழங்கிடுக!

## ஆண்டிபட்டியில் ஆர்ப்பாட்டம்



ஆண்டிபட்டி பகுதியில் எந்தவித விசாரணையும் இன்றி நிறுத்தப்பட்டடுள்ள முதியோர் மற்றும் விதவை உதவி தொகையினை உடனடியாக தகுதியுள்ள அனைவருக்கும் வழங்கிட வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டிபட்டி ஒன்றியக்குழு சார்பில் ஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டதிற்கு ஒன்றிய செயலாளர் பிச்சைமணி தலைமை தாங்கினார். நகர செயலாளர் முனீஸ்வரன், ஒன்றிய துணை செயலாளர் முருகன் முன்னிலை வகித்தனர்.

மாவட்டக்குழு உறுப்பினர் பரமேஸ்வரன் நிறைவுரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் மற்றும் உதவித்தொகை நிறுத்தப்பட்ட பயனாளிகள் 100 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# டாஸ்மாக் கடையை அகற்றிடுக!

## சின்னமனூர் ஒன்றியக்குழு ஆர்ப்பாட்டம்




சின்னமனூர் நகரில் எள்ளுக்கட்டை சாலையில் அமைந்துள்ள டாஸ்மாக் கடையை அகற்றிடவும், சின்னமனூர் அரசு அரசு மருத்துவமனையை தரம் உயர்த்தி தலைக்காய அறுவை சிகிச்சை பிரிவை துவங்கிடவும், தேரடி பேருந்து நிறுத்தத்தை நீக்கும் முடிவை கைவிடவும் வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியக்குழு சார்பில் ஒன்றிய செயலாளர் இரா.கதிரப்பன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒன்றிய துணைச் செயலாளர் வெ.ஜீவபாரதி முன்னிலை வகித்தார். மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.திருமலைக்கொழுந்து ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றினார். மாநிலக்குழு உறுப்பினர் வே.பெத்தாட்சி ஆசாத் நிறைவுரையாற்றினார. மாவட்டக்குழு உறுப்பினர்கள் ப.செல்லன், இரா.தமிழ்பெருமாள், மு.காசிராஜா கண்டனவுரை ஆற்றினர். ஒன்றிய பொருளாளர் பி.எஸ்.குருசாமி, ஜெய்ஹிந்த், எஸ்.கார்த்திக், ஏ.முருகன், என்.பாலமுருகன், ஜி.சஞ்சய், எம்.விக்னேஷ், எஸ்.சந்துரு, எம்.வேல், தீன் முகமது, கே.சுருளி, என்.பவுன்ராஜா, கே.தங்கராஜ் உள்ளிட்ட தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

### கப்பலூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர்

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார்



மதுரை புறநகர் மாவட்டம் திருமங்கலம் வட்டம் கப்பலூரில் உள்ள ஊராட்சி மன்ற துணைத் தலைவர் எம்.ஜெயராமன் என்பவர் புறநகர் மாவட்டச் செயலாளர் பா.காளிதாஸ் முன்னிலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் முத்துவேல், சந்தனம் மாவட்ட குழு உறுப்பினர்கள் விஜயா, பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.




### போக்குவரத்து தொழிலாளர்களின்

# 14 வது ஊதிய ஒப்பந்தத்திற்கு தீர்வு காண வேண்டும்!

## ஏஐடியூசி மாநிலம் தழுவிய கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

100 நாட்களில் போக்குவரத்து தொழிலாளர்கள் பிரச்சனைகள் தீர்வு காணப்படும் என்று வாக்குறுதி அளித்து திமுக ஆட்சிக்கு வந்து ஓராண்டு முடிந்தும் போக்குவரத்து தொழிலாளர்களின் பிரச்சினைகள் தீர்வு காணப்படவில்லை. போக்குவரத்து தொழிலாளர்களின் ஊதிய ஒப்பந்தம், பழைய பென்ஷன் திட்டம் அமுல்படுத்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளில் உடனடியாக முதல்வர் தலையிட்டு தீர்வு காண வலியுறுத்தி ஏஐடியூசி சார்பில் மாநில தழுவிய கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். இவர்களுக்கு கடந்த 1.9.2019 அன்று 14வது ஊதிய ஒப்பந்தம்பேசி அமல்படுத்தப்பட்டிருக்க வேண்டும். கடந்த ஆட்சியில் பல கட்ட போராட்டங்களுக்கு பிறகு இடைக் கால நிவாரணம் ரூ.1000 ம் வழங்கப் பட்டது. தற்போதைய ஆட்சியில் இரண்டு கட்டமாக பேச்சுவார்த்தை நடைபெற்று, தற்போது மூன்றாவது கட்டமாக பேச்சுவார்த்தை முடிந்துள்ளது. 14வது ஊதிய ஒப்பந்தம் முடிய இன்னும் 45 தினங்களே உள்ளன. இந்நிலையில் பே மேட்ரிக்ஸ் முறையில் அரசு ஊழியர்களுக்கு இணையாக சம்பள உயர்வு ஏற்படுத்தப்பட வேண்டும், தேர்தல் கால வாக்குறுதி அடிப்படையில் பழைய பென்சன் திட்டத்தை அரசு ஏற்று நடத்த வேண்டும், கடந்த 2015 முதல் உயர்ந்துவிட்ட பழைய புதிய அகவிலைப்படி உயர்வு 82 மாத காலம் நிலுவையில் உள்ளதை உடனடியாக அறிவித்து அமல்படுத்த வேண்டும், ஓய்வு பெற்றவர்கள் பணப்பலன்கள் உடனே வழங்குவது, தற்போது காலிப் பணியிடங்களில் ஒப்பந்த முறையில் டெண்டர் விட்டிருப்பது ஏற்புடையதல்ல; ஒப்பந்தத்திற்கு மாறானது. எனவே, ஒப்பந்த முறையில் ஆள் எடுப்பது கைவிட வேண்டும், தொலைதூரம் செல்லும் பேருந்துகள் தனியார் விடுதியில் உணவருந்த நிற்க கூடாது என உத்தரவினால் சர்க்கரை நோய் உள்ளிட்ட பல்வேறு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் உணவு மற்றும் உடல் உபாதைக்காக பேருந்தை நிறுத்த சொல்லி வற்புறுத்துகின்றனர். எனவே இந்த பிரச்னைக்கு உரிய தீர்வு காண நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

**கும்பகோணம்:** கும்பகோணம் கழகத்தில் தஞ்சாவூர் நகர் கிளை ஜெமாலைபுரம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சங்க பொதுச் செயலாளர் டி.கஸ்தூரி, ஓய்வு பெற்றோர் சங்க பொதுச் செயலாளர் பி.அப்பாதுரை தலைமை வகித்தார். ஏ. ஐ.டி.யூ.சி. மாவட்ட செயலாளர் ஆர். தில்லைவனம் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றினார். போக்குவரத்து சம்மேளன துணை தலைவர் துரை.மதிவாணன், புதுக்கோட்டை கழக ஏஐடியூசி பொதுச்செயலாளர் சக்திவேல், டிஎன்சிஎஸ்சி ஏஐடியூசி மாநில பொருளாளர் தி.கோவிந்தராஜன், ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ. சேவையா உள்ளிட்டோர் விளக்க உரையாற்றினர். மின்வாரிய சம்மேளன மாநில துணை தலைவர் பொன்.தங்கவேல் ஆர்ப்பாட்டத்தை நிறைவுசெய்து பேசினார். முடிவில் பொருளாளர் எஸ். தாமரைசெல்வன் நன்றி கூறினார்.

**தருமபுரி:** ஏஐடியூசி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் சங்கம் சார்பில் பாரதிபுரம் அரசு போக்குவரத்து கழக மண்டல அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது.

ஆர்பாட்டத்திற்கு மண்டல தலை வர் எஸ்.இரவி தலைமை வகித்தார். ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி, மாவட்ட தலைவர் எம்.மாதேஸ்வரன், டிஎன்எஸ்டி மண்டல பொது செயலாளர் சி.நாகராஜன், உள்ளாட்சி பணியாளர் சங்க மாழட்டத் தலைவர் என்.மனோகரன் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

ஆர்பாட்டத்தில் நிர்வாகிகள்பெரியசாமி, வேலாயுதம், கோவிந்தசாமி, பூபேஸ்குப்தா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். டிஎன்எஸ்டிசி மண்டல பொருளாளர் நாராயணன் நன்றி கூறினார்.

# தோழர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி 80ஆம் ஆண்டு நிறைவு விழா



தோழர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி (ஆர்.கே.) அவர்கள் அகவை 80ஐ நிறைவு செய்ததை ஒட்டியும், 50ஆம் ஆண்டு திருமண நிறைவை ஒட்டியும் சென்னை உத்சவா மஹாலில் பாராட்டு விழா நடைபெற்றது.

தஞ்சைத் தரணியில் தம் தொழிற்சங்கப் பணியைத் தொடங்கியவர் ஆர்.கே., பிற்காலத்தில் மாநில அளவிலும், தேசிய அளவிலும் தொலைத் தொடர்பு ஊழியர் சங்கப் பொறுப்புகளை ஏற்று, ஒரு நம்பிக்கை நட்சத்திரமாய் திகழ்ந்தார்.

அவரின் 80ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு "ஜனசக்தியில் வெளியான தோழர் ஆர்.கே. கட்டுரைகள்" என்ற நூலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு வெளியிட, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் பெற்றுக் கொண்டார்.

இந்த பாராட்டு விழாவில் சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், அகில இந்திய பாதுகாப்புத்துறை சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஸ்ரீகுமார், தேசிய தொலைத் தொடர்பு ஊழியர் சம்மேளன தமிழ் மாநிலச் செயலாளர் கே.நடராஜன் உள்ளிட்ட ஏராளமான தொழிற்சங்க தலைவர்கள் மற்றும் பல்வேறு அமைப்பை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

தோழர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.1000 வழங்கியுள்ளார். அவரை ஜனசக்தி வாழ்த்துகிறது.

**வெளியேறு, வெளியேறு மோடி அரசே வெளியேறு! - மக்கள் விரோத மோடி அரசே வெளியேறு!**




# மாணவி ஸ்ரீமதி மரணத்திற்கு நீதி வழங்கிடுக!

## அம்பத்தூர் நகரக் கிளை ஆர்ப்பாட்டம்

கள்ளக்குறிச்சி மாணவி ஸ்ரீமதி மரணித்துள்ள மர்மச் சம்பவம் குறித்து நீதி கிடைக்க வலியுறுத்தி முறையான விசாரணை நடத்திட, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின், மத்திய சென்னை மாவட்டம், அம்பத்தூர் நகரக் கிளை சார்பாக எழுச்சிமிகு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் நகரச் செயலாளர் இரா. விஜயகுமார் துவக்கவுரையாற்றினார்.

மாவட்ட பிரதிநிதி எம்.வி.ஜெகநாதன் தலைமை வகித்தார்.

மத்திய சென்னை மாவட்டச் செயலர் ப.கருணாநிதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எஸ்.கண்ணன், மத்திய சென்னை மாவட்ட துணை செயலாளர் பி.மாரியப்பன், அம்பத்தூர் நகர கிளை முன்னாள் செயலாளர் மோ. ராமதாஸ், பு.கி.மூர்த்தி, Ex. General Secretary, HVFEU/ADIEF ஆகியோர் கண்டன உரையாற்றினர். இதில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

# குருவை நெல் சாகுபடி காப்பீடு திட்டத்தை தமிழக அரசே ஏற்று நடத்திட வேண்டும்

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

மேட்டூர் அணையின் நீர் இருப்பை கவனத்தில் கொண்டு மே 24 அன்றே டெல்டா மாவட்டங்களுக்கு தண்ணீரைத் திறந்து குருவை நெல்சாகுபடி தொடங்கிட ஏற்பாடு செய்ததற்கும்.. ஒன்றிய அரசின் நெல் விலை உயர்வு மற்றும் கொள்முதல் என்பது அக்டோபர் 1 காரீப்பருவம் துவங்கும் காலத்தில் தான் கிடைக்கும் என்று கருதிய முதல்வர் அவர்கள் ஜூன் மாதமே ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி செப்டம்பர் 1 முதல் புதிய விலையில் கொள்முதல் செய்வதற்கு அனுமதி பெற்றதற்கும் பாராட்டுகிறோம்.

ஆனால் இதற்கு முன்னால் தேவைப்படும் காப்பீடு திட்டம்.. இரசாயன உரங்கள் இல்லாதது விவசாயிகளை கவலைப்பட வைத்திருக்கிறது. காலத்தில் பயிர் செய் என்பது போல் காலம் அறிந்து உரம் இடு என்பதும் சாலப்பொருத்தமாகும். குருவை சாகுபடி தொடங்கியது முதல் நெல் பயிருக்கு தேவையான உரங்கள் உரிய அளவு கிடைப்பதில்லை. வந்த பெரும்பகுதி உரங்கள் சிறப்பு தொகுப்புத் திட்டங்களுக்கு வழங்குதல் மட்டுமே எனக் கிடங்கில் வைத்துள்ளார்கள். ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கருக்கு மட்டுமே இத்திட்டத்தில் உரம் வழங்கப்படுகிறது. எஞ்சிய நிலங்களுக்கு உரங்கள் கிடைக்காது விவசாயிகள் அவதிபடுகிறார்கள்.

தனியார் கடைகளில் கேட்டால் விவசாயிகள் கேட்காத தேவையில்லாத பிற இடுபொருட்களை வாங்கினால் தான் உரம் கொடுக்க முடியும் என்று அச்சப்படாது விற்பனையாளர்கள் அழுத்தம் கொடுக்கின்றனர். வளர்நிலை பருவத்தில் தான் உரங்கள் தேவைப்படும் பின்னே இடுவதால் விரயம் தான்.

இதுவரை காப்பீடு திட்டம் அறிவித்திடவில்லை. ஜூலை 30க்குள் தான் வரன்முறையின்படி காப்பீடு திட்டத்தில் பிரிமியம் செலுத்திட முடியும். இன்னும் 10 நாட்கள் தான் உள்ளது. கடந்தாண்டு குருவை காலத்திலும் காப்பீடு திட்டம் நடைமுறைப்படுத்தாதுபோனதால். வளிமண்டல சுழற்சி மழையினால் அறுவடையாகும் நிலையிலேயே குறுவை பயிர் அழிந்து முளைத்ததால் தமிழ்நாடு அரசே குறைந்தபட்ச நிவாரணம் வழங்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. தற்பொழுதும் தண்ணீர் முன்கூட்டி திறந்தாலும் ஜூலை இறுதிவரை பயிரிட்டு உள்ளனர்.

எனவே குருவை அறுவடை அக்டோபர் வரை நீடிக்க வாய்ப்புள்ளது. அப்போது பருவமழை தீவிரப்படும் காலம் என்பதால் பாதிப்பு ஏற்படலாம். தனியார் நிறுவனங்கள் ஒப்புதல் அளித்தாலும் 98 சதம் நிதியை இந்நிறுவனங்களுக்கு இரு அரசுகளும் வழங்க வேண்டி உள்ளது. கடந்த ஆண்டே தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியது போல..

தமிழக அரசே இத்திட்டத்தை ஏற்று நடத்திட அறிவித்திட வேண்டும்.

இதை உடனடியாக அறிவித்தாலும் இணைய வழியில் சர்வர் பிரச்சனை.. கிராம நிர்வாக அலுவலர் சான்று பெறுகிற காலம் குறுகியது போன்ற காரணங்களால் காப்புத்தொகை செலுத்தும் காலத்தை நீடிக்க வேண்டும். அவசர நடவடிக்கை எடுத்து தேவையான இரசாயன உரங்களையும் காப்பீடு திட்டத்தையும் அமலாக்கிட கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஈரோடு புத்தகத் திருவிழா ஆக. 5ல் தொடக்கம்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைக்கிறார்

ஈரோட்டில் கடந்த ஜூலை 26 அன்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போது மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் த. ஸ்டாலின் குணசேகரன் தெரிவித்ததாவது:

ஈரோட்டில் மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் கடந்த 2005ம் ஆண்டு முதல் ஈரோடு புத்தகத் திருவிழா விமரிசையாக நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு 18ம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழா வழக்கமான விமரிசையுடன் நடத்தப் படவுள்ளது. இப்புத்தகத் திருவிழா ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி மைதானத்தில், வரும் ஆகஸ்ட் 5ம் தேதி தொடங்கி 16ம் தேதி வரை மொத்தம் 12 நாட்கள் நடக்கிறது. ஆகஸ்ட் 5 ஆம் தேதியன்று மாலை 5 மணியளவில் இப்புத்தகக் கண் காட்சியை, காணொலி மூலமாக




தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் திறந்து வைத்து விழாப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

இவ்வாண்டு ஈரோடு புத்தகத் திருவிழாவில் 230க்கும் மேற்பட்ட அரங்குகள் இடம் பெறுகின்றன. இதில் புகழ்பெற்ற தமிழ் மற்றும் ஆங்கிலப் புத்தக நிறுவனங்கள் கலந்து கொள்கின்றன.

புதிய அறிவியல் கண்டுபிடிப்பாளர் ஒருவருக்கு ரூ.ஒரு லட்சம் பரிசுத் தொகை கொண்ட 'அறிவியல் மேதை ஜி.டி. நாயுடு விருது', மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி இவ்வாண்டுக்கான இவ் விருது வழங்கும் நிகழ்வு ஆகஸ்ட் 8ம் தேதி மாலை நடக்கிறது. இப்பேரவை சார்பில் இவ்விருதை, இஸ்ரோ முன்னாள் தலைவர் கே.சிவன் வழங்கவுள்ளார்.

இவ்வாண்டு சிறப்பு அம்சமாக 'பன்னாட்டு தமிழ ரங்கம்' என்ற புதிய நிகழ்வு 9ம் தேதி மாலை நடைபெறவுள்ளது. அதில் 10 நாடுகளைச் சேர்ந்த தமிழ் ஆளுமைகள் பங்கேற்கிறார்கள். மாலை நேர சிந்தனை அரங்கம் நடைபெறும். இத்துடன், உலகத் தமிழர் படைப் பரங்கம், புத்தக வெளியீட்டு அரங்கம் போன்றவை அமைக்கப்படுகின்றன. இவ்வாறு ஸ்டாலின் குணசேகரன் தெரிவித்தார்.



# ஆர்.ஏ.புரம், கோவிந்தசாமி நகர் மக்களுக்கு உதவிப் பொருட்கள்

ஆர்.ஏ.புரம், கோவிந்தசாமி நகர் குடிசைகள் இடிக்கப்பட்டதால் வாழ்வாதாரம் இழந்து நிற்கும் ஏழை, எளிய மக்களுக்கு போர்வை , பாய் , மளிகை பொருட்கள் உள்ளிட்ட 10 பொருட்கள் சென்னை ஏஐசியூஎப் அலுவலகத்தில் கிறிஸ்தவ மக்கள் களம் ஒருங்கிணைப்பாளர் பே. பெலிக்ஸ் தலைமையில் வழங்கப்பட்டது. முன்னதாக மறைந்த மனித உரிமைப்போராளி அருட்தந்தை ஸ்டேன் சுவாமிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிவாரணப் பொருட்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா. நல்லக்கண்ணு வழங்கினார். லயோலா கல்லூரி சேசுசபையின் சென்னை தலைவர் அருட்தந்தை ஜெபமாலை, என்.ஏ.பி.எம். அமைப்பின் தேசிய அமைப்பாளர் அருள், முனைவர் மேத்யூ, எஸ்.பி.ராஜ், பாலாஜி குரூஸ், பே.டாம், சாமுவேல், ஏஐசியூஎப் ஆலோசகர் சாரதி, மாணவி திவ்யா உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# 7- அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றிடுக!

## நிலக்கோட்டை தாலுகா குழு ஆர்ப்பாட்டம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலக்கோட்டை தாலுகா குழு சார்பாக சிலுக்குவார்பட்டி பேருந்து நிலையம் அருகில் 7 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து தாலுகா செயலாளர் ஏ.அல்லிமுத்து தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன் கண்டன உரையாற்றினார்.

மாவட்டக் குழு உறுப்பினர் கே.பாண்டி, தாலுகா துணைச் செயலாளர் சி.சகாயம், தாலுகாகுழு உறுப்பினர் ஏ.ஆல்பர்ட் உள்ளிட்ட ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

சிலுக்குவார் பட்டி கிராம நிர்வாக அலுவலர் சிலுக்குவார்பட்டியில் தங்கி மக்கள் பணியாற்ற வேண்டும். அரசு நலத் திட்டங்கள் மக்களுக்கு செல்லாமல் தடுக்கும் கிராம நிர்வாக அலுவலரை இடமாற்றம் செய்திட வேண்டும். கிராம நிர்வாக உதவி அலுவலரை நிரந்தரமாக நியமனம் செய்ய வேண்டும்.

மலையகவுண்டன்பட்டி வித்யகலா கல்லூரிக்கு பின்புறம், அரசு நிலத்தை ஆக்கிரமித்து விசாண்ட் தயாரிக்கும் இயற்கை வளத்தை அளிப்பதை தடுத்திட வேண்டும். சிலுக்குவார்பட்டி பஞ்சுமில் ஆலையில் உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிட வேண்டும். முசுவனூத்து பஞ்சாயத்தில் உள்ள ஐ.ஓ.பி. வெள்ளிரிக்காய் தனியார் நிறுவனம் கழிவுநீரை பொது கண்மாயில் கலப்பதை தடுத்திட வேண்டும்.

நடகோட்டை மற்றும் மல்லணப்பட்டியில் அரிய மின்சக்தி நிறுவனமே! பட்டியல் இனத்தவருக்கு வழங்கிய பஞ்சமி நிலம், அரசு புறம்போக்கு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்வதை தடுத்திட வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

# மாநில மாநாட்டு நிதி ரூ.10,000

## உடுமலைப்பேட்டை நகர்மன்றத் தலைவர் மு.மத்தீன் வழங்கினார்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு நிதியாக ரூ. 10 ஆயிரம் உடுமலைப்பேட்டை நகர மன்ற தலைவர் மு.மத்தீன் அவர்கள் உடுமலைப்பேட்டை தாலுகா கமிட்டி செயலாளர் வி.சௌந்தரராஜன் அவர்களிடம் வழங்கினார். உடன் நகரமன்ற உறுப்பினர் எம்.ஏ.கே.ஆசாத் உள்ளார்.

**வெளியேறு, வெளியேறு மோடி அரசே வெளியேறு! - ஜனநாயக விரோத மோடி அரசே வெளியேறு!**




# நாடாளுமன்ற நடவடிக்கைகள்

### மத்திய அரசுத் துறைகளில் கிட்டத்தட்ட

## கால் வாசிப் பணியிடங்கள் காலி

மத்திய அரசின் பல்வேறு துறைகளில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் (Sanctioned Strength) 40.35 லட்சம். 2021 ஆம் ஆண்டு மார்ச் 1 ஆம் தேதி நிலவரப்படி இவற்றுள் 9.79 லட்சம் காலிப் பணியிடங்கள் உள்ளதாக மக்களவையில் ஜுலை 20 அன்று (புதன்கிழமை) தெரிவிக்கப்பட்டது.

ஒன்றிய செலவினத் துறையின் ஊதிய ஆய்வுப் பிரிவின் ஆண்டறிக்கையின் அடிப்படையில் ஒன்றிய இணை அமைச்சர் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசுப் பணியிடங்களை உருவாக்குவதும் நிரப்புவதும் சம்பந்தப்பட்ட அமைச்சகம்/துறையின் பொறுப்பாகும். மேலும் இது ஒரு தொடர்ச்சியான செயலாகும். காலியிடங்கள் பணியாளர்களின் பணி ஓய்வு, பதவி உயர்வு, ராஜினாமா, இறப்பு போன்றவற்றின் காரணமாக எழுகின்றன. எனவே இவை கடந்த பல ஆண்டுகளாக நிரப்பப் படாததாலேயே காலிப் பணியிடங்கள் குவிந்துள்ளன. கோடிக்கணக்கான படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றி அலையும் நாட்டில், அரசு நிர்வாகமே பொறுப்பு தவறுவது நாட்டில் வேலை இன்மை பல்கிப் பெருகவே வழி வகுக்கும்.

மற்றொரு பதிலில், தொழிலாளர் அமைச்சகத்தின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குனரகத்தால் வெளியிடப்பட்ட மத்திய அரசு ஊழியர் தொகை கணக்கெடுப்பின் படி, பல்வேறு மத்திய அமைச்சகங்கள்/துறைகளில் உள்ள நிரந்தர ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை மார்ச் 2011 நிலவரப்படி 30,87,278 என்றும், இவர்களுள் 3,37,439 பணியாளர்கள் மட்டுமே பெண்கள் என்றும் அமைச்சர் ஜீதேந்திர சிங் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம், முன் மாதிரியாக இருக்க வேண்டிய ஒன்றிய அரசுத் துறைகளே பாலினப் பாகுபாட்டுடன் செயல் படுவது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

## மூத்த குடிமக்கள் ரயில் கட்டணச் சலுகை ரத்து தொடரும்

ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஷிவினி வைஷ்ணவ், ஜூலை 20 ஆம் தேதி மக்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில், மூத்த குடிமக்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு ரயில்வே டிக்கெட்டுகளில் சலுகைகளை மீண்டும் வழங்குவது 'விரும்பத்தக்கது' அல்ல என்று கூறி உள்ளார்.

இதன் மூலம், ஒன்றிய அரசாங்கம் மேற்கூறிய சலுகைகளை மீண்டும் வழங்குவதாக சமூக ஊடகங்களில் பரவிய வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய ஒன்றிய அரசு, பல தசாப்தங்களாக வழங்கப்பட்டு வந்த, அச் சலுகைகளைத் திரும்பப் பெற்றதால் கோடிக்கணக்கான மூத்த குடிமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், அதை மீண்டும் வழங்க ரயில்வே அமைச்சரிடம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர், பினோய் விஸ்வம், வலியுறுத்தி இருந்தார்.

உண்மையில், இந்தியாவில் மூத்த குடிமக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகக் குறைவு. 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்களுக்கு 40% தள்ளுபடியும், 58 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பெண்களுக்கு 50% தள்ளுபடியும் வழங்கப்பட்ட ரயில் கட்டண சலுகை இவற்றுள் ஒன்றாக இருந்தது.

ரயில்வே அமைச்சர் பகிர்ந்துள்ள தரவுகளின்படி, மூத்த குடிமக்களுக்கு பயணிகள் கட்டணத்தில் சலுகைகள் வழங்கப்படுவதால் 2017–18ல் ரூ.1,491 கோடியும், 2018–19ல் ரூ.1,638 கோடியும், 2019ல் ரூ.1,667 கோடியும், ரயில் துறைக்கு செலவினங்களாக அமைந்தது.

2021–22 ஆம் ஆண்டில் முன்பதிவு செய்யப்பட்ட வகுப்புகளில் பயணம் செய்த மூத்த குடிமக்களின் எண்ணிக்கை 5.55 கோடியாக இருந்தது.

எனவே, இந்தச் சலுகையை கோடிக்கணக்கான மூத்த குடிமக்கள் பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறிய முடியும்.

மேலும், 2019–20 ஆம் ஆண்டில் மட்டும், 22.62 லட்சம் மூத்த குடிமக்கள், ரயில் கட்டணச் சலுகைகளை விட்டுக் கொடுத்துள்ளனர்.

கடும் விலைவாசி ஏற்றம், மருத்துவ செலவு அதிகரிப்பு, சேமிப்பின் மீதான வட்டி விகிதம் குறைப்பு போன்றவற்றால் ஏற்கனவே அல்லலுறும், இத்தகைய பொறுப்புணர்வு மிக்க மூத்த குடிமக்களின் போக்குவரத்து செலவையும் அதிகரித்துள்ளது இந்த ரயில் கட்டண சலுகை ரத்து.

– ஆனந்த் பாசு

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

சுழலும் உலகம்

### பிரேசில் அதிபர் தேர்தல் கருத்துக் கணிப்பு:

## லூலா டி சில்வா முன்னிலை



(poderdata) கடந்த வாரம் வெளியிட்ட கருத்துக் கணிப்பு முடிவுகளின்படி பிரேசில் நாட்டு அதிபர் தேர்தலில் முன்னாள் அதிபர் லூலா டி சில்வா தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறார். 43 சதவிகித வாக்குகள் பெற்று லூலா முதலிடத்திலும், தற்போது அதிபராக உள்ள போல்சோனரோ 37 சதவிகித வாக்குகள் பெற்று இரண்டாவது இடத்திலும் வர வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இரண்டாவது சுற்று வாக்கெடுப்பு நடக்கும் பட்சத்தில் லூலா டி சில்வா 51 சதவிகித வாக்குகள் பெறக்கூடும் என்றும் மக்கள் மத்தியில் அவருக்கு செல்வாக்கு அதிகரித்து வருவதாகவும் கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

### இலங்கையைத் தொடர்ந்து

## திவாலை நோக்கி வளரும் நாடுகள்!

இலங்கையில் ஏற்பட்டது போன்ற பொருளாதார நெருக்கடி உலகின் பல வளரும் நாடுகளில் ஏற்படுவதற் கான வாய்ப்புகள் உண்டா? இந்தக் கேள்வி சர்வதேச பொருளாதார அரங்கின் மையப் பகுதியைத் தற்போது ஆக்கிரமித்து வருகிறது.

கடந்த ஆறு மாத காலத்தில் வளரும் நாடுகள் பலவற்றின் கடன் சுமை இரு மடங்காக அதிகரித்திருக்கிறது. அண்மைக் காலங்களில், சந்தைகளில் நிலவி வரும் மந்தமான வர்த்தகக் குறியீடுகள், வளரும் நாடுகளில் பொரு ளாதார நெருக்கடி ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவே உணர்த்துகின்றன.

புளூம்பர்க் இதழ் வெளியிட்டுள்ள உலக பொருளாதார அறிக்கையின்படி எல்சால்வடர், கானா, எகிப்து, துனிசியா, பாகிஸ்தான் மற்றும் பல வளரும் நாடுகளில் வரலாறு காணாத அளவில் கடன் சுமை அதிகரித்து, திவாலாகும் அளவிற்கு மாபெரும் சவால்கள் உருவாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குறைந்த வருவாய் பிரிவில் உள்ள நாடுகளிலும் கடன் நெருக்கடி என்பது எதார்த்த நிலையாகப் போகிறது என்று உலக வங்கியும் கருத்து தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் மட்டும் வளரும் நாடு களின் சந்தை பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் ஆகிய வற்றிலிருந்து நான்கு பில்லியன் அமெரிக்க டாலர் திரும்பப் பெறப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடி, திவால் ஆகியவற்றைத் தொடர்ந்து அரசியல் நிச்சயமற்ற தன்மை உண்டாகிறது. இதற்கு இலங்கை நிகழ்வுகள் சான்று கூறுவதாக உள்ளன.

## ரஷ்யா - உக்ரைன் இடையேயான உணவு தானிய ஏற்றுமதி ஒப்பந்தம்!



கடந்த பிப்ரவரி மாதம் 24ஆம் தேதி ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே இராணுவ மோதல் தொடங்கியது. இரு நாடுகளுக்கு இடையேயான இந்த மோதல் அந்த நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கு மட்டுமின்றி உலகின் பல்வேறு நாட்டில் உள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு உணவுப் பிரச்சினையை ஏற்படுத்தி உள்ளது. உலக அளவில் உணவு நெருக்கடி ஏற் படும் அபாயம் இருப்பதாக ஐ.நா.பொதுச் செயலாளர் ஆண்டனியோ குட்ரோஸ் எச்சரிக்கை விடுத்திருந்தார். இந்தச் சூழலில் டெஹ்ரான் நகரில் ரஷ்ய அதிபர் புடின் மற்றும் துருக்கி நாட்டின் அதிபர் எர்டோகன் ஆகிய இருவரும் அண்மையில் சந்தித்துப் பேசியதன் விளைவாக ரஷ்யா – உக்ரைன் – துருக்கி மற்றும் ஐ.நா. சபை உடனான ஒரு ஒப்பந்தம் கையெ ழுத்தானது. உணவு நெருக்கடியை இந்த ஒப்பந்தம் தடுக்கவல்லது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக அளவிலான கோதுமை தானிய வழங் கலில் ரஷ்யா மற்றும் உக்ரைனின் பங்களிப்பு 25 சதவிகிதமாகும். 2020ஆம் ஆண்டின் புள்ளி விபரங்களின்படி கோதுமை ஏற்றுமதியில் ரஷ்யாவின் பங்கு ஏறக்குறைய 20 சதவிகிதம், உக்ரைனின் பங்கு 8 சதவிகிதமாகும். கோதுமை இறக் குமதியைப் பொறுத்தவரையில் சுமார் 50 நாடுகள் அவற் றின் மொத்த இறக்குமதியில் 30 சதவிகித அளவிற்கு ரஷ்யா மற்றும் உக்ரைனைச் சார்ந்துள்ளன. மக்காச் சோள உற்பத்தியில் உக்ரைன் உலக அளவில் 8வது இடத்திலும், ஏற்றுமதியில் 4வது இடத்திலும் உள்ளது. இதுதவிர சூரிய காந்தி எண்ணெய், மற்றும் சூரியகாந்தி எண்ணெய் வித் துக்கள் ஏற்றுமதியில் உக்ரைன் முதலிடம் வகிக்கிறது. மேற்கண்ட விபரங்கள் உக்ரைனில் நடைபெற்று வரும் ராணுவ மோதல்கள் உலகின் பல நாடுகளில் உணவு நெருக்கடியை ஏற்படுத்தக் கூடியது என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது.

ரஷ்யா – உக்ரைன் மோதலுக்கு முன்பு ஒவ்வொரு மாத மும் ஆறு மில்லியன் அளவிற்கு உணவுப் பொருட்களை (குறிப்பாக, கருங்கடல் துறைமுகங்கள் வழியாக) ஏற்றுமதி செய்யும் திறன் கொண்ட நாடாக உக்ரைன் விளங்கியது. இராணுவ மோதல் தொடங்கிய பிறகு மரியூபோல் உள்ளிட்ட சில துறைமுகங்களை ரஷ்யா கைப்பற்றியது. அவற்றின் மீது தடைகள் விதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. ரஷ்யாவின் இந்த நடவடிக்கை காரணமாக 20 மில்லியன் டன்னுக்கும் அதிகமான உணவு தானியங்கள் ஏற்றுமதி செய்ய முடியாமல் தானியக் கிடங்குகளில் தேங்கிப் போய் உள்ளன. கடந்த ஜூன் மாதம் அறுவடை காலம் தொடங்கி விட்டதால் ஏறக்குறைய 60 மல்லியன் டன் அளவுக்கு உணவு தானியங்கள் அறுவடை செய்யப்படும். இதில், பெரும் பகுதி ஏற்றுமதி செய்யப்படும். உடனடியாக ஏற்றுமதியை தொடங்காவிட்டால் உக்ரைனில் உணவு தானிய சேமிப்புக் கிடங்குகளில் நெருக்கடியும் சிக்கல் களும் ஏற்படும்.

தற்போது ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடிக்கு ரஷ்யா வின் நடவடிக்கைகள் தான் காரணம் என்ற விமர்சனத்தை அந்நாடு மறுத்துள்ளது. துறை முகங்களைச் சுற்றியுள்ள கடல் பகுதிகளில் உக்ரைன் அரசாங்கம் மிகத் தீவிரமாக சுரங்கப் பணிகளை மேற்கொண்டதன் காரணமாகவே துறைமுகங்களில் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது என்று ரஷ்ய தரப்பு கூறுகிறது. ரஷ்யாவின் உணவு தானிய ஏற்றுமதி வீழ்ச்சி அடைவதற்கும் உணவு நெருக்கடி ஏற்படுவதற்கும் மேற்குலக நாடுகள் விதித்த பொரு ளாதார தடைகளே காரணம் என்று ரஷ்யா குற்றம் சாட்டி உள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி, ரஷ்யா – உக்ரைன் – துருக்கி மற்றும் ஐ.நா.சபையின் பிரதிநிதிகள், அதிகாரிகள் மற்றும் இராணுவத்துறையினரை உள்ளடக்கிய ஒரு கூட்டு ஒருங்கிணைப்புக் குழு இஸ்தான்புல்லின் அமைக்கப்படும். உக்ரைன் துறை முகங்கள் வழியாக செல்லும் கப்பல்களில் ஆயுதங்கள் ஏற்றிச் செல்லப்படுவதில்லை என்பதை இந்த குழு உறுதிப்படுத்தும். இந்த ஒப்பந்தம் 120 நாட்களுக்கு மட்டுமே நடைமுறையில் இருக்கும். அதன் பின்பு புதுப் பித்துக் கொள்ளப்படலாம். இந்த ஒப்பந்தத்தின்படி மாதம் ஒன்றுக்கு ஐந்து மில்லியன் டன் அளவு உணவு தானி யங்களை உக்ரைன் ஏற்றுமதி செய்து கொள்ளலாம்.



டி.எம்.மூர்த்தி




# நான்கு சட்டத் தொகுப்புகளை செயல்படுத்துதல்: தற்போதைய நிலை என்ன?

**நான்கு தொழிலாளர் சட்டத்தொகுப்புகளையும் 2022 ஜூலை 1ம் தேதி முதல் இந்தியா முழுமையும் அமலாக்கப் போகிறோம் என்று மோடி அரசு தம்பட்டம் அடித்து வந்தது. ஜூலை 1 போய்விட்டது. தமிழ்நாட்டில் தொழிலாளர் துறை அதிகாரிகள் ஏதோ அந்த சட்டத்தொகுப்புகள் செயலுக்கு வந்துவிட்டது போலவே நடந்து கொள்கிறார்கள். இதோ வருகிறது அதோ வருகிறது என்கிறார்களே, ஏன் இன்னும் செயலாக்கப் படவில்லை என்பதை இந்த கட்டுரை ஆய்வு செய்கிறது.**

அமுலாக்கியே தீருவோம், அரைப்புள்ளி, கால்புள்ளியை கூட மாற்ற மாட்டோம் என்று மோடி அரசாங்கம் தொடர்ந்து பேசியிருக்கிறது. அது வந்தால் தொழிலாளர்களுக்கு நல்லது என்று பேசுவதற்கு சில துதிபாடிகளும் கூட தொழிற்சங்கம் என்ற பெயரில் இங்கு இருந்தார்கள். ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக அரசின் ஓங்காரக் குரல் சரிந்து, கணிசமான மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாக, ஊதிய சட்ட தொகுப்பு, சமூக பாதுகாப்பு சட்டத் தொகுப்பு போன்றவற்றில் இருக்கிற சில சரத்துகள் குறித்து பேசுவதற்கு அரசு தயாராக இருப்பதாகச் சொல்லப் படுகிறது. தற்போதைய ஒன்றிய தொழிலாளர் அமைச்சரான புபேந்திர யாதவ், "புதிய விதிகள் பொருத்தமான நேரத்தில் செயல்படுத்தப்படும்" என்று கூறியிருக்கிறார். எது பொருத் தமான நேரம்? என்று எதையும் அவர் சொல்லவில்லை.

தொழிலாளர் உரிமைகளை பறிப்பதை நோக்கமாகக் கொண்டு, பழைய தொழிலாளர் சட்டங்களை மாற்றி புதிய தொகுப்புகளை கொண்டு வருவதற்கான நடவடிக்கை 2017 இல் தொடங்கிவிட்டது. ஊதிய சட்டத் தொகுப்பு நாடாளு மன்றத்தில் 2019ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. மீதி உள்ள மூன்று சட்டத் தொகுப்புகளான, தொழில் உறவு, சமூக பாதுகாப்பு, தொழிலக பாதுகாப்பு உடல்நலம் மற்றும் வேலைச் சூழல் ஆகிய சட்ட தொகுப்புகள் 2020 ஆம் ஆண்டில் நிறை வேற்றப்பட்டன.

"தொழிலாளர்" என்பது ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு ஆகியவற்றிற்கு பொதுவான துறையாகும். சட்டங்களை செயல்படுத்த வேண்டுமெனில் அதற்கான விதிகளை ஒன்றிய அரசும் வகுக்க வேண்டும்; ஒவ்வொரு மாநில அரசாங்கமும் விதிகளை உருவாக்க வேண்டும். இவை இரண்டும் நிகழாமல் சட்ட தொகுப்புகள் செயலுக்கு வர முடியாது.

மாநிலங்கள் கொரோனா நோயை கட்டுப்படுத்துவதில் பல மாதங்களைச் செலவிட்டுள்ளன. நான்கு சட்டத் தொகுப்புகளுக்குமான மாநில விதிகளை 24 மாநிலங்கள் மட்டுமே உருவாக்கி இருக்கின்றன. மேற்கு வங்காளத்தில் மாநில வரைவு விதிகள் நான்கும், இன்னும் நிலுவையில் உள்ளன. ராஜஸ்தானில் மூன்று சட்டத் தொகுப்புகளுக்கான விதிகள் நிலுவையில் இருக்கின்றன, நிறைவேற்றப்படவில்லை. ஆந்திரா, மேகாலயா, நாகாலந்து ஆகிய மாநிலங்களிலும் விதிகள் நிலுவை நிலையில் தான் உள்ளன.

பல மாநிலங்களில் சமூக பாதுகாப்பு மற்றும் தொழிலகப் பாதுகாப்பு சட்டத் தொகுப்புகளுக்கு விதிகளைச் சரியாக வகுக்க இயலவில்லை.

தமிழ்நாட்டில் சமூக பாதுகாப்பு சட்டத்தொகுப்பு தவிர்த்து மீதி மூன்று சட்டத் தொகுப்புகளுக்கான வரைவு விதிகள் வெளியிடப்பட்டன. அவற்றின் மீது முதலாளிகளும் தொழிற் சங்கங்களும் தமது கருத்துக்களை தெரிவித்து இருக்கிறார்கள். தமிழில் விதிகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை எழும்பி, போர்க்கால அடிப்படையில் தக்க வல்லுனர்களைக் கொண்டு மொழிபெயர்த்து கொண்டிருப்பதாக தமிழ்நாடு அரசு கூறியது. கொஞ்சம் நெடிய போரை நிகழ்த்துகிறார்கள் போல் இருக்கிறது! மூன்று மாதங்களுக்கு மேலாகியும் இன்னும் மொழிபெயர்ப்பு வரவில்லை. மூன்று சட்டத் தொகுப்புகளுக்கான வரைவு விதிகளும் இப்போதும் நிலுவையில் தான் உள்ளன.

30 மாநிலங்கள் ஊதிய சட்டத் தொகுப்புக்கான வரைவு விதிகளை வகுத்து இருக்கின்றனவாம். 26 மாநிலங்கள் தொழில் உறவு சட்ட தொகுப்புக்கான மாநில விதிகளை நிறைவேற்றியுள்ளன. 24 மாநிலங்கள் தொழிலக பாதுகாப்பு மற்றும் சமூக பாதுகாப்பு விதிகளை எழுதியுள்ளனர். இந்திய நாட்டில் இந்த சட்டத் தொகுப்புகளை அமலாக்க வேண்டும் எனில் முன்னர் சொல்லியவாறு எல்லா மாநிலங்களும், எல்லா சட்டத் தொகுப்புகளுக்கும் விதிகளை நிறைவேற்றி இருக்க வேண்டும்.

ஏற்கனவே வரைவு விதிகளை உருவாக்கியுள்ள மாநிலங்கள் கூட சட்டங்களைப் புரிந்து கொண்டு இந்த விதிகளை உருவாக்க முடியவில்லை என்று பகிரங்கமாக கூறி இருக்கின்றன.

கேரளா இடதுசாரி அரசின் தொழிலாளர் அமைச்சர் "இந்த சட்ட தொகுப்புகள் அனைத்தும் தொழிலாளிக்கு விரோதமானவை என்பதால் இந்த வரைவு விதிகளை மிகுந்த தயக்கத்தோடு நாங்கள் வகுத்திருக்கிறோம்" என்று சட்டப்பேரவையிலேயே பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

**இந்திய பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு தந்த அறிக்கையில் இந்த நான்கு சட்டத் தொகுப்புகளும், பழைய 29 சட்டங்களின் திரட்டு என்று சொன்னாலும், சில முக்கியமான முரண்பாடுகளைக் கொண்டிருக்கின்றன என்று கூறி இருக்கிறது. நான்கு சட்டத் தொகுப்புகள் கூட எதற்கு? ஒரே சட்ட தொகுப்பு போதுமே என்றும் கூறுகிறார்கள்.**

செயல்படுத்த வேண்டிய முறைகளிலும் கூட கருத்து வேறுபாடுகள் வந்துள்ளன. ஒரே சமயத்தில் மொத்தமாக அமல் நடத்தி விட வேண்டும் என சில மாநில அரசுகள் சொல்லும் போது, வேறு சில அரசுகள், அது தற்போதைய சூழலில் சாத்தியம் இல்லை என்றும் படிப்படியாக அமல் நடத்திப் பார்க்கலாம் என்றும் கூறுகின்றன.

ஊதிய சட்டத் தொகுப்பின்படி, நாடு முழுமைக்கும் பொருந்தக் கூடிய ஒரு தேசிய குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதும், கணக்கிடுவதற்கான முறைமைகளை உருவாக்குவதும் பெரும் சவாலான செயலாகும். எஸ்.பி.முகர்ஜி ஆணையம் என ஒன்று இதற்காக நியமிக்கப்பட்டது. அதற்குப் பல்வேறு தடைகள் வந்து கொண்டிருக்கின்றன. அதனால் தனது அறிக்கையை வரும் செப்டம்பர் மாதத்திற்குள் அதனால் கொடுக்க முடியுமா என, அந்த ஆணையத்துக்கே தெரியவில்லை.

ஏனெனில் குறைந்தபட்ச ஊதியத்தை எவ்வாறு கணக்கிடுவது என்பதற்கான வரையறைகளைப் பற்றி அந்த ஆணைய உறுப்பினர்களுக்கிடையிலே வெகுவாக முரண்பட்ட கருத்துக்கள் இருக்கின்றன. தொழிலாளர் குடும்பத்தின் தேவைக்கேற்ற உணவும், நுகர்வு செலவுகளுக்கு உரிய தொகையும், விலைவாசி உயர்வுக்கு ஏற்றவாறு ஊதியம் உயர்வதற்கான வழி வகையும் இருக்க வேண்டும் என தொழிற்சங்கங்கள் வலியுறுத்துகின்றன. இந்த நிலையில் முகர்ஜி வேறு ஒரு முறைமையை உருவாக்க வேண்டும் என விரும்புகிறார்.

மேலும் வேலை அளிப்பவர்கள், முதலாளிகள், வணிகர்கள் ஆகியோரின் கருத்தையும் இதில் அந்த ஆணையம் கேட்க வேண்டியுள்ளது. 2022 ஆம் ஆண்டு விலைவாசி புள்ளியை எடுத்துக் கொள்ளலாமா அல்லது 2011 இல் இருந்து 22 வரை உள்ள ஆண்டுகளின் சராசரியை ஆதாரமாகக் கொள்ளலாமா? என்பதிலும் கருத்து ஒற்றுமை ஏற்படவில்லை.

இதில் சிஐஐ மற்றும் எஃப்ஐசிசிஐ (ஃபிக்கி) போன்ற முதலாளி அமைப்புகள், எந்தக் குறைந்தபட்ச ஊதியத்தையும் கொடுக்க முடியாது, சமூகப் பாதுகாப்பும் தர முடியாது என்றும், அவற்றைத் தருமாறு அரசாங்கம் எங்களை நிர்பந்தப்படுத்தக் கூடாது என்றும் போர் தொடுகின்றன. "குறைந்தபட்ச ஊதியத்தை கூட கொடுக்க முடியாவிட்டால், உன் தொழிற்சாலையை மூடி விட்டுப் போ" என்று முன்னர் உச்சநீதிமன்றம் முதலாளிகளுக்கு உத்தரவிட்டது. ஆனால் இப்போது முதலாளிகள்தான் மோடி அரசுக்கு உத்தரவிட்டு கொண்டிருக்கிறார்கள்.

பழைய சட்டங்களை செயல்படுத்துவதும் நின்று போய், புதிய சட்டமும் வருமா வராதா என்ற நிலையில் தொழிலாளர் துறை மற்றும் அமலாக்கத்துறை செயலற்று கிடக்கிறது. அதிகாரிகளை கைக்குள் போட்டுக் கொண்டு தங்கள் இஷ்டம் போல தொழிலாளர்களை கொடூர சுரண்டல் செய்து வரும் தற்போதைய நிலையே நீடிக்க வேண்டும் என்று முதலாளிகள் விரும்புகிறார்கள்.

மத்திய தொழிற்சங்கங்கள் தமது நிலையில் உறுதியாக இருக்கின்றன. நான்கு சட்டத் தொகுப்புகளையும் திரும்ப பெற்று விட வேண்டும், ஏனென்றால் இந்த சட்டங்கள் செயல் படுத்தப்பட்டால் மிகப் பெரும்பாலான தொழிலாளர்கள் எந்த சட்டத்தின் பாதுகாப்பும் இல்லாமல் வெளியே தள்ளப்பட்டு விடுவார்கள் என்று அவை கூறுகின்றன. இந்தக் கோரிக் கையை வலியுறுத்தி ஏற்கனவே மூன்று பொது வேலை நிறுத்தங்கள் இந்தியாவில் நடத்தப்பட்டு விட்டன. இந்த சட்டங்களில் அடிப்படையில் ஒன்றிய அரசு எழுதும் விதிகள் பற்றிய கலந்துரையாடலில் நாங்கள் கலந்து கொள்ள மாட்டோம் என்று மத்திய தொழிற்சங்கங்கள் அறிவித்தன.

ஆர்எஸ்எஸ்ன் தொழிற்சங்கப் பிரிவான பாரதிய மஸ்தூர் சங்கம் (பிஎம்எஸ்)ம் கூட, எல்லா சட்டத் தொகுப்புகளையும் எதிர்க்காவிட்டாலும், சில சட்ட தொகுப்புகளின் சில பிரிவு களை எதிர்க்கிறது. ஒரே சமயத்தில் இந்த சட்டங்களை அமலாக்க கூடாது என்றும் சொல்கிறது.

ஏற்கனவே ஒன்றிய அரசு, மத்திய தொழிற்சங்கங்களை கூட்டிப் பேசியதாக கூறுவது அனைத்தும் பச்சை பொய் ஆகும். தொழிற்சங்கங்களிடம் அரசின் கருத்தை அமைச்சர் முன் வைப்பார்; அதன் மீது தொழிற்சங்கங்கள் என்ன பேசினாலும் அதை கருத்தில் கொள்ளவோ பரிசீலிக்கவோ அரசு தயாராக இருக்காது; ஆனால் பொதுவெளியில் ஊடகங்களிடம் நாங்கள் தொழிற்சங்கங்களுடன் பேசி விட்டோம் என்று சொல்வதற்காக, வெறும் ஒப்பனைக்காக மட்டுமே அந்தக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இப்போது மறுபடியும் முதலாளிகளிடமும், தொழிற்சங்கங் களிடமும் பேசலாம் என்றும் கருத்து முரண்பாடுகளை விவாதத்தின் மூலம் தீர்வு செய்யலாம் என்றும் அரசு கூறுவதாக தெரிகிறது. எவ்வாறாயினும் சட்டத் தொகுப்புகளை திரும்பப் பெற வேண்டும் என்று மத்திய தொழிற்சங்கங்கள் வலியுறுத்தும் போது, சில சரத்துகளை மட்டும் மாற்றி அமைப்பது என்று ஒரு பேச்சு வார்த்தைக்கு இடம் இருக்கப் போவதில்லை.

எனவே வெகு விரைவில் செயல்படுத்துவோம் என்று கூறிக் கொண்டே 2023 வரை ஒன்றிய அரசு நகர்த்திச் செல்லலாம். அல்லது அதற்கு அடுத்த 2024ம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் வரப்போவதால், எதற்காக தொழிலாளர்களிடம் விரோதம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் எனும் நிலையில், பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று கைவிடுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 'நியூ ஏஜ்' வார இதழில் கியான் பாதக் எழுதிய கட்டுரையைத் தழுவியது)












JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 30.07.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
# மாவட்ட மாநாடுகள்

## கிருஷ்ணகிரி மாவட்ட 24வது மாநாடு







இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிருஷ்ணகிரி மாவட்ட 24 வது மாநாட்டின் 2 ம் நாளான ஜூலை 26 அன்று மாவட்ட பிரதிநிதிகள் மாநாடு தேன்கனிக்கோட்டை சினிவாச மஹாலில் மாவட்ட துணை செயலாளர் சின்னசாமி தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டின் துவக்கமாக செங்கொடி ஏற்றப்பட்டது.

தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.மகேந்திரன் சிறப்புரை யாற்றினார். மாவட்ட செயலாளர் டி.இராமச்சந்திரன் வேலை அறிக்கையை தாக்கல் செய்தார். அதன் மீது விவாதம் நடைபெற்றது.

71 உறுப்பினர்கள் கொண்ட மாவட்ட குழு அமைக்கப்பட்டு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளராக மீண்டும் தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்களாக டீ.சின்னசாமி, பூதட்டிஅப்பா, மாவட்ட பொருளாளராக கண்ணு ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். 11 பெயர் கொண்ட மாவட்ட மையம் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது. இறுதியாக மாநில துணை செயலாளரும் திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.சுப்பராயன் அரசியல் விளக்க உரையாற்றினார்.







இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவாரூர் மாவட்ட மாநாட்டு பேரணியில் தலைவர்கள் கலந்து கொண்டபோது...

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்**
**மாநில மாநாடு**
**ஜனசக்தி தொலைக்காட்சி**
**யூ டியூப்பில் நேரடி ஒளிபரப்பு**

திருப்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு ஆகஸ்ட் 6, 7, 8, 9 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. இதனை ஒட்டி இம்மாநாட்டு நிகழ்ச்சிகளை நமது ஜனசக்தி தொலைக்காட்சி நேரடியாக ஒளிபரப்புகிறது. ஆகஸ்ட் 6ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா மற்றும் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கும் “சமூக நல்லிணக்கப் பாதுகாப்பு மாநில உரிமைகள் மீட்பு எழுச்சி மாநாடு” நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் ஆகஸ்ட் 9ஆம் தேதி மாலை 3.00 மணிக்கு நடைபெறும் செம்படை பேரணி மற்றும் பொதுக் கூட்டம் முழுமையாக நேரலையில் ஒளிபரப்பப்படும்.

### திருப்பூர் மாநாட்டில் நியூ செஞ்சுரி வெளியிட்ட புத்தகங்கள்
## 25% தள்ளுபடியில் விற்பனை

2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6,7,8,9 ஆகிய தேதிகளில் திருப்பூரில் நடைபெறும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது தமிழ் மாநில மாநாட்டையொட்டி நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் அனைத்து நூல்களுக்கும் சிறப்புத் தள்ளுபடியை அறிவித்துள்ளது.

மாநாடு நடைபெறும் அனைத்து நாட்களிலும் மாநாட்டு அரங்கில், பொதுக்கூட்ட, பேரணியில் விற்பனை செய்யப்படும் நியூ செஞ்சுரிபுத்தக நிறுவனத்தின் அனைத்து நூல்களுக்கும் 25 சதவீத கழிவு வழங்கப்படும் என்று நியூசெஞ்சுரி புத்தக நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



**வெளியேறு, வெளியேறு மோடி அரசே வெளியேறு!**
# சர்வாதிகார மோடி அரசே வெளியேறு!
**திருப்பூரில் ஆகஸ்ட் 6, 7, 8, 9 தேதிகளில் சங்கமிப்போம்!**
**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு!**

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan** .,
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.